உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பதினொராந் திருமுறையிலுள்ள

காரைக்காலம்மையார்

# அற்புதத் திருவந்தாதி,
# திருவிரட்டைமணிமாலை

## மூலமும்

திருமலைராயன்பட்டினம்

சைவசித்தாந்த சாகரம்

உ. அருணாசல முதலியார் அவர்கள்

இயற்றிய

## உரையும்

ஷை யாரால்

சென்னை இராயப்பேட்டை

சாது அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1935

உரிமை
செய்யப்பட்டது.

விலை அணா 5.

உ

சிவமயம்

# முகவுரை

‘ கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே.’

பூவிரிசோலையும் பொய்கையும் உடுத்த காவிரியாறு சூழ் கவின்பெறு சோணாட்டினுள் கடற்றுறையில் கப்பல்கள் நிறைந்துள்ள காரையம்பதியிலே திருவவதாரம் செய்த புனிதவதியாரென்னும் காரைக்காலம்மையார் சிவபெருமானுடைய திருவடிகளிலே திரிகரணங்களையும் ஒருவழிப்படுத்தி இடையறாப் பேரன்பு செலுத்திக்கொண்டு இல்லறத்திற்குரிய காரியங்களையும் வழுவாது நடாத்திவந்தனர்.

அப்படியாக சிவபக்தி அடியார் பக்திகளை வழுவாது நடாத்தி வருங்காலத்திலே ஒருநாள் சிவனடியார் ஒருவர் மிகப் பசித்து வந்தார். அதுபோது கறிகள் பாகஞ்செய்யத் தாமதித்தபடியால், கணவன் அனுப்பிய மாங்கனி ஓரிரண்டில் ஒன்றைப் படைத்து அன்னமிட்டு அரும்பசி அகற்றினர். அப்பெரியார் அன்னத்தோடு மாங்கனியையும் உண்டு அம்மையாரது செய்கையை மிக வியந்து போயினர்.

அவர் சென்ற பின்னர் அம்மையார் நாயகனுக்கு அமுது படைக்கும்போது எஞ்சிய மாங்கனி ஒன்றை வைத்தார். அது மிகச்சுவையாக இருந்தமையால் மற்றொரு கனியையும் அவன் கேட்க, அம்மையார் கொண்டுவருபவர்போற் சென்று கடவுளைத் தியானித்தபோது, திருவருளால் ஒரு கனி வந்தது. அக்கனியையும் படைத்தனர். அதை உண்ட கணவன், இக்கனி ஏதென்று கேட்டபோது, அம்மையார் உண்மையை உரைக்க, அவன் அதை நம்பாதவனாகி, ‘ஆனால் இன்னும் ஒரு கனி அழைப்பாய் ’ என்றனன்.

அப்போது அம்மையார் சிவத் தியானத்தோடு புறம் போந்து இறைவனை நோக்கி ' இன்னும் ஒரு கனி அளித்தீரேல் என்னுரை பொய்யாய்விடு ' மென்று பிரார்த்திக்கத், திரும்பவும் சிவபெருமானுடைய திருவருளால் மற்றொரு மாங்கனி வந்தது. அம்மையார் அம்மாங்கனியைக் கணவன கையில் கொடுக்க, அவன் அதைப் பார்த்து அதிசயித்தான். உடனே அக்கனி மறைந்தது. இவ்வற்புதங் கண்ட கணவன், அம்மையார்பால் அச்சமுற்றனன். அச்சத்தோடு அம்மையாரைத் தெய்வமென நினைத்துப் பிரிந்து வாழ்வதே தகுதி எனக் கருதி யாத்திரை சென்றான்.

அப்படியாகச் சென்ற கணவன், சில திரவியத்தோடு பாண்டிநாடு வந்து சேர்ந்து இரண்டாவது விவாகம் செய்து கொண்டான். அம்மனைவிக்குப் பிறந்த ஒரு மகவுக்குப் புனிதவதியென்று பெயரிட்டு வாழ்ந்து வருவதைக் கேள்விப்பட்ட தநதை தாயர் சுற்றத்தார் முதலியோர் அம்மையாரைக் கொண்டுபோய் அவன்பால் விடுவதே தகுதி என நினைந்து அம்மையாரைக் கொடுவந்தபோது, அவன் எதிர்சென்று வரவேற்று அச்சத்தோடு முன்நின்றான் ; அமமையாரை அவன் முன் நினைத்ததுபோல் தெய்வமெனக் கொண்டு அவர் பாதத்தில் விழுந்து வணங்கினன்.

இவன் செயல் கண்ட அம்மையார், தம் நாயகன் சுற்றத்தார்க்குச் சொல்லியதையும் கேட்டுச், 'சுவாமி நான் இவன் நிமித்தம் இந்த அழகுடைய தசைப்பொதியை வைத்திருந்தேன். இவன் கருத்து இதுவானல், இப்பாரத்தை நீக்கித் தேவரீரைச் சூழ்ந்துநின்று துதிக்கின்ற பேய்வடிவை அடியேனுக்குத் தந்தருளல்வேண்டும்' என்று பிரார்த்தித்தார். உடனே அக்கடவுளுடைய திருவருளினலே தசைகள் முழுதும் நீங்கின. அம்மையார் என்புருவத்தைப் பெற்றார்.

உடனே புனிதவதியார் சிவபெருமானுடைய திருவருளால் தமக்குக் கிடைத்த ஞானத்தைக் கொண்டு அற்புதத் திருவந்தாதியும் திருஇரட்டைமணிமாலையும் பாடியருளினர். ஈங்கிவை நிற்க.

சென்ற பிரமோதூத ஆண்டு பங்குனிச் சுவாதியில் அம்மையார் ஐக்கிய தினமாதலால், அன்று யான் காரைக்குச் சுவாமி தெரிசனம் செய்யச் சென்ற காலையில் அம்மையார் வலம் வரும்போது அடியவர்கள் அற்புதத் திருவந்தாதியும் இரட்டைமணிமாலையும் பாடிவந்தபோது சில அன்பர்களுக்குப் பொருள் சொல்லி வந்தேன். அப்போது காசுக்கடை சோமசுந்தரஞ் செட்டியார், அண்ணாமலை செட்டியார், உ. துரைசாமி முதலியார், ரெ. முத்துக்குமாரசாமிப் பிள்ளை முதலிய அன்பர்கள் அவ்வந்தாதிக்கு உரை எழுதினால் எல்லோருக்கும் படிக்க உதவியாக இருக்கும் என்று கருதி, என்னை எழுதும்படி கேட்டுக்கொண்டார்கள். அவ்வம்மையார் திருவருளைக் கொண்டும், யான் இதுகாறும் கற்ற கல்வியின் துணைகொண்டும் நான்குமாதத்தில் எழுதிமுடித்தேன். அதுமுதல் எனக்கு நேர்ந்த பல ஜோலிகளாலும் உடம்பு அசௌகரியத்தாலும் அச்சிடத் தாமதித்துவிட்டது.

இப்போது சில பேரறிவாளர்களிடத்தில் காண்பித்துச் சாற்றுக்கவிகள் வாங்கி முடித்து அச்சிட்டு வெளியிட்டேன். இவ்வுரையைக் கண்ணுறும் அன்பர்கள் இதன்பாலுள்ள குற்றங்களைத் தங்கள் தங்கள் மக்களுடைய மதலைச் சொற்களில் உள்ள குற்றங்களைப் பாராட்டாது களிக்குந் தன்மையைப் போல் இவ்வுரையையும் பார்த்துக் களிக்குமாறு வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம் :

உ. அருணாசல முதலியார்,

நாகாபரணப் பிள்ளையார்கோவில் தெரு,

திருமலைராயன் பட்டினம்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சாற்றுக் கவிகள்

திருப்பாதிரிப்புலியூர் - ஸ்ரீமத் ஞானியார் மடாலயம்
**ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்**
திருவாய்மலர்ந்தது

அற்புதவந் தாதியுரை ஆன்றோர்க்குத் தன்னுடைய
விற்பத்தித் தோன்ற விளம்பினான்—உற்ற
இரட்டை மணிமாலைக் கேற்கு முரையும்
திரட்டருணை சலச்செம் மல்.

---

வண்ணக்களஞ்சியம் - காஞ்சி நாகலிங்க முனிவர்
செய்தது

தேவ தேவன் தெய்வத் தலைவன்
மூவருங் காணா முதல்வன் முன்னாள்
அம்மையே வருக அம்மையே வருக
செம்மாப் புடைய சிவபதம் பெற்றாயா்
என்றுவாய் மலர எய்திய அம்மை
பொன்திரு வாயால் புகன்ற அற்புத
அந்தா திக்கும் அரியமா லைக்கும்
நந்தா விரிவுரை நன்கு கண்டனன்
சைவசித் தாந்தத் தனிப்பெரு நூலில்
கைவந் திட்ட காமுறும் செம்மல்
அருணா சலப்பெயர் மருவிய புலவன்
ஒருபெரும் உலகம் உவக்கத் தானே.

தருமபுர ஆதீனத்து வித்துவ சிகாமணியாகிய
**சீர்காழி - உயர்திருவாளர் - அ. முத்துத்தாண்டவராய பிள்ளை**
அவர்கள் இயற்றியது

திருவெலாம் பயக்கும் முகின்முழக் குடனே
திரைகட லோதையும் விரவி
கருவெலா மமைக்குங் கருணைநா யகனைக்
கருத்திடை யமைத்தரு ளம்மை
உருவெலாந் திகழப் பல்லுயி ரோம்பும்
உயர்பதி காரைக்கா லதன்கண்
மருவெலாம் வயங்கும் அற்புதத் தெரியல்
மாண்பொருள் அமைத்தருள் வள்ளல்.

ஒருமலை வல்லி தழுவிய பெம்மான்
உயர்கலை பலபல பயிற்றும்
திருமலை ராயன் பட்டின மதனிற்
செங்குந்தர் மரபினி லுதித்தோன்
கருமலை யாத உத்தரா பதிச்சேய்
கவின்செய் சித்தாந்த சாகரம்நற்
றருமலை யாத வன்னிகர் அருணை
சலப்பெயர் கோமகன் மாதோ.

---

சென்னைக் கிருஷ்ணம்பேட்டை - திருக்குறள் விளக்க ஆசிரியர்
**கி. குப்புச்சாமி முதலியார்**
எழுதியது

திருமலைராயன்பட்டணம் சைவசித்தாந்த சாகரம் உ. அருணைசல முதலியார் காரைக்காலம்மையார் திருவாய் மலர்ந்தருளிய அற்புதத் திருவந்தாதிக்கும் திருஇரட்டை மணிமாலைக்கும் எழுதிய உரையினைப் பார்த்தேன். அது கற்போருக்குத் தெளிவாக உள்ளது. உரையாசிரியர் மக்களுக்குப் பெரிதும் பயன்படவேணும் என்ற எண்ணத்தால் விரிக்காமலும் சுருக்கமாலும் எழுதி உள்ளனர்.

---

ஐயங்கார்குளம்
**சைவப்புராணிகர் - அ. க. பொன்னுசாமி முதலியார்**
எழுதியது

திருமலை ராயன் பட்டின மேவு
செங்குந்தர் தங்குல திலகன்
கருமலை யொழித்த வுத்தரா பதிசேய்
கருதரு ஞசலச் செம்மல்
ஒருமலை வில்லான் சைவசித் தாந்தி
யோதிடு சாத்திர மீரேழ்
பெருமலை போன்ற புராணமீ ரொன்பான்
பேசுபன் னூலுமோ ரன்னன்.

அம்மையார் இயற்றும் இரட்டை நன்மாலை
அற்புதத் திருவந் தாதிக்குஞ்
செம்மையா யுரைகண் டானவன் புலமை
செந்தமிழ்த் தெளிவு தேர்ந்ததனல்
அம்புலி யொளித்தான் அரவின் வேந்தயனு
மண்மை தீர்ந்தான் இதுமெய்யென்
றெம்பிரான் மழுவேற் றிசைத்தனன் பொதுவில்
எனின்இதன் பெருமையா ருரைப்பார்.

திருச்சிற்றம்பலம்

# அற்புதத் திருவந்தாதி உரை

திருச்சிற்றம்பலம்

## கணபதி துதி

நல்லார் தொழும்வெண்ணெய் நல்லூர்ச் சிவாலயத்துட்
பொல்லார்தாள் யாம்சூடும் போது.

## சம்பந்தர் துதி

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

## அம்மையார் துதி

தோற்ற மில்பரஞ் சோதிதன் வாய்திறந்
தாற்ற அன்புடன் அம்மையே என்னுமோர்
பேற்றை முன்பெறப் பேயுரு வெய்திய
சாற்ற ரும்புகழ்த் தாயை வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

## அவதாரிகை

இவ்வற்புதத் திருவந்தாதி பாடியருளிய அம்மையார், சிவபெருமானுடைய திருவருளை நேரே பெற்றவராதலாலும், நாமரூபமற்ற நிலையில் நின்று தெரிசித்தவராதலாலும், ஆணவாதிமலங்களையும், சாக்கிராதி அவத்தைகளையும் கடந்தவராதலாலும் இவ்வந்தாதிக்கு விநாயக வணக்கம் முதலிய கூறிற்றிலர்போலும். இவ்வந்தாதிக்கு உரைஎழுதப்புகுந்த யானும் ஏனையோரும் சாக்கிர முதலிய அவத்தைகளிலும் இராசதம் முதலிய குணங்களிலும் மனம் முதலிய அந்தக்கரணங்களிலும் ஆணவாதி மலங்களிலும் மொத்துண்டு தடுமாறுகின்ற தன்மையை உடையேமாதலால், ஒரு காரியம் துவக்குமுன்னரே அஃது முடியுமாறு விநாயக வணக்கம் முதலிய கூறற்பாலது அவசியமெனக் கோடலேயாம்.

# நூல்

திருச்சிற்றம்பலம்

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். (1)

(பதவுரை) பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் - பூமியிற் பிறந்து பேசுந் தன்மையடைந்த காலங்களிலெல்லாம்; காதல்சிறந்து நின்சேவடியே சேர்ந்தேன் - அன்பின் முதிர்ச்சியால் பிற தெய்வங்களைப் பேணாது உன்னுடைய திருவடியையே இடைவிடாது எண்ணினேன்; மைஞ்ஞான்ற நிறந்திகழும் கண்டத்து வானோர் பெருமானே - கருமை பொருந்திய நிறத்தோடு விளங்குகின்ற கண்டத்தையுடைய தேவாதி தேவனே; எஞ்ஞான்று இடர் தீர்ப்பது - எப்பொழுது கிருபைகூர்ந்து பிறவித் துன்பத்தை நீக்கி அருளுவாய்.

(கருத்துரை) (நான் பேசத் தெரிந்த காலமுதல் உன்னுடைய திருவடியையே எண்ணினேன். நீ எப்பொழுது பிறவித துன்பத்தை நீக்கி யருளுவாய்.)

சேர்தல் - இடைவிடாது நினைத்தல். திருக்குறள் கடவுள்வாழ்த்தில், 3-வது பாடலில் பரிமேலழகரும் கூறிஉள்ளார். இன்னும் சேர்ந்தேன் என்பதை அம்மையார் புராணத்தில், 5-வது பாடலில் 'வண்டல் பயில்வன' என்று சேக்கிழாரும் விளக்கிஉள்ளார். சேவடியே என்பதில் ஏகாரம் தேற்றம்.

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறிபணியா ரேனும்—சுடருருவில்
என்பறாக் கோலத் தெரியாடும் எம்மானார்க்
கன்பறா தென்னெஞ் சவர்க்கு. (2)

(ப - ரை) எமக்கு இடர் களையாரேனும் இரங்காரேனும் - எம் பிறவிப் பிணியை நீக்காரேனும் இரங்காமல் போனாலும்; படருநெறி பணியாரேனும் - தம்மை வணங்குவதற்கு மார்க்கத்தைக் காட்டா

விட்டாலும் ; சுடருருவில் என்பறாக் கோலத்து - காந்தி பொருந்திய அவருடைய திருமேனியில் என்புமாலை நீங்காத கோலத்தையுடைய; எரியாடும் எம்மானார்க்கு - அக்கினியோடு மகா சம்மார காலத்தில் திருத்தம் செய்யப்பட்ட எமது தலைவனுக்கு; அன்பு அறாது - வணங்குகின்ற ஆசை நீங்காது ; அவர்க்கு என்னெஞ்சு - அப்பெருமானுக்கு என் மனம் கோயிலாய் இருத்தலால்.

(க - ரை) எனக்கு அவர் ஒருவகையிலும் அனுக்கிரகம் செய்யா விட்டாலும் நான் அவர்மீது அன்பு செலுத்துவதை விடமாட்டேன்.

உம்மைகள் எண்ணின்கண் வந்தன. மனம் கோயிலாய் இருத்தல் என்பதற்குப் 'பனைக்கை மும்மத வேழம் உரித்தவன் நினைப்ப வர் மனங்கோயிலாக் கொண்டவன்' என்றார் திருநாவுக்கரசு சுவாமிகளும்.

அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தல்லால்—பவர்ச்சடைமேல்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்
காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள். (3)

(ப - ரை) அவர்க்கே யெழுபிறப்பும் ஆளாவோம் - அப்பரமே சுவரனுக்கே எழு சென்மங்கள் தோறும் அடிமைப்படுவோம் ; என்றும் அவர்க்கே நாம் அன்பாவதல்லால் - எப்பொழுதும் அவருக்கே அன்போடு தொண்டு செய்வதே யல்லாமல் ; பவர்ச்சடைமேல் - நெருக்கமாகிய சடையினிடத்து; பாகாப்போழ்சூடும் அவர்க்கல்லால் - பகுக்க முடியாத மூன்றாம் பிறைச்சந்திரனை அணிந்த கடவுளை அல்லாமல் ; எஞ்சான்றும் - எப்பொழுதும் ; மற்றொருவர்க்கு - வேறொரு தெய்வத்திற்கு ; ஆகாப்போம் - அடிமையாகப் போகமாட்டோம் ; ஆள் - எம்மை நீரே அடிமையாகக் கொண்டருளுவாய்.

(க - ரை) நான் வேறொரு தெய்வத்தை வணங்கவும் அடிமைப் படவும் மாட்டேன். நீயே அடிமை கொண்டு அருள் செய்வாய்.

அவர்க்கே என்ற ஏகாரம் இரண்டும் தேற்றத்தின்கண் வந்தது. பிறர்க்கு அடிமையாக மாட்டோம் என்பதை 'மீளாஅடிமை யுமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்.

ஆளானோ மல்ல லறிய முறையிட்டாற்
கேளாத தென்கொலோ கேளாமை—நீளாகஞ்

செம்மையா னாகித் திருமிடறு மற்றொன்றாம்
எம்மைஆட் கொண்ட இறை. (4)

(ப - ரை) நீளாகம் செம்மையானாகி - நீண்ட திருமேனி சிவந்த நிறத்தை உடையதாகி ; திருமிடறு ஒன்றாம் - அழகிய கண்டம் தேவர்களுக்காகக் கருமை நிறம் அடைந்தும் ; எம்மை ஆட்கொண்ட இறை - எம்போன்ற அடியவர்களை அடிமை கொண்டருளிய தலைவனுக்கு ; கேளாமை - பிறதெய்வங்களுக்கு அடிமை ஆகாது ; ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டால் - என்றும் உமக்கே அடிமைப்பட்ட யாங்கள் எங்களுடைய துன்பத்தை அறியுமாறு சொல்லிக் கொண்டால் ; கேளாதது என் கொல் - செவிகொடுத்துக் கேளாது இருப்பது என்ன ஆச்சரியம் !

(க - ரை) (உமக்கு என்றும் அடிமைப்பட்ட யாங்கள் குறைகளைத் தெரிவித்தால் பராமுகமாய் இருப்பது என்ன அதிசயம்.)

மற்று - ஓ - அசைகள். செம்மையான் என்றபடியால் மிடறு ஒன்றாம் என்றது கருமைப் பண்பை உணர்த்தி நின்றது.மற்றொன்று என்று கொண்டு வேறு நிறம் எனக் கொள்வாரும் உண்டு.

இறைவனே எவ்வுயிருந் தோற்றுவிப்பான் தோற்றி
இறைவனே யீண்டிறக்கஞ் செய்வான்—இறைவனே
எந்தா யெனவிரங்கும் எங்கண்மேல் வெந்துயரம்
வந்தா லதுமாற்று வான். (5)

(ப - ரை) இறைவனே எவ்வுயிரும் தோற்றுவிப்பான் - முதல்வனே சகல சீவராசிகளையும் உண்டாக்குவான் ; தோற்றி இறைவனே ஈண்டு இறக்கச் செய்வான் - முற்பட்டுத் தலைவனே இவ்விடத்து சங்கரிப்பான் ; இறைவனே எந்தாய் என இரங்கும் எங்கள் மேல் - தலைவனே எமது தந்தையே என்று இரங்குகின்ற எங்களுக்கு; வெந்துயரம் வந்தால் அது மாற்றுவான் - சகிக்கமுடியாத துன்பங்கள் வந்தாலும் அவைகளையும் நீக்கி அருளுவான்.

(க - ரை) (முதல்வன் சிருட்டி திதி சங்காரம் என முத்தொழில் செய்வதோடு, பிறவித்துன்பத்தையும் நீக்குவான்.)

இறைவனே என்பவைகளில் ஏகாரம் மூன்றும் தேற்றம். இறக்கச் செய்வான் என்பது இறக்கஞ் செய்வான் என மெலிததல் விகாரம்

பெற்றது. முத்தொழில் செய்வன் என்பதற்குத் 'தோற்றுவித் தளித் துப் பின்னுந் துடைத்தருள்தொழில்கள் மூன்றும் போற்றவே யுடைய னீசன்' என்றார் சிவஞான சித்தியார் முதல் சூத்திரம் 32-வது பாடலில்.

வானத்தா னென்பாரு மென்கமற் றும்பர்கோன்
தானத்தா னென்பாருந் தாமென்க—ஞானத்தான்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்யொளிசேர் கண்டத்தான்
என்னெஞ்சத் தான்என்பன் யான். (6)

(ப - ரை) ஞானத்தான்-ஞானமயமே உருவாகியவன்; முன்னஞ் சத்தால் இருண்ட மொய்யொளி சேர்கண்டத்தான் - அமுதம் கடைந்த காலத்தில் உண்டாகிய நஞ்சை உண்டு கறுத்து நெருங்கின ஒளிபொருந்திய கண்டத்தை உடைய இறைவனை; வானத்தான் என் பாரும் எனக - தேவரில் ஒருவனென்று சொல்லுகின்றவர்கள் சொல் லுக; உம்பர்கோன் தானததான் என்பாரும் தாமென்க - தேவேந் திரன் என்று சொல்லுகின்றவர்கள் சொல்லுக; யான் - நான்; என்நெஞ்சத்தான் என்பன் என்னுடைய மனத்தில்நிறைந்து இருக் கின்றவன் என்று சொல்லுவேன்.

(க - ரை) (நீலகண்டத்தை உடைய பரமேசுவரனை அவரவர்கள் அனுபவித்தபடி சொன்னாலும் நான் என் உள்ளததில் நிறைந்தவ னென்று சொல்லுவேன்.) 6

உம்பர்கோன் தானம் இடஆகு பெயராய் தேவேந்திரனை உணர் த்தியது. மற்று - அசை. உள்ளத்தில் இருத்தல் என்பதற்கு 'அகர உயிர்போலறிவாகி எங்கும் நிகரிலிறை நிற்கும் நிறைந்து.'—திரு வருட்பயன் பதிமுதுநிலை 1 வது பாடல். அகாமுதல என்றதும், இந் தக் கருத்தே.

யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்—யானேஅக்
கைம்மா வுரிபோர்த்த கண்ணுதலான் வெண்ணீற்ற
அம்மானுக் காளாயி னேன். (7)

(ப - ரை) யான் அக் கைமா உரிபோர்த்த கண்ணுதலான் - நான் அந்தத் துதிக்கையை உடைய யானைத் தோலைப் போர்தத நெற்றிக்

கண்ணையுடையவனுக்கும்; வெண்ணீற்ற அம்மானுக்கு - திருமேனியில் விபூதி பொருந்திய எமது தலைவனுக்கும்; ஆளாயினேன் - அடிமைப்பட்டவளாயினேன்; (ஆதலால்) யான் தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம் - நான் தவத்தைச் செய்தவளாவேன் என்னுடைய மனம் நல்ல மனம்; யான் பிறப்பறுப்பான் எண்ணினேன் - நான் பிறவியை அறுக்கும் பொருட்டு நினைத்தேன்.

(க - ரை) நான் நெற்றிக் கண்ணையுடைய பரமேசுவரனுக்கு ஆளாகி நிஷ்காமிய புண்ணியத்தைச்செய்து பிறவியை நீக்கிக்கொள்ள நினைத்தேன்.

யானே - என்பதில் முதல் ஏகாரம் பிரிநிலைப் பொருளது. ஏகாரம் மூன்றும் தேற்றம். பான் என்பது பொருட்டு பொருளில் வந்தது. யானை உரித்தவன் என்பதற்கு, 'வருங்குன்ற மொன்றுரித் தோன் றில்லை யம்பலவன்' என்று திருக்கோவையார், 15-வது பாடலில் மாணிக்கவாசகசுவாமிகளும் கூறி உள்ளார். 'பனைக்கை மும்மத வேழ முரித்தவன்' என்றார் வாகீசரும்.

ஆயினே ளுள்வானுக் கன்றே பெறற்கரிய
னுயினே னஃதன்றே யாமாறு—தூய
புனற்கங்கை யேற்றுனோர் பொன்வரையே போல்வான்
அனற்கங்கை யேற்று னருள். (8)

(ப - ரை) ஆள்வானுக்கு அன்றே பெறற்கு அரியனுயினேன் - அடிமை கொள்ளுகின்ற கடவுளுக்கு அப்பொழுதே பெறுதற்கு அரிய அருமையை அடைந்தேன்; அஃது அன்றே யாமாறும் - அதை அடைந்ததற்குப் பொருத்தமாகவும்; தூயபுனல் கங்கை ஏற்றான் - பரிசுத்தமாகிய கங்கையைச் சடையிலே தரித்தவனும்; ஓர் பொன் வரையே போல்வான் - ஒருமேரு மலையைப் போன்ற பொன்னிறம் வாய்ந்த திருமேனியை உடையவனும்; அனற்கு அங்கை ஏற்றான் - மழுவை அழகிய கையில் சுமந்தவனுமாகிய தலைவனுடைய; அருள் ஆயினேன் - திருவருளை அடைந்தேன்.

(க - ரை) அன்பர்கள் வேண்டியவாறே கொடுக்கின்ற தலைவனிடத்தில் பெறுதற்கரிய திருவருளைப் பெற்றேன்.

அனலே என்பது, அனற்கு என இரண்டாம் வேற்றுமை நான்காம் வேற்றுமையாக வந்தது. யார்க்கும் தலைவனாகிய ஆண்டவனுக்கே அடிமைப்பட்டேனாதலால் அதுவே அவன் திருவருளை அடைந்ததாகும் எனக் கொள்வதும் ஒன்று.

அருளே யுலகெலா மாள்விப்ப தீச
னருளே பிறப்பறுப்ப தானால்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு. (9)

(ப - ரை) ஈசன் அருளே உலகெலாம் ஆள்விப்பது - முதல்வன் திருவருட்சத்தியே உலகத்திலுள்ள சீவராசிகளை அடிமை கொண்டு இரட்சிப்பது; ஈசன் அருளே பிறப்பறுப்பது ஆனால் - அத்திருவருட் சத்தியே பிறவியை நீக்குமேயானால்; அருளாலே - அத்திருவருட் சத்தி துணையாலே; மெய்ப்பொருளை நோக்கும் விதி யுடையேன் - உண்மைப் பொருளை அறியும் அறிவை உடையேன்; எஞ்ஞான்றும் - எப்பொழுதும்; எனக்கு எப்பொருளும் ஆவது - எனக்கு எந்தப் பொருளும் கைகூடும.

(க - ரை) (திருவருட்சத்தி துணையாக உண்மை ஞானத்தை உணருகிற எனக்கு மோக்ஷவீடு கைகூடும்.)

நடுநிலை தீபமாக, ஈசன் என்பது இரண்டிடத்திலும் கூட்டப்பட்டது. அருளும் சிவமும் ஒன்றென்பதைச் சிவஞானசித்தியார் ஐந்தாஞ் சூத்திரம் 9-வது பாடல், 'அருளது சத்தியாகும் அரன் தனக் கருளையின்றித் தெருள்சிவ மில்லைஅந்தச் சிவமின்றிச் சத்தியில்லை' என்றது. 'சத்தியாய் சிவமாய்' என்றார் திருவிளையாடற்காரர்.

எனக்கினிய எம்மானை யீசனை யானென்று
மனக்கினிய வைப்பாக வைத்தேன்—எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே யின்புற்றேன்
உண்டே யெனக்கரிய தொன்று. (10)

(ப - ரை) எனக்கு இனிய எம்மானை - எனக்கு இனிமையாகிய தலைவனை; ஈசனை - முழுமுதற் கடவுளை; யான் என்றும் - நான் எப்பொழுதும்; மனக்கு இனிய வைப்பாக வைத்தேன் - மனசுக்கு இனி

மையான பொக்கிஷமாக வைத்தேன்; எனக்கு அவனைப் பிரானாகக் கொண்டேன் - எனக்கு அக்கடவுளைத் தலைவனாகவும் கொண்டருளினேன்; கொள்வதுமே இன்புற்றேன் - தலைவனாகக் கொண்ட உடனே சந்தோஷித்தேன் ; எனக்கு அரியது ஒன்று உண்டே - எனக்கு அருமையான பொருள்கள் ஒன்று இருக்கிறதோ ?

(க - ரை) (எப்பொருட்கும் இறைவனை என்னுள்ளத்தில் அழியாத செல்வமாகப் பெற்றபொழுதே உலகத்தில் அருமையான பொருள்கள் ஒன்றும் எனக்கு இல்லை.)

உண்டே என்பதில் ஏகாரம் எதிர்மறை. பிரானாகக் கொண்டேன் என்பதற்குத் திருக்களிற்றுப்படியார், 64-வது பாடலில், 'சிவன் முதலே யன்றி முதலில்லை' என்றார்.

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் னுள்ளத்தி னுள்ளடைத்தேன்—ஒன்றேகாண்
கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளா மது. (11)

(ப - ரை) ஒன்றே நினைந்திருந்தேன் - தியானம் செய்கின்ற தொண்டு ஒன்றையே நினைத்து இருந்தேன் ; ஒன்றே துணிந்தொழிந்தேன் - இல்லறத்தில் உண்டாகிய இன்பம் அழியும் தன்மை உடையது எனத்தெரிந்து அஃதொன்றை நீக்கினேன; ஒன்றே என்னுள்ளத்தின் உள்ளடைத்தேன் - பரம் பொருள் ஒன்றையே மனத்தில் நீங்காது இருத்தினேன்; கங்கையான் திங்கட்கதிர் முடியான் - கங்கையையும் சந்திரனையும்ஒளியை உடைய சடையில் தரித்தவனும்; பொங்கு ஒளிசேர் அம் கையாற்கு - அதிகரித்த ஒளிபொருந்திய அழகிய காகங்களை உடைய சிவபெருமானுக்கு ; ஆளாம் அது ஒன்று - அடிமையாகின்ற தன்மையை கொள்வது ஒன்று ; (காண்) - தெரிந்து கொள்ளுங்கள்.

(க - ரை) (நான் குடும்பபாரம் துன்பமென நீக்கி முதல்வனுக்கு அடிமைப்படுவதே இன்பமெனக் கொண்டேன் ; நீங்களும் கண்டு கொள்ளுங்கள்.)

காண் என்பது முன்னிலைச் சொல். ஒழிந்தேன் என்பது மெலித்தல் விகாரம்.

அதுவே பிரானுமா றாட்கொள்ளு மாறும்
அதுவே இனியறிந்தோ மாஞு—லதுவே
பனிக்கணங்கு கண்ணியா ரொண்ணுதலின் மேலோர்
தனிக்கணங்கு வைத்தார் தகவு. (12)

(ப - ரை) அதுவே பிரானுமாறும் - அப் பரம்பொருளே தலைவனாக இருக்கின்ற தன்மையும்; ஆட்கொள்ளுமாறும் அதுவே - அடிமை கொண்டருள் செய்கின்றதும் அப்பொருளே; என்று இனி அறிந்தோமாஞல் - அத்தன்மையைத் தெரிந்துகொள்ளுவோமேயாஞல்; பனிக்கணம் கண்ணியார் ஒள் நுதலின்மேல் - சீதளமிகுந்த புட்பமாலையை அணிந்தகடவுள் ஒளிபொருந்திய நெற்றியின்மேல்; ஓர்தனிக்கண் அங்கு வைத்தார் தகவு அதுவே - ஒரு ஒப்பற்ற விழியை அந்நெற்றியில் வைத்த கடவுளுடைய தகுதியையும் தெரிந்துகொள்ளலாம்.

(க - ரை) பரம் பொருளே எப்பொருட்கும் தலைவனாக இருக்கிறதையும் ஆட்கொள்ளுகிறதையும் தெரிந்தால் நெற்றியில் கண் வந்த தன்மையைத் தெரிந்து கொள்ளலாம்.

கணம் - கணங்கு என வந்தது. கு - பண்புப் பெயர் விகுதி. பிராஞு மாறும் என்பதில், மகரமெய் விரித்தல் விகாரம். பிற தெய்வங்களுக்கு அமையாத நெற்றிக்கண்ணை உடையாராதலால் அவரே முழுமுதற் கடவுளரென்றும், அவரே உயிர்களை ஆட்கொள்ளும் ஆண்டவரென்றும் கொள்வதும் ஒன்று.

தகவுடையார் தாமுளரேற் றூ ரதலஞ் சாரப்
புகவிடுதல் பொல்லாது கண்டீர்—மிகவடர
வூர்ந்திடுமா நாக மொருநாண் மலைமகளைச்
சார்ந்திடுமே லேபாவந் தான். (13)

(ப - ரை) தகவுடையார் தாமுளரேல் - பெரும் தகுதியை உடையவராக அக்கடவுள் இருப்பாரேயாஞல்; தார் - தாம் அணிந்த பாம்பாகிய மாலையை; அதலம் சார புகவிடுதல் - பாதாள உலகத்தில் செல்லும்படியாகச் செய்தல்; பொல்லாது கண்டீர்-முடியாதகாரியமா பார்த்தீர்களா; மிக அடர ஊர்ந்திடு மாநாகம் - மேலும் மேலும் கொல்வ

தற்குச் செல்லுகின்ற பெரிய பாம்பானது; ஒருநாள் மலைமகளைச் சார்ந்திடும் - ஒரு காலத்தில் உமாதேவியாரை அடையும்; மேலே - சரீரத்தின் மேலே; பாவந்தான் - மேனையும் மலை அரசனும் செய்த பாவங்களோ அறிந்திலேன்.

(க - ரை) இறைவன் சகலவல்லமையும் உடையவரானால் சரீரத்தில் இருக்கிற பாம்பை உமாதேவியாரைக் கடிக்க வொட்டாமல் அப்பாம்பை இருக்கும் இடத்திற்குப் போகும்படி செய்யமாட்டாரா?

இது நிந்தாஸ்துதி. கண்டீர் என்பது முன்னிலைச் சொல். ஊர்ந்திடுமா நாகம் என்பதற்குச் சித்தத் தொகைத் திருக்குறுந் தொகை 26-வதுபாடலில் 'அரவமார்த்து அனலாடிய அண்ணலை' என்றார் திருநாவுக்கரசரும்.

தானே தனிநெஞ்சந் தன்னையுயக் கொள்வான்
தானே பெருஞ்சேமஞ் செய்யுமாற்—றானேயோர்
பூணாகத் தாற்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழு
நீணாகத் தானை நினைந்து. (14)

(ப - ரை) ஓர்பூண் ஆகத்தாற் பொலிந்து பொங்கழல் சேர் நஞ்சுமிழும்-ஓர் ஆபரணமாகத் திருமேனியில் பிரகாசித்து மிகுந்த அழற் சுவாலை வீசுகின்ற நஞ்சைக்கக்கும்; நீள்நாகத்தானை நினைந்து - நீண்ட பாம்பை அணிந்த பரமேசுவரனை நினைத்து; தானே தனி நெஞ்சம் தன்னையுயக் கொள்வான் - ஆன்மாவாகிய தான் ஒப்பற்ற மனத்தைக் கடத்தேறும் பொருட்டு; தானே பெரும் சேமம் செய்யுமால் - அவ்வான்மாவே அம்மனத்தைப் பெருங்காவல் படுத்தும்.

(க - ரை) (ஆன்மாவானது கடவுளை வழிபட்டு மனதைத் தீய வழியில் பொறியின் வழிபோகா வண்ணம் தடுக்கும்.)

செய்யுமால் என்பது செய்யும் என்னும் பகுதிப் பொருள் விகுதி. தான் ஏ அசைகள்.

நினைந்திருந்து வானவர்க ணீண்மலராற் பாதம்
புனைந்து மடிபொருந்த மாட்டார்—நினைந்திருந்து
மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே என்கின்றேற்
கென்செய்வான் கொல்லோ இனி. (15)

(ப - ரை) வானவர்கள் நினைந்து இருந்து - தேவர்கள் சிவபூசை செய்ய எண்ணி உட்கார்ந்து ; நீள்மலரால் பாதம் புனைந்தும் அடி பொருந்தமாட்டார் - ஒளிபொருந்திய புட்பங்களால் பாதத்திற் சாத்தியும் திருவடிகளை அடையமாட்டார்கள்; நினைந்திருந்து - கடவுளையே நினைத்து தியானத்திலிருந்து ; மின்செய்வான் செஞ்சடையாய் வேதியனே என்கின்றேற்கு - ஒளி பொருந்திய சடையை உடையவனே பிராமணனே எனத் துதிக்கின்ற எனக்கு ; இனி - இனிமேல்; என்செய்வான் கொல்லோ - என்ன அனுக்கிரகஞ் செய்வானோ?

(க - ரை) தேவர்கள் மனம் ஒரு வழிப்பட்டு தியானம் செய்ய மாட்டார்கள். விதிப்படி தியானிக்கின்ற எனக்கு என்ன அருள் செய்வாயோ?

இனியோநா முய்ந்தோ மிறைவன்றாள் சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம் நெஞ்சே—யினியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப் பிறவிக்
கனைக்கடலை நீந்தினோங் காண். (16)

(ப - ரை) நெஞ்சே - மனமே ; இறைவன்தாள் சேர்ந்தோம் - தலைவனது திருவடியை அடைந்தோம் ; இனியே நாம் உய்ந்தோம் - இனிமேல்தான் கடைத்தேறினோம் ; இனியோர் இடரில்லோம் - இனி ஒருவிதமான துன்பமும் இல்லை ; ஓர் வினைக்கடலை ஆக்குவிக்கும் - ஒரு வகையாகிய சஞ்சிதம் ஆகாமியம் பிராரத்துவம் என்கின்ற வினைப்பெருக்கத்தை உண்டுபண்ணுகிற ; மீளாப் பிறவிக்கனை கடலை நீந்தினோம் - நீங்காத பிறவியாகிய ஒலிக்கின்ற சமுத்திரத்தைக் கடந்தோம் ; இனி காண் - இனிமேல் தெரிந்துகொள்வாயாக.

(க - ரை) மனமே இறைவனது திருவடியை அடைந்தோம் ; ஒருவித துன்பமும் இல்லை; பிறவித் துன்பத்தையையும் நீக்கிகொண்டோம்.

இனியோ என்பதில் ஏகாரம் ஓகாரமாய் வந்தது.

காண்பார்க்குங் காணலாந் தன்மையனே கைதொழுது
காண்பார்க்குங் காணலாங் காதலாற்—காண்பார்க்குச்

சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே தொல்லுலகுக்
காதியாய் நின்ற அரன். (17)

(ப - ரை) காண்பார்க்குங் காணலாம் தன்மையனே - சாதாரணமாய்த்தெரிசிக்கின்றவர்களுங்காணுகின்ற தன்மையை உடையவனும்; கைதொழுது காண்பார்க்கும் காணலாம் - சரியை கிரியையாளர்கள் பூசாந்தத்தில் கைகுவித்து வணங்கும்போது தெரிசிக்கின்றவனும்; காதலால் காண்பார்க்குச் சோதியாய் சிந்தையுளே தோன்றும் - அன்போடு யோகப் பழக்கத்தால் பார்க்கின்றவர்களுக்குச் சோதிமயமாய் உள்ளத்தில் தோற்றுகின்றவனும்; தொல் உலகுக்கு ஆதியாய் நின்ற அரன் - பழமையாகிய உலகத்துக்கு முதன்மையாய் நின்ற சம்மாரகர்த்தாவாகும்.

(க - ரை) (எந்தவித மார்க்கத்தாலும் தெரிசிக்கின்ற ஆன்மாக்களுக்கு அருள்செய்வது முதல்வன் ஒருவனே.)

ஏகாரங்கள் இரண்டும் தேற்றம்.

எவரெவர் எப்படி துதித்தாலும் அருள்செய்பவர் ஒருவரே என்பதற்குச் சிவஞானசித்தியார், 2-ம் சூத்திரம் 25-வது பாடலில், "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர்" என்றார்.

அரனென்கோ நான்முக னென்கோ அரிய
பரனென்கோ பண்புணர மாட்டேன்—முரணழியத்
தானவனைப் பாதத் தனிவிரலாற் செற்றானை
யானவனை எம்மானை யின்று. (18)

(ப - ரை) முரணழிய - வலிமை கெடும்படியாக; தானவனைப் பாதத் தனிவிரலால் செற்றானை - அக்கயிலாய மலையைப் பெயர்த்த இராவணனைத திருவடியின் ஓர் விரலால் ஊன்றிப் பலத்தைக் கெடுத்தருளியவனை ; யான் - நான் ; அவனை எம்மானை - அப்பரம் பொருளாகிய எமது தலைவனை ; இன்று - இப்பொழுது ; அரிய அரனென்கோ - எவருக்கும் மேலாகிய உருத்திரன் என்று சொல்லுவேனோ; நான்முகனென்கோ - பிரமதேவனென்று சொல்லுவேனோ; பரன் என்கோ - விட்டுணுவென்று சொல்லுவேனோ ; பண்பு உணர மாட்டேன் - இவவித்தியாசங்கள் ஒன்றும் தெரியவில்லை.

**(க - ரை)** (யான் அனுபவிக்கின்ற அனுபவ நிலையில் பரம் பொருள் சோதியாய்த் தோற்றுவதே தவிர எனக்குத் தெய்வ வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை.)

ஓகாரங்கள் மூன்றும் வினாப்பொருளில் வந்தன.

இன்று நமக்கெளிதே மாலுக்கு நான்முகற்கு
மன்று மளப்பரிய னானை—யென்றுமோர்
மூவா மதியானை மூவே ழுலகங்க
ளாவானைக் காணு மறிவு. (19)

**(ப - ரை)** மாலுக்கும் நான்முகற்கும் - விட்டுணுவுக்கும் பிரம தேவனுக்கும்; அன்றும் அளப்பரியன் ஆனானை-ஆணவ மலபந்தத்தால் அக்காலததில் தேடிய ஞான்று அருமையாக இருந்தவனும்; என்றும் ஓர் மூவா மதியானை - எப்பொழுதும் ஒரு கெடாத சந்திரனைச் சடையில் தரித்தவனும்; மூவேழுலகங்கள் ஆவானை - இருபத்தொரு உலகங்களிலும் மற்ற உலகங்களிலும் நிறைந்திருக்கின்ற கடவுளையும்; காணும் அறிவு - அநுபவ நிலையில் காண்கின்ற அறிவு; இன்று நமக்கு எளிதே - இருவினை யொப்பு மலபரிபாகம் சத்தினி பாதத்தை அடைந்த இப்பொழுது எனக்கு அப்பரம் பொருளைக் காணுதல் எளிதாக இருக்கிறது.

**(க - ரை)** (பிரமாதி தேவர்களுக்கும் அகந்தையால் அறிய முடியாத பரம்பொருள் அஃதை விட்டு அருள் சத்தி பதிந்த எனக்கு எளிதாக இருக்கின்றது.)

அகந்தையால் அறிய முடியாது என்பதற்கு உண்மை விளக்கம் 35-வது பாடலில் 'ஓங்காரமே' என்றதில், 'ஆங்காரமற்று றறிவர்' என்றார்.

அறிவானுந் தானே அறிவிப்பான் தானே
யறிவா யறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளுந் தானே விரிசுடர்பா ராகாச
மப்பொருளுந் தானே யவன். (20)

**(ப - ரை)** அறிவானுந் தானே - சர்வான்மாக்களையும் வேறாகி இருந்து அறிபவனும் அவனே; அறிவிப்பான் தானே - உடல் உயிர்

போல ஆன்மாவிற் கலந்து அறிவிக்கின்றவனும் அம்முதல்வனே ; அறிவாய் அறிகின்ருன் தானே-உயிருக்கு உயிராய் உடனுகி இருந்து அறிபவனும் அவ்விறைவனே; அறிகின்ற மெய்ப்பொருளும் தானே-அன்பர்கள் சமாதியிலிருந்து அறிகிற உண்மைப் பொருளும் அதுவே; விரிசுடர் பார் ஆகாசம் அப்பொருளும் தானே அவன் - அக்கினி பூமி ஆகாசம் முதலிய பஞ்ச பூதங்களிலும் நிறைந்து இருக்கின்றவனும் அம்முதல்வனே.

(க - ரை) சர்வான்மாக்களிலும் சகல பொருள்களிலும் வேருகியும் கலந்தும் உயிருக்குயிராய்க் கலந்து உடனுகியும் நிற்கின்றவன் அப்பரம்பொருளே.

ஏகாரங்கள் 5-ம் தேற்றப் பொருளில் வந்தன.

அவனே யிருசுடர்தீ யாகாச மாவான்
அவனே புவிபுனல்காற் ருவான்—அவனே
இயமான னுய்அட்ட மூர்த்தியுமாய் ஞான
மயனுகி நின்ருனும் வந்து. (21)

(ப - ரை) இருசுடர்தீ ஆகாசம் ஆவான் அவனே - சூரியன் சந்திரன் அக்கினி ஆகாசம் ஆக இருக்கிறவன் அவனே ; புவிபுனல் காற்று ஆவான் அவனே-பூமி நீர்காற்ருக இருக்கின்றவனும் அவனே; இயமானனுய் அட்டமூர்த்தியுமாய் - ஆன்மாவில் இருந்து அட்ட மூர்த்தியாக இருப்பவனும் ; ஞானமயனுகி வந்து நின்ருனும அவனே-தியானத்தில் ஞானசொரூபமாய் வந்து நிற்கின்றவனும் அம்முதல்வனே.

(க - ரை) இயங்கும் பொருளிலும் இயங்காப் பொருளிலும் நிறைந்து நிற்கின்றவனும் யோகமுடிவில் சோதி ஒளியாய் தோன்றுகின்றவனும் அம்முதல்வனே.

ஏகாரம் மூன்றும் தேற்றம்.

வந்திதனைக் கொள்வதே யொக்குமிவ் வாளரவின்
சிந்தை யதுதெரிந்து காண்மினோ—வந்தோர்
இராநீ ரிருண்டனைய கண்டத்தீ ரெங்கள்
பிரானீருஞ் சென்னிப் பிறை. (22)

(ப - ரை) ஓர்இரா - ஓர்இரவு; வந்து - எழுந்தருளி வந்து; நீர் - தேவரீர்; இருண்டனைய - இருளை ஒதத ; கண்டத்தீர் - கண்டத்தை உடையீர்; எங்கள் பிரான் நீர் - எங்கள் தலைவனும் நீரே; இவ்வாளா வின் - இந்த ஒளிதங்கிய பாம்பினது ; சிந்தையது - எண்ணமானது; வந்து - உம்மிடத்தே வந்து ; உம் சென்னிபிறை இதனை - தேவரீர் சிரத்திலுள்ள பிறைச்சந்திரனாகிய இதனை ; கொள்வதே ஒக்கும் - விழுங்குவதே ஒக்கும் ; நீர் தெரிந்து காண்மினோ - நீரே தெரிந்து பாரும்.

(க - ரை) பெருமானே தேவரீர் சிரத்திலுள்ள அரவானது அதனோடு உள்ள பிறைச்சந்திரனை விழுங்குவதற்கு வந்து இருப்பதைப் போல் காணப்படுகின்றது, அதனை ஆராய்ந்து பார்ப்பீராக.

ஓ - அசை. ஏ - தேற்றம். உம் சென்னிப்பிறை என்பதற்குத் திருக்கோவையார் 211-வது பாடலில் 'பனிச்சந்திரனொடு பாய்புனல் சூடும்பரன்' என்றார் மாணிக்கவாசக சுவாமிகளும்.

பிறையும் புனலு மனலரவுஞ் சூடும்
இறைவ ரெமக்கிரங்கா ரேனுங்—கறைமிடற்ற
எந்தையார்க் காட்பட்டே மென்றென் றிருக்குமே
எந்தையா வுள்ள மிது. (23)

(ப - ரை) பிறையும் புனலும் அனல் அரவும் சூடும் - சந்திரனையும் கங்கையையும் அக்கினியையும் சர்ப்பத்தையும் தரித்தருளிய; இறைவர் எமக்கு இரங்காரேனும் - தலைவர் எனக்கு இரங்காவிட்டாலும்; கறைமிடற்ற எந்தையார்க்கு - விடக்கறை பொருந்திய கண்டத்தையுடைய எமது தலைவனுக்கு ; ஆட்பட்டே மென்றென்றிருக்குமே-அடிமைப்பட்டு விட்டோமென்று மனம் நினைத்து இருக்குமே ; எந்தையாய் உள்ளம் இது - எமது தந்தையே உம்முடைய திருவுளச் சம்மதம் எப்படியோ அறியேன்.

(க - ரை) இறைவன் இரங்காவிட்டாலும் மனம் உமக்கு ஆட்பட்டோமென்று நினைத்து இருக்குமே உமது திருவுள்ளம் எப்படியோ அறியேன்.

அனலும் என்பது அனல் என உம்மை தொக்கியது. மற்ற உம்மைகள் எண் உம்மை. ஏகாரம் தேற்றம். பிறையும் புனலும்

கூடும் என்பதற்கு மேல்காட்டிய கோவையார் 211-வது பாடல் இதற்கு உதாரணமாகும்.

இதுவன்றே ஈசன் திருவுருவ மாமா
றிதுவன்றே என்றனக்கோர் சேமம்—இதுவன்றே
மின்னுஞ் சுடருருவாய் மீண்டாயென் சிந்தனைக்கே
யின்னுஞ் சுழல்கின்ற திங்கு. (24)

(ப - ரை) இதுவன்றே ஈசன் திருவுருவமாமாறு - நிட்டையில் தோன்றுகின்ற இதுதான் கடவுளுடைய வடிவம் ஆகின்ற தன்மை; இது அன்றே எனக்கோர் சேமம் - இது அல்லவா எனக்கு ஒரு காவல்; இதுவன்றே மின்னுஞ் சுடர் உருவாய் மீண்டாய் - அத் தியானத்தில் தோன்றிய இதுவே ஒளியையுடைய சோதி வடிவாய்த் திரும்பியது; என் சிந்தனைக்கே இன்னும் இங்கு சுழல்கின்றது - என் உள்ளத்தினிடத்து இடைவிடாது இவ்விடத்துச் சோதி ரூபமாய்த் தோன்றிக்கொண்டே யிருக்கிறது.

(க-ரை) (என் சிந்தையில் தோன்றுகிற இதுதான் பரம்பொருள்; இதுதான் என் மனத்தைவிட்டு நீங்காமல் இருக்கிறதும்.)

ஏகாரங்கள் மூன்றும் தேற்றம். என் சிந்தனைக்கே சுழல்கின்றது என்பதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் 5-ம் திருமுறையில் தனித் திருக்குறுந்தொகை 9-வது பாடலில் 'நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்' என்றார்.

இங்கிருந்து சொல்லுவதெ னெம்பெருமா னெண்ணாதே
எங்கும் பலிதிரியும் எத்திறமும்—பொங்கிரவில்
ஈமவனத் தாடுவதும் என்னுக்கென் றாராய்வோம்
நாமவனைக் காணலுற்ற ஞான்று. (25)

(ப - ரை) நெஞ்சே இங்கிருந்து சொல்லுவதென் - மனமே இவ்வுலகத்தில் மாயை வசமாய் இருந்து சொல்லுவதில் என்ன பிரயோசனம்; எம்பெருமான் - எமது தலைவன்; எண்ணாதே - யாதொன்றையும் நினைத்துப் பார்க்காமல்; எங்கும் பலிதிரியும் எத்திறமும் - எவ்விடத்திலும் பிக்ஷை எடுப்பதோடு எல்லா விளையாட்டுஞ் செய்வார்; பொங்கிரவில் ஈமவனத்து ஆடுவதும் என்னுக்கு என்று ஆராய்வோம்-

இருட் செறிந்த இராக்காலத்தில் சர்வசூனிய மயானத்தில் நிருத்தனம் செய்வது என்ன நினைத்து செய்தீர் என்று கேட்போம்; நாமவனைக் காணலுற்ற ஞான்று - நாம் அக்கடவுளைத தியானத்தில் கண்டபோது.

(கு - ரை) (நான் அக்கடவுளைத் தியானத்தில் காணும்போது ஒன்றையும் ஆலோசியாமல் பிக்ஷை எடுப்பதும் மயானததில் ஆடுவதும் பெண்களிடத்தில் விளையாடுவதும் என்ன கருதிச் செய்தீர் என்று கேட்பேன்.)

நெஞ்சே என்பது தோன்றா எழுவாய். எங்கும் பலிதிரியும் என்பதற்குப் பிக்ஷாடன நவமணிமாலை, 9-வது பாடலில் 'முழங்குந் துடியொடு பிச்சை யென்றே முதுகுன்றர் வர' என்றார் சிவப்பிரகாச சுவாமிகளும்.

ஞான்ற குழற்சடைகள் பொன்வரைபோல் மின்னுவன
போன்ற கறைமிடற்றான் பொன்மார்பின்—ஞான்றெங்கு
மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே
அக்கயலே வைத்த அரவு. (26)

(ப - ரை) ஞான்ற குழல் சடைகள் பொன்வரைபோல் மின்னுவன - தொங்குதலோடு சுருட்டி முடிக்கின்ற சடைகள் பொன்னாலாகிய மூங்கிலைப்போல் மின்னிக் கொண்டிருக்கின்றன; போன்ற கறை மிடற்றான் - (நீல நிறம்)போன்ற விடக்கறை பொருந்திய கண்டத்தையுடையவன்; பொன் மார்பில் - அழகிய மார்பினிடத்து; ஞான்றெங்கும் மிக்கயலே தோன்ற விளங்கி மிளிருமே - தொங்குகின்ற பக்கங்களிலெல்லாம் தெரியும்படியாக பிரகாசித்து விளங்குமே; அக்கு அயலே வைதத அரவு - என்பு மாலைக்குப் பக்கத்தில் தொங்குகின்ற சர்ப்பாபரணம்.

(கு - ரை) (மின்னுகின்ற சடையையும் நீலகண்டத்தையுமுடைய சிவபெருமான் மார்பில் என்பு மாலைக்குப் பக்கத்தில் ஒளிபொருந்திய சர்ப்பாபரணம் விளங்குகிறது. நீலநிறம் வருவிக்கப்பட்டது.)

அரவமொன் றாகத்து நீநயந்து பூணேல்
பரவித் தொழுதிரந்தோம் பன்னாள்—முரணழிய,

வொன்றாதார் மூவெயிலும் ஓரம்பால் எய்தானே
பொன்னாரம் மற்றொன்று பூண். (27)

(ப-ரை) ஆகத்து அரவம் ஒன்றுநீ நயந்து பூணேல்-திருமேனியில் சர்ப்பாபரணத்தை நீ சந்தோஷித்து அணியாதே; பரவித் தொழுது இரந்தோம் பல் நாள்-அதிக வணக்கத்தோடு இரந்து கேட்டுக்கொண்டோம் வெகுகாலமாக; முரண்அழிய - வலிமை கெடும்படியாக; ஒன்றாதார் மூவெயிலும் - பகைத்த திரிபுரத்து அசுரர்களுடைய மூன்று கோட்டைகளையும்; ஓர் அம்பால் எய்தானே - சிரித்து எரித்தருளியவனே; பொன்னாரம் ஒன்றுபூண் - பொன்னாலாகிய ஆபரணம் ஒன்றை மட்டும் அணிவாயாக.

(க - ரை) (அம்பு இல்லாமல் திரிபுரத்தை எரித்தருளிய தலைவனே! சர்ப்பாபரணத்தைப் பூணாது பொன்னாபரணத்தை அணியும்படியாகப் பல நாளாய் வேண்டிக்கொள்கிறோம்.)

மற்று - அசை. அம்பு இல்லாமல் திரிபுரம் எரித்தான் என்பதற்குத திருவாசகம் திருவுந்தியார் 2-வது பாடலில், 'ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில் - ஓரம்பே முப்புரம் உந்தீபற - ஒன்றும் பெருமிகை உந்தீபற' என்றார் மாணிக்கவாசகரும். சிரித்து எரித்தார் என்பதாயிற்று.

பூணாக வொன்று புனைந்தொன்று பொங்கதளின்
நாணாக மேல்மிளிர நன்கமைத்துக்—கோள்நாகம்
பொன்முடிமேற் சூடுவதும் எல்லாம் பொறியிலியேற்
கென்முடிவா தாக இவர். (28)

(ப - ரை) பூணாக ஒன்று புனைந்து - ஆபரணமாக ஒரு பாம்பையணிந்து; ஒன்று பொங்கு அதளில் நாணாக மேல்மிளிர நன்கமைத்து - ஒரு பாம்பை யானைத் தோலின்மேல் கயிறாக விளங்கக் கட்டியும்; கோள் நாகம் பொன்முடிமேல் சூடுவதும் - விடக்குற்றம் பொருந்திய ஒரு பாம்பை அழகிய சிரசில் அணிந்துகொள்வதும்; எல்லாம் - எல்லா விடயமும்; பொறிஇலி ஏற்கு - ஞானக்கண் இல்லாத எனக்கு; என்முடிவதாக இவர் - பாம்பை அணியவேண்டாமென்று வேண்டிக்கொண்ட எனக்கு என்ன முடிவு சொல்வதாக நினைத்து இருக்கின்றார்.

(க - ரை) பாம்பை விலக்கிப் பொன் ஆபரணம் அணிந்து கொள்ளவேண்டுமென்று இரந்து கேட்டுக்கொண்ட எனக்கு என்ன முடிவு சொல்லவேண்டுமென்று நினைத்து இருக்கிறாரோ தெரிய வில்லை.

யானைத் தோலை உரித்துப் போர்த்தினார் என்பதற்குத் திருநாவுக்கரசர் திருஅங்கமாலை 5-வது பாடலில், 'மத யானையுரி போர்த்துப் - பேய்வாழ் காட்டகத் தாடும்பிரான்' என்று கூறி யுள்ளார்.

இவரைப் பொருளுணர மாட்டாதா ரெல்லாம்
இவரை யிகழ்வதே கண்டீர்—இவர்தமது
பூக்கோல மேனிப் பொடிபூசி என்பணிந்த
பேய்க்கோலங் கண்டார் பிறர். (29)

(ப - ரை) இவரைப் பொருள் உணரமாட்டாதா ரெல்லாம் - இவருடைய குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ளாத பிறசமயத்தாரெல்லாம்; இவரை இகழ்வதே கண்டீர் - இவரை நிந்திப்பார்களே தவிர வேறல்ல; இவர் தமது - இவருடைய; பூக்கோல மேனிப் பொடிபூசி - மிகுந்த அழகையுடைய திருமேனியில் விபூதியை உத்தூளனம் செய்துகொண்டு; என்பணிந்த பேய்க்கோலங் கண்டார் பிறர் - என்பை மாலையாகத் தரித்துப் பேயின் வடிவத்தைக் கொண்ட சிவபெருமானைத் தெரிசித்த பிறசமயத்தவர்கள் தோத்திரம் செய்வார்கள்.

(க - ரை) சிவபெருமானுடைய உண்மையை அறியாதவர்கள் நிந்திப்பார்கள்; அறிந்தவர்கள் கொண்டாடுவார்கள்.

இகழ்வது என்றமையால் புகழ்வதும் உடன் கூட்டி உரைக்கப்பட்டது.

பிறரறிய லாகாப் பெருமை யருந்தாமே
பிறரறியும் பேருணர்வுந் தாமே—பிறருடைய
என்பே அணிந்திரவிற் றீயாடும் எம்மானார்
வன்பேயுந் தாமும் மகிழ்ந்து. (30)

(ப - ரை) நெஞ்சே - மனமே; பிறரறியலாகாப் பெருமை யருந்தாமே - மாயை வசப்பட்ட ஆன்மாக்களுக்கு அறியமுடியாத பெரு

மையை உடைய கடவுளும் அவரே; பிறர் அறியும் பேருணர்வும் தாமே - அப்பியாசத்தால் மாயையை விலக்கியவர்களுக்கு அறிவுக் கறிவாய்த் தோன்றுகின்றவரும் அவரே;பிறருடைய என்பே அணிந்து இரவில் தீயாடும் எம்மானுர் - பிரம விட்டுணுக்களுடைய எலும்பை யணிந்து இராக்காலத்தில் சர்வ சூனிய மயானத்தில் ஆடுகின்ற நமது தலைவரானவர்; வன்பேயும் தாமு மகிழ்ந்து - வல்லமையுடைய பேய்க் கூட்டங்களோடு தாமும் சந்தோஷித்து ஆடுவார்.

(க - ரை) (ஆணவ மலத்தோடு காண்பவருக்குக் காணமுடியாத வரும் அஃது நீங்கியவருக்கு அறிவுக்கறிவாய்த் தோன்றுகின்றவரும் அக்கடவுளே.)

ஏகாரம் இரண்டும் தேற்றம். மகிழ்ந்து என்னும் எச்சம் ஆடு வார் என்னும் வினைகொண்டு முடிந்தது. நெஞ்சே என்பது வருவிக் கப்பட்டது.

மகிழ்திமட நெஞ்சே மானுடரில் நீயுந்
திகழ்திபெருஞ் சேமஞ் சேர்ந்தாய்—இகழாதே
யாரென்பே யேனும் அணிந்துழல்வார்க் காட்பட்ட
பேரன்பே இன்னும் பெருக்கு. (31)

(ப - ரை) மடநெஞ்சே - அறியாமையையுடைய மனமே; மானு டரில் நீயும் மகிழ்தி - மனிதர்களோடு நீயும் சந்தோழிக்கக் கடவாய்; பெருஞ்சேமம் சேர்த்து திகழ்தி - தியானத்தில் தோன்றுகிற சோதியை உள்ளததில் பெரியநிதியாகக் காவல்செய்து விளங்குவாய்; இகழாதே - குற்றமெனத் தள்ளாதே; யாரென்பேயேனும் - எவரு டைய எலும்பாய் இருந்த போதிலும்; அணிந்து உழல்வார்க்கு - மாலை யாக அணிந்து கொண்டு திரிகின்றவருக்கு; ஆட்பட்ட - அடிமைப் பட்ட; பேரன்பே இன்னும் பெருக்கு - விட்டு நீங்காத பெரிய அன் பையே மேலும் மேலும் அதிகரிக்கச் செய்வாய்.

(க - ரை) (சமாதியில் தோன்றுகிற சோதியைப் பெரிய திரவிய மாக வைத்துக் கொண்டு இடைவிடாது அன்போடு தியானஞ் செய் வாய் மனமே.)

சேர்த்து என்பது சேர்ந்து என மெலித்தல் விகாரம் பெற்றது. ஆய் - விகுதி. அசை.

பெருகொளிய செஞ்சடைமேற் பிள்ளைப் பிறையின்
ஒருகதிரே போந்தொழுகிற் றொக்குந்—தெரியின்
முதற்கண்ணான் முப்புரங்கள் அன்றெரித்தான் மூவா
நுதற்கண்ணான் தன்மார்பின் நூல். (32)

(ப - ரை) பெருகொளிய செஞ்சடைமேல் - அதிகரித்த ஒளியை யுடைய சிவந்த சடையினிடத்து; பிள்ளைப் பிறையின் ஒரு கதிரே போந்து ஒழுகிற்றொக்கும் - இளமையாகிய சந்திரனில் இருந்து ஒரு கிரணமானது கழுத்தின் வழியாய் மார்பை நோக்கிச் சென்று ஒழுகினதை ஒத்து விளங்குகிறது; தெரியின் - பார்க்குமிடத்து; முதல்-சிவபெருமான்; கண்ணால் - நெற்றிக்கண்ணால்; முப்புரங்கள் அன்று எரித்தான் - திரிபுரத்தையும் அக்காலத்தில் எரித்தருளியவனும்; மூவாநுதற் கண்ணான் தன் மார்பின் நூல் - கெடாத நெற்றிக் கண்ணையுடைய பரமசிவனது மார்பில் விளங்கும் பூணூலானது.

(க - ரை) சிவபெருமானுடைய மார்பில் விளங்கும் பூணூலானது சடையில் இருக்கின்ற சந்திரனுடைய கிரணம் ஒழுகி வந்தாற் போல இருக்கிறது.)

நூலறிவு பேசி நுழைவிலா தார்திரிக
நீல மணிமிடற்றா னீர்மையே—மேலுலந்த
தெக்கோலத் தெவ்வுருவா யெத்தவங்கள் செய்வார்க்கு
மக்கோலத் தவ்வுருவே யாம். (33)

(ப - ரை) நீலமணி மிடற்றான் நீர்மை - நீலஇரத்தினம்போன்ற கண்டத்தையுடைய சிவபெருமானது குணங்களை; நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக - சாஸ்திரத்தின் வழியாய்ப் பேசிக் காலம் போக்குகிறவர்கள் போக்கித் திரியட்டும்; மேல் உலந்த - முன்னுள்ள சஞ்சித வினையைக் கெடுத்தவர்கள்; எக்கோலத்து எவ்வுருவாய் - எவ்வித அலங்காரத்தோடு எந்த வடிவங்களையேனும் நினைத்து; எத்தவங்கள் செய்வார்க்கும் - யாகம் முதலிய எவ்விதப் புண்ணியங்களைச் செய்கின்றவர்களுக்கும்; அக்கோலத்து அவ்வுருவேயாம் - அவ்வித அலங்காரத்தோடு அவர்கள் நினைத்த வடிவமாக வந்து அனுக்கிரகம் செய்வார்.

(க - ரை) (சாஸ்திரம் கற்று மனம் அடங்காமல் வீண் வாதம் பேசுகிறவர்கள் கடவுளை அறியமாட்டார்; மனம் அடங்கி எந்தக் கடவுளையேனும் நினைத்தாலும் அந்தக் கடவுள் வடிவமாக வந்து அனுக்கிரகம் செய்வார்.)

ஏகாரம் - அசை. உலந்த என்பது உலந்தது என வந்தது. து - விகுதிக்கும் பொருள் அதுவே. "எவ்வுருவாய் எத்தவங்கள் செய்வார்க்கும்' என்பதற்குச் சித்தியார் இரண்டாம் சூத்திரம் 25-வது பாடல் 'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனுர் தாம் வருவர்' என்பதைச் சிந்திக்கவும்.

ஆமா றறியாவே வல்வினைக ளந்தரத்தே
நாமாளென் றேத்தார் நகர்மூன்றும்—வேமா
றொருகணையாற் செற்றானை யுள்ளத்தா லுள்ளி
அருகணையா தாரை அடும். (34)

(ப - ரை) வல்வினைகள் ஆமாறு அறியாவே - ஊழ்வினைகளுடைய சம்பந்தத்தை அறியாமலே; அந்தரம் - மேலாகிய கடவுளுக்கு; நாம் ஆளென்று ஏத்தார் நகர் மூன்றும் - நாம் அடிமைப் பட்டவர்களென்று துதியாத திரிபுரதது அசுரர்களுடைய மூன்று கோட்டைகளையும்; வேமாறு - எரிந்து போகும்படி; ஒரு கணையாற் செற்றானை- ஒரு பாணத்தால் கொன்றருளியவனை; உள்ளததால் உள்ளி - தியானத்தால் மனதில் நினைத்து; அருகணையாதாரை அடும் - சமீபத்தில் போய்த் துதியாதவரைக் கொன்று விடும்.

(க - ரை) (வணங்காத திரிபுரதது அசுரர்களைக் கொன்று விட்டாரே என்று நினைத்து நாம் அக்கடவுளை வணங்கி வழிபடவேண்டும்.

அடுவார் என்னுது அடும் என்று உயர்வு நோக்கி அஃறிணைமுடிபாய்க் கூறினுர். தகர மெய்யும் ஏகாரமும் தொகுததல் விகாரம்.

அடுங்கண்டாய் வெண்மதியென் றஞ்சி இருள்போந்
திடங்கொண் டிருக்கின்ற தொக்கும்—படங்கொள்
அணிமிடற்ற பேழ்வாய் அரவசைத்தான் கோல
மணிமிடற்றின் உள்ள மறு. (35)

(ப - ரை) வெண்மதி அடும் என்றஞ்சி - வெள்ளிய கிரணத்தையுடைய சநதிரன் நம்மைத் தின்று விடுவானென்று பயந்து; இருள்

போர்த்து - இருளானது வந்து; இடங்கொண்டிருக்கின்றது ஒக்கும் - கண்டத்தைத் தனக்கு இடமாகக் கொண்டு இருந்ததை ஒத்து விளங்கும்; படங்கொள் அணிமிடற்ற பேழ்வாய் அரவு அசைததான் - படத்தைக் கொண்ட அழகிய கண்டத்தையும் பிளர்த வாயையும் உடைய சர்ப்பத்தை ஆபரணமாகத் தரித்தவனும்; கோலமணி மிடற்றின் உள்ளமறு - அழகிய நீலரத்தினம் போன்ற கண்டத்தில் உள்ள கறுப்பு; கண்டாய் - ஆன்மாக்களே பார்த்தீர்களா.

(க - ரை) சிவபெருமானுடைய நீலகண்டமானது, இருட்டு சந்திரனுக்குப் பயந்து கண்டத்தில் வந்து தங்கியதை ஒத்து விளங்குகிறது பாருங்கள்.

ஒக்கும் என்பது முற்றும்மை; கண்டாய் என்பது முன்னிலைச் சொல்.

மறுவுடைய கண்டத்தீர் வார்சடைமேல் நாகந்
தெறுமென்று தேய்ந்துழலும் ஆவா—உறுவான்
தளரமீ தோடுமேற் றான தனையஞ்சி
வளருமோ பிள்ளை மதி. (36)

(ப - ரை) மறுவுடைய கண்டத்தீர் - விடக்கறை பொருந்திய கண்டத்தை உடைய கடவுளே; வார்சடைமேல் நாகம் - நீண்ட சடையிலுள்ள சர்ப்பமானது; தெறும் என்று தேய்ந்து உழலும் - கொல்லுமென்று நினைத்து மெலிந்து திரியும்; உறுவான் - பொருந்திய சர்ப்பமானது; தளரமீது ஓடுமேல் - சந்திரன் மெலிய ஓடுமேயாலுல்; தான் அதனை அஞ்சி - சந்திரனைவன் அப்பாம்பிற்குப் பயந்து; வளருமோபிள்ளை - வளர்ச்சியடையுமோ இளமையாகிய சந்திரன்; மதி - நீர் நன்றாய் யோசிதறுப் பார்ப்பீராக.

(க - ரை) கடவுளே! நீர் சீவகாருண்யம் உடையராக இருந்தும் சந்திரனாகிய பிள்ளை வளரவொட்டாமல் பாம்பைத் தரிக்கலாமா?

ஆவா என்பது இரக்கக் குறிப்புச் சொல். பிள்ளைமதி என்பதைப் பிள்ளையாகிய சந்திரன் எனப் பண்புத்தொகையாகக் கொள்வாரும் உளர். மதி எனப் பிரிதததுசொல்நயங் கருதி என்க.

மதியா வடலவுணர் மாமதில்மூன் றட்ட
மதியார் வளர்சடையி னானை—மதியாலே

என்பாக்கை யாலிகழா தேத்துவரேல் இவ்வுலகில்
என்பாக்கை யாய்ப்பிறவார் ஈண்டு. (37)

(ப - ரை) மதியா அடல் அவுணர் மாமதில் மூன்று அட்ட - வணங்காத வலிமை பொருந்திய அசுரர்களுடைய பெரிய கோட்டைகள் மூன்றையும் எரித்தருளிய; மதி ஆர்வளர் சடையினானை - சந்திரன் பொருந்திய நீண்டசடையையுடைய பரமேசுவரனை; மதியாலே - நல்லுணர்ச்சியினாலே; என்பு ஆக்கையால் இகழாதே ஏத்துவரேல் - என்பும் தசையும் பொருந்திய சரீரத்தினாலே நிந்தனை செய்யாது துதிப்பரேல்; இவ்வுலகில் - இப்பூமியின்கண்; என்பு ஆக்கையாய்ப் பிறவார் - என்பு பொருந்திய சரீரத்தோடு பிறவியை அடையார்; ஈண்டு - இவ்வண்ணமாக.

(க - ரை) (மதியாத அசுரர்களைக் கொன்றருளிய சிவபெருமானை நிந்தை செய்யாது துதித்து வணங்குவார்களேயானால் பிறவியை நீக்கிக்கொள்ளலாம்.)

ஏத்துவரேல் பிறவார் என்பதற்கு உண்மை விளக்கம் 35-வது பாடலில் 'ஆடலிது பெற்றார் பிறப்பற்றார் பின்' என்றார்.

ஈண்டொளி சேர்வானத் தெழுமதியை வாளரவந்
தீண்டச் சிறுகியதே போலாதே—பூண்டதோர்
தாரேறு பாம்புடையான் மார்பிற் றழைந்திலங்கு
கூரேறு காரேனக் கொம்பு. (38)

(ப - ரை) ஈண்டு ஒளிசேர்வானத்து எழுமதியை - நெருங்கி ஒளி பொருந்திய ஆகாயத்தில் தோன்றுகிற சந்திரனை; வாள்அரவம் தீண்ட சிறுகியதேபோல் - ஒளி பொருந்திய பாம்பு சந்திரகிரகணம் பிடிக்கும்போது குறைந்து இருத்தலை ஒத்து விளங்கும்; பூண்டதோர் தாரேறு பாம்பு உடையான் மார்பில் தழைந்து இலங்கும் - அணிந்திருக்கப்பட்ட மாலையாகப் பொருந்திய பாம்பை உடைய மார்பினிடத்துப் பிரகாசித்து விளங்குகின்ற; கூர் ஏறு கார் ஏனக் கொம்பு - கூர்மை பொருந்திய கரிய பன்றியினது கொம்பு.

(க - ரை) (சந்திரனைப்போல் சிவபெருமானுடைய மார்பில் பன்றியினது கொம்பு தோன்றுகிறது.)

ஆ து ஏ அசைகள். ஈண்டல் என்பது ஈண்டு எனக்கடைகுறைந்து வந்தது. ஈண்டல் - நெருங்கல்.) பன்றிக்கொம்பு அணிந்தார் என்பதற்குத் திருநாவுக்கரசரும் திருவதிகை பண் காந்தாரம் 2-வது பாடலில் 'பூண்டதோர் கேழல் எயிறும்' என்றார்.

கோம்பினையோர் பாகத்துக் கொண்ட குழகன் றன்
அம்பவள மேனி யதுமுன்னஞ்—செம்பொன்
அணிவரையே போலும் பொடியணிந்தால் வெள்ளி
மணிவரையே போலும் மறித்து. (39)

(ப - ரை) கொம்பினை ஓர் பாகத்துக்கொண்ட குழகன் தன் - பூங்கொம்பு போன்ற உமாதேவியாரை இடப் பாகத்தில வைத்தருளிய சிவபெருமானுடைய ; அம்பவள மேனி அதுமுன்னம் - அழகிய பவளம்போன்ற திருமேனியானது முன்னமே ; செம்பொன் அணிவரையேபோலும் - சிவந்த பொன்போன்ற அழகிய மலையை ஒத்து விளங்கும் ; மறித்து - திரும்பவும் ; பொடி அணிந்தால் வெள்ளி மணிவரையேபோலும் - விபூதியை உத்தூளனமாகப் பூசினால் வெள்ளி மயமாகிய அழகிய கைலாச மலையை ஒத்து விளங்கும்.

(க - ரை) (பவளம்போன்ற சிவபெருமானுடைய திருமேனி பொன் மலையைப்போல் விளங்கும் ; திரும்பவும் விபூதியை அணிந்தால் வெள்ளியங்கிரியை ஒத்து விளங்கும்.)

கொம்பு என்பது உவமைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

மறித்து மடநெஞ்சே வாயாலுஞ் சொல்லிக்
குறித்துத் தொழுதொண்டர் பாதங்—குறித்தொருவர்
கொள்ளாத திங்கட் குறுங்கண்ணி கொண்டார்மாட்
டுள்ளாதார் கூட்ட மொருவு. (40)

(ப - ரை) மறித்து மடநெஞ்சே - (பிற தெய்வங்களை வணங்காமல்) தடுத்து அறியாமையையுடைய மனமே ; வாயாலும் சொல்லிக் குறித்துத் தொழுதொண்டர் - மனம் வாக்கு காயங்களினால் தோத்திரஞ் சொல்லிக் கடவுளை நினைத்து வணங்குகிற அடியார்களுடைய ; பாதம் குறித்து - திருவடியை வணங்குவாயாக ; ஒருவர் கொள்ளாத-

வேறொருவரும் அணியாத; திங்கள்கூறுங் கண்ணிகொண்டார் மாட்டு-சந்திரனாகிய சிறிய மாலையை அணிந்த கடவுளை ; உள்ளாதார் கூட்டம் ஒருவு - நினையாதவருடைய கூட்டத்தைச் சேராதே.

(க - ரை) மனமே! கடவுளுடைய திருவடியைத் துதிக்கிற அடியார்களை வணங்கி அக்கடவுளை நினையாதவர் கூடுமிடத்திற்குச் செல்லாதே.

வாயாலும் என்பது முற்றும்மை. மனத்தாலும் காயத்தாலும் எனக் கூட்டி உரைக்கப்பட்டது. தொழுதொண்டர் பாதங் குறித்து என்பதற்குச் சிவஞானபோதம் 12-வது சூத்திரத்தில், 'அன்பரொடு மரீஇ' 'சிவபத்தர்களைச் சேர்ந்து' என்றார்.

ஒருபா லுலகளந்த மாலவனும் மற்றை
ஒருபால் உமையவளாம் என்றால்—இருபாலும்
நின்னுருவ மாக நிறந்தெரிய மாட்டோமால்
நின்னுருவோ மின்னுருவோ நேர்ந்து. (41)

(ப - ரை) ஒருபால் உலகளந்த மாலவனும் - ஒரு பக்கத்தில் பூமியை அளந்த விட்டுணுமூர்த்தியாம் ; மற்றை ஒருபால் உமையவளாம் என்றால் - வேறொரு பக்கத்தில் உமாதேவியார் என்று சொல்லுவோமேயானால் ; இருபாலும் - இரண்டு பக்கத்திலும் ; நின்னுருவமாக நிறந்தெறியமாட்டோம் - உன்னுடைய வடிவம் இன்னதென்று தெரிந்துகொள்ள முடியவில்லை (ஆகையால்); நின்உரு - உன்னுடைய வடிவம் ; மின்னுருவோ - மின்னலைப்போன்ற (ஒளியை உடையதோ); நேர்ந்து - உற்றுநோக்கிப் பார்க்குமிடத்து.

(க - ரை) பார்வதியும் விட்டுணுவும் இருமருங்கும் மறைத்துக் கொண்டு இருப்பதால், கடவுளே! உன்னுடைய வடிவம் இன்னதெனத் தெரியவில்லை ; மின்னலைப் போன்றதோ அறியோம்.

ஓகாரம் முன்னையது ; அசை பின்னையது. வினா. ஆல் - அசை.

நேர்ந்தரவங் கொள்ளச் சிறுகிற்றே நீயதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ—பேர்ந்து
வளர்க்குழவித் தாய்வளர மாட்டாதோ என்றே
இளங்குழவித் திங்க ளிது. (42)

(ப - ரை) நேர்ந்து அரவம் கொள்ள சிறுகிற்றே - பொருந்திய சர்ப்பமானது பிடித்தலினால் மெலிந்திருக்கிறதோ ; நீயதனை ஈர்ந்து அளவே கொண்டு இசைய வைத்தாயோ - கடவுளே நீர் அதனைப் பிளந்து உமக்கு வேண்டியதைக் கொண்டு பொருத்தமாக வைத்துக் கொண்டீரோ ; பேர்ந்து - திரும்பவும் ; வளங் குழவித்தாய் வளர மாட்டாதோ - வளப்பம் பொருந்திய சந்திரனைப் பெற்ற தாய் வளர்க்காதோ ; என்னே - இது என்ன ஆச்சரியம் ; இளங் குழவித் திங்கள் இது - இளமையாகிய சந்திரன் இப்படி மெலிந்து இருக்கின்றான்.

(க - ரை) சிவபெருமானே! உமது சடையில் இருக்கிற சந்திரன் இப்படி மெலிந்து இருப்பதற்குக் காரணம் தெரியவில்லை; நீரே அருளிச்செய்யவேண்டும்.

என்னே என்பது அதிசய இரக்கச் சொல். வளர்க்க என்பது வளர எனக் கடை குறைந்துவந்தது.

திங்க ளிதுசூடிச் சில்பலிக்கென் றூர்திரியேல்
எங்கள் பெருமானே என்றிரந்து—பொங்கொளிய
வானோர் விலக்காரேல் யாம்விலக்க வல்லமே
தானே யறிவான் தனக்கு. (43)

(ப - ரை) திங்கள் இது சூடி சில்பலிக்கு என்று ஊர்திரியேல் - சந்திரனாகிய இதைச் சிரசில் தரித்துக் கொண்டு அற்பமாகிய பிக்ஷைக்கு என்று ஊரில் அலையாதே ; எங்கள் பெருமானே என்று இரந்தும் - எங்களுடைய தலைவனே என்று பன்முறை வேண்டியும் ; பொங்கு ஒளியவானோர் விலக்காரேல் யாம் விலக்க வல்லமே - அதிகரித்த ஒளியையுடைய தேவர்களும் விலக்காமல் இருப்பார்களே யானால் நாங்கள் விலக்க அவ்வளவு வல்லமையுடையேமா ; தானே அறிவான் தனக்கு - தன்னைத் தானே அறிகின்ற பெருமையை யுடைய சிவபெருமானுக்கு.

(க - ரை) முதல்வனைத் தேவர்களும் பிக்ஷை எடாதீர் என்று தடுக்காமல் இருப்பார்களேயானால் யாங்கள் தடுக்க வல்லமையை யுடையவர்களா ?

இரந்தும் என்பது இரந்து எனக் கடைக்குறை. வல்லமே என்பதில் ஏகாரம் வினா.

தனக்கே அடியனாய்த் தன்னடைந்து வாழும்
எனக்கே அருளாவா றென்கொல்—மனக்கினிய
சீராளன் கங்கை மணவாளன் செம்மேனிப்
பேராளன் வானோர் பிரான். (44)

(ப - ரை) மனக்கு இனிய - மனசுக்கு இனிமையாகிய; சீராளன் - (ஒருபோதும் நீங்காத) சிறப்பை உடையவனும்; கங்கை மணவாளன்-கங்காதேவியினுடைய நாயகனும்; செம்மேனிப் பேராளன் - சிவந்த திருமேனி என்கின்ற பெயரை உடையவனும்; வானோர் பிரான் - தேவர்களுக்குத் தலைவனும் (ஆகிய ;) தனக்கே - சிவபெருமானுக்கே; அடியனாய் - அடியார்களாய்; தன்னடைந்து வாழும் - கடவுளாகிய தன்னையே (சரணமென்று) வாழுகின்ற; எனக்கே அருளாவாறு என் - அடியவளாகிய எனக்குக் கிருபை செய்யாத காரணம் என்ன?

(க - ரை) (தேவாதி தேவனே! உனக்கே அடிமைப்பட்டு வாழுகின்ற எனக்கு அருள் செய்யாத காரணம் தெரியவில்லை.)

கொல் அசைச் சொல். தனக்கே என்பதில் ஏகாரம் தேற்றம். எனக்கே என்பதில் ஏகாரம் பிரிநிலை.

பிரானவனை நோக்கும் பெருநெறியே பேணிப்
பிரானவன்றன் பேரருளே வேண்டிப்—பிரானவனை
எங்குற்றா னென்பீர்க ளென்போல்வார் சிந்தையினும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது. (45)

(ப - ரை) பிரான் அவனை நோக்கும் பெருநெறியே பேணி - (எப்பொருட்கும்) இறைவனைப் பார்க்கின்ற பெரிய வழியைக் கருதி; பிரான் அவன் தன் பேரருளே வேண்டி - கடவுளுடைய பெரிய திருவருளை விரும்பி; பிரான் அவனை எங்குற்றான் என்பீர்கள் - சிவபெருமான் எங்கே இருக்கின்றான் என்று சொல்லுவீர்கள்; என்போல்வார் சிந்தையினும் - சதா தியானஞ் செய்கின்ற என்னைப் போன்ற அடியார்களுடைய மனத்தினும்; இங்குற்றான் காண்பார்க்கு எளிது - இங்கேயும் இருக்கின்றான் பார்க்கின்றவர்களுக்கு எளிதாக.

(க - ரை) உலகத்தவர்களே ! கடவுள் எங்கே இருக்கின்றான் என்று கேட்பீர்களேயானால் தியானம் செய்கின்றவர்கள் உள்ளத்திலேயும் சகல இடங்களிலேயும் இருக்கின்றார்.

சிந்தையினும் உம்மை முற்றும்மை. பேருளே என்பதில் ஏகாரம் தேற்றம். சிந்தையினும் இங்குற்றான் என்பதற்குத் திருக்கோவையார் 20-வது பாடலில் 'சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தை யுள்ளும் உறைவான்' என்றார் மாணிக்கவாசகரும்.

எளிய திதுவன்றே ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவி லீர் ஆவா—வொளிகொள்மிடற்
றெந்தையராப் பூண்டுழலு மெம்மானை உள்நினைந்த
சிந்தையராய் வாழுந் திறம். (46)

(ப - ரை) ஒளிகொள் மிடற்று எந்தை-(நீலஇரத்தினம்போன்ற) ஒளியைக் கொண்ட கண்டத்தையுடைய எமது தந்தையும்; அராப் பூண்டு உழலும் எம்மானை சர்ப்பாபரணத்தைத் தரித்துத் திரிகின்ற நமது தலைவனையும்; உள் நினைந்த சிந்தையராய் வாழுந்திறம் - இதயத்தினுள்ளே தியானிக்கின்ற மனத்தையுடையவராய் வாழுகின்ற தன்மை; எளியது இது அன்று - எளிமையான காரியம் இது அல்ல; ஏழைகாள் - அறிவில்லாதவர்களே; யாதும் அளியீர் - யாசிக்கின்றவர்களுக்கு ஒன்றையும் கொடுக்கமாட்டீர்கள்; அறிவிலீர் ஆவா - நல்லறிவு இல்லாதவர்களே இது என்ன ஆச்சரியம்!

(க - ரை) நிட்காமிய புண்ணியத்தினால் கடவுளை அறியலாமே தவிர வேறெவ்விதத்திலும் அறிய முடியாது.

ஏகாரம் அசை.

திறத்தான் மடநெஞ்சே சென்றடைவ தல்லாற்
பெறத்தானு மாதியோ பேதாய்—நிறத்த
இருவடிக்கண் ஏழைக் கொருபாக மீந்தான்
திருவடிக்கட் சேருந் திரு. (47)

(ப - ரை) பேதாய் மடநெஞ்சே - மிகுந்த அறியாமையை உடைய மனமே; நிறத்த இருவடிக்கண் ஏழைக்கு - (கருமை) நிறம் பொருந்திய இரண்டு மாவடுவின் பிளப்பை ஒத்த கண்களையுடைய

உமாதேவியாருக்கு ; ஒரு பாகம் ஈந்தான் - ஒரு பக்கத்தைக் கொடுத்தருளியவனுடைய ; திருவடிக்கண்சேரும் திரு - திருவடியினிடத்துச் சேருகின்ற செல்வமானது ; திறத்தால் சென்றடைவது - சரியை கிரியை யோகப் பழக்க முதிர்ச்சியால் அடைவதல்லது ; அல்லால் - அல்லாமல் ; பெறத்தானும் ஆதி - பெறுகின்ற தன்மையானது அதிசயமாக இருக்கிறது.

(க - ரை) (மனமே ! அப்பியாசததாலே கடவுளை அறியலாமே தவிர வேறு வகையில் அறிவது அரிது.)

ஓகாரம் - அசை. வடுவென்பது - வடி என இகரவிகுதி பெற்றது. இடம் நோக்கிக் கருமை நிறம் வருவிக்கப்பட்டது. ஆதி என்பது அதிசயம்.

திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும்
பெருமான் பிறைக்கொழுந்தை நோக்கும்—ஒருநாள்
இதுமதியென் றொன்றாக இன்றளவுந் தேரா
ததுமதியொன் றில்லா வரா. (48)

(ப - ரை) அரா - சிவபெருமான் மார்பிலிருக்கிற பாம்பானது ; திருமார்பில் ஏனச் செழுமருப்பைப் பார்க்கும் - அம்மார்பிலிருக்கிற பன்றியினது தநதந்தைப் பார்க்கும்; பெருமான் பிறைக் கொழுந்தை நோக்கும் - கடவுள் சிரசில் அணிந்திருக்கிற சந்திரனைப் பார்க்கும் ; ஒரு நாள் - ஒருகாலத்தில் ; இதுமதி என்று - இது சந்திரன் என்றும் (இது பன்றியின் கொம்பு) என்றும் வேற்றுமை யுணராது ; ஒன்றாக - ஒரு தன்மையாக ; இன்றளவுந் தேராது - இற்றைவரைக்கும் தெளியமாட்டாத ; மதி ஒன்று இல்லா அது - புத்தி இல்லாத அப்பாம்பு.

(க - ரை) (சிவபெருமான் அணிந்திருக்கிற சந்திரனையும் பன்றியின் தந்தத்தையும் வேற்றுமை யுணராது அவர் அணிந்த பாம்பானது மயங்கும்.)

அது என்பது சுட்டுப் பொருளில் வந்தது.

அராவி வளைத்தனைய அங்குழவித் திங்கள்
விராவு கதிர்விரிய வோடி—விராவுதலாற்

பொன்னோடு வெள்ளிப் புரிபுரிந்தாற் போலாவே
தன்னோடே யொப்பான் சடை. (49)

(ப - ரை) அராவி வளைத்தனைய அம்குழவித் திங்கள் - அரததிைைல் ராவிவளைத்ததைப் போன்ற அழகும் இளமையும் பொருந்திய சந்திரனிடததில்; விராவுகதிர் விரியஓடி - பொருநதிய கிரணங்கள் விரிந்தோடி; விராவுதலால் - சடையில் சஞ்சரிததலால்; பொன்னோடு வெள்ளிப் புரிபுரிநதால்போல் - பொன்னினிடத்து வெள்ளிக் கம்பியைச் சுற்றியதை ஒத்து விளங்கும்; தன்னோடே ஒப்பான்சடை - தனக்குத்தானே சமததுவமாகிய சிவபெருமானுடைய சடையானது.

(க - ரை) (சந்திரனுடைய கிரணமானது சடையில் வீசுதலால் பொன்னினிடத்து வெள்ளிக்கம்பியைச் சுற்றியதை ஒத்து விளங்கும். போலாவே என்பதில் ஆ ஏ இரண்டும் அசைகள்.)

சடைமேலக் கொன்றை தருகனிகள் போந்து
புடைமேவித் தாழ்ந்தனவே போலு—முடிமேல்
வலப்பாலக் கோல மதிவைத்தான் றன்பங்கின்
குலப்பாவை நீலக் குழல். (50)

(ப - ரை) முடிமேல் வலப்பால் அக்கோலமதி வைத்தான் - சிவபெருமானுடைய சிரசில் வலது பக்கததில் அந்த அழகிய சந்திரனை வைத்தவன்; தன்பங்கின் - தனது இடப் பாகத்தில் வைத்த; குலப்பாவை நீலக்குழல் - பார்வதிதேவியினுடைய நீலநிறம் பொருந்திய கூந்தலானது; சடைமேல் அக்கொன்றை தருகனிகள் - சடையிலிருக்கின்ற அக்கொன்றைப் புஷ்பத்தில் உண்டாகின்ற பழங்கள்; போந்து - வந்து; புடைமேவி தாழ்ந்தனவே போலும் - சிவபெருமானுடைய முதுகின் பக்கத்தில் பொருந்தி தாழ்ந்திருக்கின்றதை ஒத்து விளங்கும்.

(க - ரை) (உமாதேவியினுடைய கூந்தல் தொங்குகின்றதானது சிவபெருமான் சிரசில் இருக்கிற கொன்றைப்பூ தருகிற பழங்கள் தொங்குவதை ஒத்து விளங்கும்.)

போலும் என்பது முற்றும்மை. மகர மெய் விரித்தல் விகாரம் பெற்றது.

குழலார் சிறுபுறத்துக் கோல்வளையைப் பாகத்
தெழிலாக வைத்தேக வேண்டா—கழலார்ப்பப்
பேரிரவில் ஈமப் பெருங்காட்டிற் பேயோடும்
ஆரழல்வாய் நீயாடும் அங்கு. (51)

(ப - ரை) கழலார்ப்ப-காலில் வீரக்கழல்கள் சப்திக்க ; பேரிரவில் ஈமப் பெருங்காட்டில் - மிகுந்த இருட்டு பொருந்திய சர்வ சூனிய மயானத்தில்; பேயோடும் - பேய்க் கூட்டங்களோடும் ; ஆரழல்வாய் நீ ஆடுமங்கு - நிறைந்த அக்கினியினிடத்து நீ தாண்டவம் செய்யும் அவ்விடத்துக்கு ; குழலார் கோல்வளையை - கூந்தல் பொருந்திய அழகிய வளையலை அணிந்த உமாதேவியாரை; சிறு புறத்துப் பாகத்து - சிறிய பக்கத்து இடத்திலே; எழிலாக வைத்து - அழகு பொருந்தும்படியாக வைத்துக்கொண்டு ; ஏகவேண்டா - நீ செல்லவேண்டாம்.

(க - ரை) (சிவபெருமானே ! நீ பேயோடு இரவில் ஆடும்போது பார்வதிதேவியை அழைததுக்கொண்டு போகவேண்டாம்); (பயந்து விடுவாள் என்று கூட்டி உரைககவும்.)

கோல்வளை என்பது இரண்டாம் வேற்றுமைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

அங்கண் முழுமதியஞ் செக்கரகல் வானத்
தெங்குமினி தெழுந்தா லொவ்வாதே—செங்கட்
டிருமாலைப் பங்குடையான் செஞ்சடை மேல்வைத்த
சிரமாலை தோன்றுவதோர் சீர். (52)

(ப - ரை) செங்கண் திருமாலைப் பங்குடையான்-சிவந்த கண்ணை யுடைய விட்டுணுவை ஒரு பாகத்தில் வைததவனும் ; செஞ்சடை மேல் வைத்த - பவழம்போன்ற சடையினிடதது அணியப்பட்ட ; சிரமாலை தோன்றுவதோர் சீர் - கொண்டைமாலை பிரகாசிக்கிற ஒரு சிறப்புக்கு ; அங்கண் முழுமதியம் செக்கர் அகல் வானத்து - அழகிய இடமகன்ற பூரணச் சந்திரனனவன் செவ்வானம் பொருந்திய அகன்ற ஆகாயத்தினிடத்து ; எங்கும் இனிது எழுந்தால் ஒவ்வாதே - எங்கும் இனிமையாக உதையமானாலும் ஒத்து விளங்காது.

(க . ரை) (சிவபெருமான் அணிந்த கொண்டை மாலையினது அழகுக்கு ஆகாய முழுவதும் சந்திரன் உதயமானாலும் ஒவ்வாது.)

சீரார்ந்த கொன்றை மலர்தழைப்பச் சேணுலவி
நீரார்ந்த பேரியாறு நீத்தமாய்ப்—போரார்ந்த
நாண்பாம்பு கொண்டசைத்த நம்மீசன் பொன்முடிதான்
காண்பார்க்குச் செவ்வேயோர் கார். (53)

(ப - ரை) சீரார்ந்த - சிறப்புப் பொருந்திய; கொன்றை மலர் தழைப்ப - கொன்றைப் புட்பம் செழித்திருக்கும் பொருட்டு; சேண் உலவி - ஆகாயத்தை அளாவி; நீர் ஆர்ந்த பேரியாறு நீததமாய் - நீர் பொருந்திய பெரிய ஆறுனது வெள்ளமாய் ஓடுகின்ற தன்மை யானது; போர் ஆர்ந்த - யுத்தம் நேர்ந்தபோது; நாண் பாம்பு கொண்டசைத்த - அரைஞாணுக இடையில் பாம்பைக் கட்டியருளிய; நம் ஈசன் பொன்முடிதான்-நம்முடைய தலைவனது அழகிய சிரசை; காண்பார்க்குச் செவ்வே ஓர்கார் - பார்க்கின்றவர்களுக்கு ஒழுங்காகிய ஒரு மேகத்தைப்போல் விளங்குகிறது.

(க - ரை) (முதல்வன் சிரசில் இருக்கிற கங்கை பெருகி ஓடுவு தானது மேகம் வந்து தங்கி இருத்தலை யொதது விளங்குகிறது.)

காருருவக் கண்டத்தெங் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஓருருவாய் நின்னோ டுழிதருவான்—நீருருவ
மேகத்தாற் செய்தனைய மேனியான் நின்னுடைய
பாகத்தான் காணமே பண்டு. (54)

(ப - ரை) காருருவக் கண்டத்து எங்கண்ணுதலே - கருமைநிறம் பொருந்திய கண்டத்தையுடைய எம் கடவுளே; ஒருருவாய் - ஓர் வடிவத்தோடு; நின்னோடு உழிதருவான் - உன்னுடைய பக்கத்தில் இருக்கின்றவன்; நீருருவ மேகத்தால் செய்தனைய மேனியான் - நீரின் வடிவத்தைக் கொண்ட மேகததால் செய்ததைப் போன்ற திரு மேனியையுடைய பிரமனுக்கும்; நின்னுடைய பாகததான் - உன்னு டைய பக்கத்தில் இருக்கின்ற விட்டுணுவுக்கும்; காணமே பண்டு எங் கொளித்தாய் - பிரம விட்டுணுவுக்குக் காணமல் முன்காலத்தில் எங்கே மறைந்து இருந்தீரோ.

(க - ரை) (ஆண்டவனே! பிரம விட்டுணுக்கள் அகந்தை நீங்கா மல் தேடியஞான்று எங்கே ஒளித்திருந்தீரோ அறியேம்.)

நின்னுடைய பாகத்தான் என்பது இடஆகு பெயராய் விட்டு ணுவை உணர்த்தியது.

பண்டமரர் அஞ்சப் படுகடலின் நஞ்சுண்டு
கண்டங் கறுத்ததுவு மன்றியே—உண்டு
பணியுறுவார் செஞ்சடைமேற் பான்மதியி னுள்ளே
மணிமறுவாய்த் தோன்றும் வடு. (55)

(ப - ரை) பண்டு அமரர் அஞ்சப்படு கடலின் நஞ்சுண்டு - முன்னமே தேவர்கள் அஞ்சும்படியாக உண்டாகிய கடலில் நஞ்சை உண்டு; கண்டம் கறுத்ததுவும் அன்றியே - கழுத்து கறுத்து இருப்பதை அல்லாமலும்; உண்டு - தம்மிடத்திலுடைய; பணிஉறுவார் செஞ்சடைமேல் - சர்ப்பம் பொருந்திய நீண்ட சடையினிடத்து வைத்த; பால்மதியினுள்ளே - வெள்ளிய சந்திரன் நடுவில்; வடு - தழும்பாக; மணிமறுவாய்த் தோன்றும் - அழகிய மச்சையைப்போல் விளங்கும்.

(க - ரை) (சிவபெருமான் நஞ்சையுண்டு கண்டம் கறுத்திருப்பதை யல்லாமலும் அவ்விடச்சுவாலை மேலே தாக்கிச் சிரசில் இருக்கிற சந்திரன் நடுவில் மறுவாய் விளங்கும்.)

நஞ்சுண்டு என்பதற்குத் திருநாவுக்கரசர் திருவாலங்காடு திருத்தாண்டகம் 9 வது பாடலில் 'காரார் கடல்நஞ்சை யுண்டார் தாமே' எனக் கூறியுள்ளார்.

வடுவன் றெனக்கருதி நீமதித்தி யாயிற்
சுடுவெண் பொடிநிறத்தாய் சொல்லாய்—படுவெண்
புலாற்றலையி னுள்ளூண் புறம்பேசக் கேட்டோ
நிலாத்தலையிற் சூடுவாய் நீ. (56)

(ப - ரை) நிலாத்தலையில் சூடுவாய்நீ - கிரணம் பொருந்திய சந்திரனைச் சிரசில் வைத்து இருக்கின்றாய் நீயாதலால்; வடுவு அன்றெனக் கருதி நீ மதித்தியாயில் - தழும்பு அல்லவென்று நினைத்து நீ கிதானிப்பாயாகில்; சுடுவெண்பொடி நிறத்தாய் சொல்லாய் - அக்கினியில் சுடப்பட்ட விபூதியைப்போன்ற நிறத்தையுடைய கடவுளே சொல்லுவாய்; படுவெண்புலால் தலையினுள் ஊண்புறம்பு எசக்கேட்

டோம் - உண்டாகிய வெள்ளியபுலால் பொருந்திய மண்டையோட்டில் உணவை வாங்கிப் புசித்ததாக வெளியில் உள்ளவர்கள் நிந்திக்கக் கேட்டோம்.

(க - ரை) முதல்வனே ! நீ யணிந்த சந்திரன் குற்றம் உடையதல்லவென்றும் ஊன்பொருந்திய பிரமகபாலத்தில் உணவைப் புசிக்கவில்லை என்றும் சொல்லி அருளல் வேண்டும்.

புலாற்றலையில் உண்டல் என்பதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருஇன்னம்பர் திருத்தாண்டகம் 7-வது பாடலில் 'பல்லார் தலையோட்டில் ஊணுர்போலும்' எனக் கூறியுள்ளார்.

நீயுலக மெல்லா மிரப்பினும் நின்னுடைய
தீய வரவொழியச் செல்கண்டாய்—தூய
மடவரலார் வந்து பலியிடா ரஞ்சி
விடவரவ மேலாட மிக்கு. (57)

(ப - ரை) நீ உலகமெல்லாம் இரப்பினும் - சிவபெருமானே நீ உலகங்களிலெல்லாம் பிக்ஷை எடுக்கச் சென்றாலும் ; நின்னுடைய - உன்னுடைய ; தீய அரவு ஒழியச் செல் - கொடுமையையுடைய பாம்பை நீக்கிச் செல்லுவாயாக ; தூய மடவரலார் - மனம் பரிசுத்தமாகிய பெண்கள் ; வந்து அஞ்சி பலி இடார் - பிக்ஷை இட வந்து பயந்து பிக்ஷையை இடமாட்டார்கள் ; விட அரவம் மிக்கு மேலாட - விடம் பொருந்திய பாம்பு அதிகமாகத் திருமேனி முழுதும் ஆடிக் கொண்டு இருததலினாலே.

(க - ரை) இறைவனே ! நீ அணிந்திருக்கிற பாம்பைக் கண்டு பெண்கள் பயப்படுவார்கள். அதை விலக்கிவிட்டு, பிக்ஷைக்குச் செல்வாய்.

கண்டாய் என்பது முன்னிலையசை. 'விடஅரவம் மிக்குமேலாட' என்பதனைச் சிதம்பரச் செய்யுட்கோவை 4-வது பாடல், 'திருமுடியிற் கண்ணியு மாலையும் பாம்பு, திருமார்பி லாரமும் பாம்பு—பெருமான், திருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு, பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு' என்று கூறுகிறது.

மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க வுடனிருந்தால் ஒவ்வாதே—செக்கர்போல்

ஆகத்தான் செஞ்சடையும் ஆங்கவன்தன் பொன்னுருவிற்
பாகத்தான் பூங்குழலும் பண்பு. (58)

(ப - ரை) மிக்க முழங்கெரியும் - அதிகமாகச் சடசடவென்று ஒலிக்கின்ற அக்கினியும்; வீங்கிய பொங்கிருளும் - அதிகரித்த இருட்டும் ; ஒக்க உடனிருந்தால் ஒவ்வாது - அக்கினியும் இருட்டும் ஒன்று சேர்ந்து இருந்தாலும் ஒத்து விளங்காது ; செக்கர்போல் ஆகத்தான் செஞ்சடையும்-செவ்வானம்போன்ற திருமேனியும் சிவந்த சடையும் உடைய சிவபிரானது ; ஆங்கவன்தன் பொன்னுருவில் - அச்சிவபிரானது அழகிய வடிவதில் ; பாகத்தாள் பூங்குழலும் பண்பு - ஒருபக்கதில் இருக்கின்ற உமாதேவியினுடைய கூந்தலினது அழகும்.

(க - ரை) (அக்கினியும் இருட்டும் ஒருபக்கத்தில் சேர்ந்து இருந்தாலும் சிவபெருமானுடைய சிவந்த சடையினது அழகுக்கும் உமாதேவியினது கரிய கூந்தலினுடைய அழகுக்கும் ஒவ்வாது.)

ஏகாரம் தேற்றம். 'வீங்கிய பொங்கிருள்' என்றது மீமிசைப் பதம்.

பண்புணர மாட்டேன் நான்நீயே பணித்துக்காண்
கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா—பெண்புணரும்
அவ்வுருவோ மாலுருவோ வானேற்றாய் நீறணிவ
தெவ்வுருவோ நின்னுருவ மேல். (59)

(ப - ரை) கண்புணரும் நெற்றிக் கறைக்கண்டா - கண்பொருந்திய நெற்றியையும் விடக்கறை பொருந்திய கண்டத்தையும் உடைய தலைவனே ; பெண் புணரும் அவ்வுருவோ - உமாதேவியார் பக்கத்திருக்கிற கோலமோ ; மால் உருவோ - விட்டுணுமூர்த்தி பக்கதில் இருக்கின்ற வடிவமோ ; வான் ஏற்றாய் - (பெருமை பொருந்திய) வெள்ளிய இடபவாகனத்தை யுடையவனே ; நின் உருவமேல் நீறணிவது - உன்னுடைய வடிவத்தின்மேல் விபூதியை உத்தூளனம் செய்துகொள்வது ; எவ்வுருவோ - அது எந்த வடிவமோ ; பண்பு உணரமாட்டேன் நான் - இவைகளினுடைய குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ளமாட்டேன்;நீயே பணித்து - நீயே சொல்லல்வேண்டும்.

(க - ரை) (சிவபெருமானே! உன்னுடைய வடிவத்தின் பேதங்களை என்னால் தெரிந்துகொள்ள முடியாது. நீயே உணர்த்தவேண்டும்.)

காண் என்பது முன்னிலை அசை. நீயே என்பதில் ஏகாரம் தேற்றம்.

மேலாய மேகங்கள் கூடியோர் பொன்விலங்கல்
போலாம் ஒளிபுதைத்தால் ஒவ்வாதே—மாலாய
கைம்மா மதக்களிற்றுக் காருரிவை போர்த்தபோ
தம்மான் திருமேனி அன்று. (60)

(ப - ரை) மாலாய கைமாமதக் களிற்றுக் காருரிவை - பெரிய துதிக்கையையும் மிகுந்த மதத்தையும் உடைய ஆனையினது கரிய தோலை; அன்று போர்த்தபோது - அக்காலத்தில் போர்வையாகப் போர்த்தியபோது; அம்மான் திருமேனி - ஆண்டவனுடைய திருமேனியின் அழகுக்கு; மேலாய மேகங்கள் கூடி - மேன்மை பொருந்திய சப்தமேகங்களும் ஒன்று சேர்ந்து; ஓர் பொன் விலங்கல் ஒளி புதைத்தால் ஒவ்வாது - ஒரு பொன்மலையினது ஒளியை மறைத்தாலும் ஒத்து விளங்காது.

(க - ரை) (மேகங்கள் ஒன்று சேர்ந்து பொன்மலையின் ஒளியை மறைத்துக்கொண்டாலும் சிவபெருமான் யானையின் தோலைப் போர்த்திய திருமேனியின் அழகுக்கு நிகராகாது.)

போல் ஆம் என்பன அசைகள். ஒவ்வாதே என்பதில் ஏகாரம் தேற்றம்.

அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்
இன்றுந் திருவுருவங் காண்கிலேன்—என்றுந்தான்
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்
எவ்வுருவோ நின்னுருவம் ஏது. (61)

(ப - ரை) அன்றும் திருஉருவம் காணாதே ஆட்பட்டேன் - அநாதியாய்த் தொடர்ந்திருக்கும் அஞ்ஞான இருளால், (மயங்கிக் கிடந்த) அக்காலத்திலும் உன்னுடைய திருவுருவம் இன்னதன்மையை உடையதென்று தெரியாமலே அடிமைப்பட்டு விட்டேன்; இன்றுந்

திருவுருவம் காண்கிலேன் - இப்பொழுதும் உன்னுடைய வடிவம் இன்னதெனத் தெரியவில்லை ; என்றும் - எப்பொழுதும் ; எவ்வுருவோன் உம்பிரான் - என்ன வடிவத்தையுடையவன் உமது தலைவன் ; என்பார்கட்கு என்னுரைக்கேன் - என்று கேட்கின்றவர்கட்கு என்ன பதில் சொல்லுவேன் ; எவவுருவோ நின்உருவம் ஏது - என்ன வடிவமோ உம்முடைய வடிவம் வேறே எத்தன்மை உடையது ?

(க - ரை) சிவபெருமானே ! உம்முடைய வடிவம் இப்படிப் பட்டதென்று நீ உணர்த்தினாலன்றி நானே அறிந்துகொள்ள முடியாது.

காணாதே என்பதில் ஏகாரம் தேற்றம். தான் அசை. எவவுருவோ என்பதில் ஓகாரம் 2-ம் வினாக்கள். கடவுள் வடிவம் இத்தன்மைத்து என்று எழுதிக்காட்ட முடியாது என்பதற்குத் திருவினா திருத்தாண்டகம் 10-வது பாடலில் 'மைப்படிந்த கண்ணாளுந் தானுங்கச்சி மயானத்தான் வார்சடையான்' என்றார் திருநாவுக்கரசரும்.

ஏதொக்கும் ஏதொவ்வா தேதாகும் ஏதாகா
தேதொக்கும் என்பதனை யாரறிவார்—பூதப்பால்
வில்வேட னாகி விசயனோ டேற்றநாள்
வல்வேட னான வடிவு. (62)

(ப - ரை) பூதப்பால் - முன்னொரு காலத்திலே கடமைப்பட்டு ; வில்வேடனாகி - வில்லைத்தாங்கி வேடவடிவத்தைக் கொண்டு ; விசையனோடேற்ற நாள் - அர்ச்சுனனோடு யுத்தஞ் செய்த காலத்து ; வல்வேடனான வடிவு - கச்சிறுக்கிய வேடவடிவத்துக்கு ; ஏது ஒக்கும் ஏது ஒவ்வாது - நால்வகைத் தோற்றங்களில் எந்த வடிவத்தை ஒப்பிடலாம் எதை ஒப்பிடலாகாது ; ஏது ஆகும் ஏது ஆகாது - எந்த உருவம் ஆகும் எந்த உருவம் ஆகாது ; ஏது ஒக்கும் என்பதனை யாரறிவார் - எதைத்தான் ஒப்பிட்டுச் சொல்லலாம் என்பதனை எந்த ஆன்மாக்கள் அறியவல்லவர்கள்.

(க - ரை) இறைவனே ! வெற்றியைக் கொண்ட வேட வடிவத்துக்கு இணையான வடிவம் இதுதானென்று நீரே உணர்த்தி அருளல் வேண்டும்.

பூதம் என்பது இறந்த காலத்தைக் குறிக்கும் சொல்.

வடிவுடைய செங்கதிர்க்கு மாருய்ப் பகலே
நெடிதுலவி நின்றெறிக்குங் கொல்லோ—கடியுலவு
சொன்முடிவொன் றில்லாத சோதியாய் சொல்லாயால்
நின்முடிமேற் றிங்கள் நிலா. (63)

(ப - ரை) கடிஉலவு சொல் முடிவு ஒன்று இல்லாத சோதியாய்- சிறப்புப் பொருந்திய சொல்லினது முடிவு ஒன்றுக்கும் அகப்படாத சோதி ரூபமாக உடைய கடவுளே; நின்முடிமேல் நிலாததிங்கள் - உன்னுடைய சிரசில் தரித்திருக்கிற கிரணம் பொருந்திய சந்திரனானவன்; வடிஉடைய செங்கதிர்க்கு மாருய் - அழகு பொருந்திய சிவந்த கிரணத்தையுடைய சூரியனுக்குப் பதிலாய்; பகலே பகற்காலத்திலே; நெடிது உலவி-நீண்ட தூரம் சஞ்சரித்து (சூரியனிடத்தில் வெப்பத்தைப் பெற்றுக்கொண்டு;) நின்றெறிக்குங்கொல் - சூரியனைப்போல் வெப்பமாய் வீசுகின்றனே; சொல்லாய் - நீர் சொல்லி அருளல் வேண்டும்.

(க - ரை)(முதல்வனே! சந்திரன் தன்னுடைய கிரணத்தை வெப்பமாக வீசுகின்றதன் உண்மையை நீர்தான் உணர்த்தல்வேண்டும்.)

கொல்லோ என்பதில் ஓகாரம் வினு.

நிலாவிலங்கு வெண்மதியை நேடிக்கொள் வான்போல்
உலாவி உழிதருமா கொல்லோ—நிலாவிருந்த
செக்கரவ் வானமே யொக்குந் திருமுடிக்கே
புக்கரவங் காலையே போன்று. (64)

(ப - ரை) நிலாஇருந்த - சந்திரன் உதயமாகி இருந்த; செக்கர் அவ்வானமே ஒக்கும் - சிவந்த அவ்வாகாயத்தையே ஒத்து விளங்கும்; திருமுடிக்கே - அழகிய சிவந்த சடையை உடைய சிரசினிடத்து; புக்கரவம் காலையே போன்று - தங்கி இருக்கின்ற சர்ப்பமானது வெளியே புறப்படும் சமயம் எப்படி இருக்கிறதென்றால்; நிலாவிலங்கு வெண்மதியை நேடிக்கொள்வான் போல் - கிரணம் பொருந்திய வெள்ளிய சந்திரனைத் தேடுகின்றவனைப்போல; உலாவி - பலபக்கத்

திலும் திரிந்து; உழிதருமா கொல் - ஓர் இடத்தில் தங்கி இருக்கின்றவனை ஒத்து விளங்குவான்.

(க - ரை) (சிவபெருமான் மார்பில் அணிந்திருக்கிற பாம்பானது சந்திரனைத் தேடிவிட்டு, சிரசில் வந்து பார்ப்பவனைப்போல் தங்கி இருக்கிறான்.)

கொல்லோ என்பதில் ஓகாரம் அசைநிலை. கொல் என்பது ஐயப்பொருளில் வந்தது.

காலையே போன்றிலங்கு மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு—மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலு மிடறு. (65)

(ப - ரை) மேனி காலையே போன்று இலங்கும் - சிவபெருமானுடைய திருமேனியானது காலைக்காலத்தைப்போல விளங்கும்; கடும்பகலின் - மத்தியான காலத்தில்; வேலையே போன்று இலங்கும் வெண்ணீறு - சமுத்திரத்தைப்போல் விளங்கும் அச்சிவபிரான் திருமேனியில் உத்தூளனம் செய்திருக்கிற விபூதி; மாலையில் தாங்கு உருவேபோலும்-மாலைக் காலத்தில் தங்கிய செவ்வானத்தைப் போன்றது; சடைககற்றை - சடையினது தொகுதி; அவற்குமிடறு - அச்சிவபெருமானுடைய கண்டமானது; வீங்கிருளேபோலும் - அதிகரித்த இருட்டைப் போன்றது.

(க - ரை) (சிவபெருமானுடைய வடிவங்களை அல்லாது வேறே காலங்கள் கிடையா.)

மற்று அசை. உம்மைகள் நான்கும் எண்ணும்மைகள்.

மிடற்றில் விடமுடையீர் உம்மிடற்றை நக்கி
மிடற்றில் விடங்கொண்ட வாறே—மிடற்றகத்து
மைத்தாம் இருள்போலும் வண்ணங் கரிதாலோ
பைத்தாடு நும்மார்பிற் பாம்பு. (66)

(ப - ரை) மிடற்றில் விடமுடையீர் - கண்டத்தில் விடத்தை

விடத்தை வைத்துக்கொண் டிருக்கின்றதோ; மிடற்றகத்து மைத் தாம் இருள்போல் - தொண்டையினிடத்துக் கருமை ஆகிய இருட்டைப் போன்றதும்; வண்ணம் கரிதால் - சரீரம் கறுத்து இருப்பதினுலும்; பைத்தாடும் நும்மார்பில் பாம்பு - படத்தை விரித்து ஆடும் உம்முடைய மார்பில் அணிந்திருக்கிற சர்ப்பமானது.

(க - ரை) (சிவபெருமானே! உமது கண்டத்தைப் பாம்பு நக்கினதினுல் பல்லில் விஷம் தங்கிற்றோ ? கழுத்தும் உடலும் கரிய நிறத்தை அடைந்தனவோ?)

போலும் என்பதில் உம்மை முற்றும்மை. கரிதாலோ என்பதில் ஓகாரம் அசைநிலை.

பாம்பு மதியும் மடமானும் பாய்புலியுந்
தாம்பயின்று தாளருவி தூங்குதலால்—ஆம்போல்
உருவடிவில் ஒங்கொலிசேர் கண்ணுதலான் கோலத்
திருவடியின் மேய சிலம்பு. (67)

(ப - ரை) பாம்பும் மதியும் மடமானும் பாய்புலியும் - (சிவபெருமானுடைய சிரசில்) பாம்பும் சந்திரனும் இளமை பொருந்திய கங்காதேவியும் பாயப்பட்ட புலியும்; பயின்று தாளருவி தூங்குதலால் - பழகுதலுடனே அருவியாறு அசைதலினுல் உண்டாகிய; பொன்ஆம் உருவடிவில் ஓங்கொலிசேர் - பொன்போன்ற அழகிய வடிவத்தில் அதிகரித்த சததமும்; கண்ணுதலான் கோலத திருவடியின்மேய சிலம்பு - நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானது அழகிய திருவடியிற் பொருந்திய சிலம்பும் சப்தம் இட்டுக்கொண்டிருக்கிறது.

(க - ரை) (முதல்வனுடைய சிரசில் கங்காதேவியினது சப்தமும் திருவடியில் சிலம்பாபரணத்தினது சப்தமும் இடையறாது ஒலித்துக் கொண்டிருக்கின்றன.)

தாம் என்பது அசை. தாளருவி மீமிசைப்பதம். சத்தம் இடுவதால் என்ன ஆகிறது. எல்லாப் பொருள்களும் சிவபெருமானையே தோத்திரஞ் செய்கின்றன.

சிலம்படியாள் ஊடலைத்தான் தவிர்ப்பான் வேண்டிச்
சிலம்படிமேற் செவ்வரத்தஞ் சேர்த்தி—நலம்பெற

றெதிராய செக்கரினு மிக்கோலஞ் செய்தான்
முதிரா மதியான் முடி. (68)

(ப - ரை) முதிராமதியான் - இளமையாகிய சந்திரனைத் தரித்த (கடவுள்) ; சிலம்படியாள் ஊடலைத்தான் தவிர்ப்பான் - சிலம்பணிந்த பாதத்தை உடைய உமாதேவியாரது கோபத்தைத் தானே நீக்கும் பொருட்டு ; வேண்டி-இரந்து ; சிலம்படிமேல் செவ்வரத்தம் சேர்த்தி- ஒலிக்காகின்ற பாதத்தில் செவ்வரத்தம் புட்பத்தைச்சாத்தி (சிரசினால் வணங்கி) ; நலம் பெற்று - கோபம் நீங்கி நல்ல வசனத்தைக் கேட்டு ; எதிராய செக்கரினும் - எதிரே தோன்றுகின்ற செவ்வானத்தைப் பார்க்கிலும் (சிவப்பாக); முடி இக் கோலஞ்செய்தான் - சிரசை அடி தாழ்த்திச் சிவந்த நிறத்தைப் பெற்றுக்கொண்டார்.

(க - ரை) (சிவபிரான் உமாதேவியார் ஊடலை நீக்கும்பொருட்டுத் திருவடியைத் தாழ்த்திச் சிரசில் சிவந்த நிறத்தைப் பெற்றுக்கொண்டார்.)

யான் என்பது பொருட்டுப் பொருளில் வந்தது. ஊடலை நீக்கியதனை - பிரபுலிங்கலீலை துதி கதி 2-வது பாடலில், 'ஆதிபகவன் தனதூடல் தணிப்பான் பணிய' எனக் கூறியுள்ளார்.

முடிமேற் கொடுமதியான் முக்கணான் நல்ல
வடிமேற் கொடுமதியோங் கூற்றைப்—படிமேற்
குனியவல மாமடிமை கொண்டாடப் பெற்றோம்
இனிஅவல முண்டோ எமக்கு. (69)

(ப - ரை) முடிமேல் கொடுமதியான் - சிரசின்மேல் வளைவாகிய சந்திரனைத் தரித்தவனும் ; முக்கணான் - மூன்று நேத்திரங்களையும் உடைய சிவபெருமானது ; நல்ல அடிமேல் கொடு - நன்மையைச் செய்கின்ற திருவடியைச் சிரசிலே கொண்டு ; கூற்றை மதியோம் - இயமனை ஒரு பொருளாக நினைக்கமாட்டோம் ; படிமேல் - பூமியின் மீது - குனியவலமாம் அடிமை கொண்டாடப் பெற்றோம் ; முதுகு குனிந்து வலம் வருகின்ற திருத்தொண்டைச் செய்து அடியவர்களாக ஆகிவிட்டோம் ; எமக்கு - எம்மைப் போன்ற அடியார்களுக்கு; இனி அவலம் உண்டோ-இனிமேல் (பிறவியாகிய) துன்பம் இல்லை.

(க - ரை) முதல்வனது திருவடியைச் சிரசில் கொண்டு இயமனை வர ஒட்டோம்; புண்ணிய க்ஷேத்திரங்களில் வலம் வருகின்ற தொண்டைச் செய்து பிறவியை நீக்கிக்கொண்டோம்.

உண்டோ என்பதில் ஓகாரம் எதிர்மறை. அவலம் - துன்பம்.

எமக்கிதுவோ பேராசை என்றுந் தவிரா
தெமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய்—அமைக்கவே
போந்தெரி பாய்ந்தன்ன புரிசடையாய் பொங்கிரவில்
ஏந்தெரி பாய்ந்தாடு மிடம். (70)

(ப - ரை) எரி அமைக்கவே போந்து பாய்ந்தன்ன புரிசடை எந்தாய் - அக்கினியை உண்டாக்கவே வந்து பாய்ந்ததைப் போன்ற கட்டுகளமைந்த சடையையுடைய எமது தந்தையே; எமக்கு இது பேராசை என்றுந் தவிராது ஒரு நாள் - எனக்கு ஒரு பெரிய ஆசையானது மனத்தை விட்டு நீங்காமல் இருக்கின்றது (ஆகையால் ஒரு காலத்தில்); பொங்கு இரவில் ஏந்து எரிபாய்ந்து ஆடும் இடம் - அதிகரித்த இருளையுடைய இராக்காலத்தில் ஏந்துகின்ற அக்கனியோடு குதித்து ஆடுகின்ற இடத்தை; எமக்குக் காட்டுதி - எனக்குக் காட்டுவாய்.

(க - ரை) சிவபெருமானே! நீர் சதா நிருத்தஞ் செய்கின்ற இடத்தைப் பார்க்க ஆசைப்படுகின்றேன். காட்டி அருளல்வேண்டும்.

இதுவோ காட்டுதியோ என்பதில் ஓகாரம் இரண்டும் அசைகள். சடையாய் என்பதில் ஆய் விகுதி. பகுதிப் பொருள் விகுதிக்கும்.

இடப்பால வானத் தெழுமதியை நீயோர்
மடப்பாவை தன்னருகே வைத்தால்—இடப்பாகங்
கொண்டாள் மலைப்பாவை கூறுமென் றுங் கண்டிலங்காண்
கண்டாயே முக்கண்ணாய் கண். (71)

(ப - ரை) கண்முக்கண்ணாய் - பெருமை பொருந்திய மூன்று கண்களையுடைய தலைவனே; இடப்பால் வானத்து எழுமதியை - இடது பக்கத்திலே ஆகாயத்தில் உதையமாகின்ற சந்திரனை; ஓர் மடப்பாவை தன்னருகே வைத்து - ஒப்பற்ற இளமையாகிய கங்காதேவியை வைத்து இருக்கிறாய்; இடப்பாகங் கொண்டாள் - இடது

பக்கத்தைத் தனக்குச் சொந்தமாகக் கொண்டவளாகிய; மலைப்பாவை கூறொன்றும் கண்டிலம் - மலைஅரசனுடைய புத்திரியாகிய பார்வதி தேவியினுடைய பங்கு இருக்கும் இடம் எங்களுக்குத் தெரியவில்லை ; நீ கண்டாயே-தலைவராகிய நீர் சகல பொருள்களிலும் நீக்கமற இருக்கின்ற உமக்குத் தெரியுமா.

(க - ரை) இறைவனே! நீர் கங்கையைச் சிரசில் வைத்து இருப்பது தெரிகிறது. உமாதேவியாரை வைத்து இருக்கிற இடமே தெரியவில்லை. நீரே உணர்த்தவேண்டும்.

அகரம் தொகுத்தல் விகாரம். இடப்பால் என்பதில் ஆல் மூன்றாம் வேற்றுமை உருபு. காண் முன்னிலை அசை.

கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன்—துண்டஞ்சேர்
விண்ணாறுந் திங்களாய் மிக்குலக மேழினுக்குங்
கண்ணாளா ஈதென் கருத்து. (72)

(ப - ரை) துண்டம்சேர் - பிளவு பொருந்திய;விண்ணாறும் திங்களாய் - ஆகாயததில் சஞ்சரிக்கின்ற சநதிரனைச் சிரசில் தரித்த கடவுளே ; மிக்கு உலகம் ஏழினுக்கும் கண்ணாளா - மேலே உள்ள ஏழும் கீழே உள்ள ஏழும் ஆக பதினாலு உலகத்துக்கும் தலைவனே ; ஈதென் கருத்து - இதுதான் என்னுடைய எண்ணம் ; கண்டு எந்தை என்று இறைஞ்சி கைப்பணியான் செய்யேன் - பிறதெய்வங்களைப் பார்த்து எமது கடவுள் என்று வணங்கித் திருத்தொண்டுகளைச் செய்யமாட்டேன் - அண்டம் பெறினும் அது வேண்டேன் ; செததுப் பிறக்கின்ற தெய்வங்களை வணங்கும்படியாக அண்டங்களை எனக்கு வெகுமதியாகக் கொடுத்தாலும் அதையும் விரும்பமாட்டேன்.

(க - ரை) இறைவனே! பிறந்திறநதுழலும் சிறிய தெய்வங்களைத் தெய்வமென நினைக்கமாட்டேன. இதுதான் என்னுடைய எண்ணம்.

செய்யேனே என்பதில் ஏகாரம் தேற்றம். பெறினும் என்பதில் உம்மை இழிவு சிறப்பு. பிறதெய்வங்களை வணங்கமாட்டேன் என்பதற்குத் திருவாசகம் அச்சப்பத்து 1 வது பாடலில் 'மற்றுமோர் தெய்

வம்' என்றார். மிக்குலக மேழினுக்கும் என்றமையால் மற்ற ஏழும் உடன் கூறப்பட்டன. இனங்கொளற் குரிததே என்றபடி.

கருத்தினால் நீகருதிற் றெல்லாம் உடனே
திருத்தலாஞ் சிக்கென நான் சொன்னேன்—பருத்தரங்க
வெள்ளநீ ரேற்றான் அடிக்கமலம் நீவிரும்பி
உள்ளமே எப்போதும் ஓது. (73)

(ப - ரை) உள்ளமே கருததினால் நீ கருதிற்றெல்லாம் - மனமே விவேகத்தினால் நீ நினைத்ததை எல்லாம்; உடனே திருத்தலாம் - அப்பொழுதே திருத்தம் செய்துகொள்ளலாம்; சிக்கென நான்சொன்னேன் - சுருக்கமாக நான் தெரிவித்தேன்; பருத்தரங்க வெள்ள நீர் ஏற்றான் அடிக்கமலம் - பெரிய அலைகள் பொருந்திய பெருக்காகிய கங்கையைச் சிரசில் தரித்த சிவபெருமானுடைய திருவடிததாமரையை; நீ விரும்பி எப்போதும் ஓது - நீ ஆசையோடு சதாகாலமும் துதித்துக்கொண்டு இருப்பாயாக.

(க - ரை) மனமே! சிவபெருமானுடைய திருவடியை இடையறாது துதிப்பாயேயானால் நீ நினைத்ததை எல்லாம் பெறலாம்.

கடவுளை எப்போதும் ஓது என்பதற்குத் திருவதிகைவீரட்டானம் பண் கொல்லி 6-வது பாடலில், 'நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்' என்றார் திருநாவுக்கரசரும். இன்னமும் திருவொற்றியூர்ப் பண் தக்கேசி 1-வது பாடலில், 'வழுக்கி வீழினும் திருப்பெயரல்லால் மற்றுநான் அறியேன் மறுமாற்றம்' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்.

ஓத நெடுங்கடல்க ளெத்தனையும் உய்த்தட்ட
வேது நிறைந்தில்லை என்பராற்—பேதையர்கள்
எண்ணா திடும்பலியால் என்னோ நிறைந்தவா
கண்ணார் கபாலக் கலம். (74)

(ப - ரை) கண்ணார் கபாலக்கலம் - சிவபெருமானே நீர் கையில் வைத்து இருக்கிற கண்கள் பொருந்திய பிரமகபாலமாகிய பிக்ஷாபாத்திரத்தில்; ஓத நெடுங்கடல்கள் எத்தனையும் உய்த்து - ஒலி பொருந்திய நீண்ட சத்தசமுத்திரத்திலும் உள்ள சலத்தை உலையில் பெய்து;

அட்ட - அதற்குத் தகுந்த அரிசியை இட்டுச்சமைத்த அன்னத்தைப் பாத்திரத்தில் இட்டகாலத்தில்; ஏதும் நிறைந்திலலை என்பர் - கொஞ்சமேனும் நிறையவில்லை என்று சொல்லுவீர் ; பேதையர்கள் எண்ணுது இடும்பலியால் - தாருகாவனத்து ரிஷிபத்தினிகள் மனதில் ஒன்றும் நினையாமல் இட்ட பிக்ஷயினுல் ; நிறைந்தவாறு என்னே - நிறைந்ததன்மை என்ன காரணமோ தெரியவில்லை.

(க - ரை) இறைவனே! அளவுபடாத அன்னத்தை இட்டகாலத்தில் நிறையாத பாததிரம், அளவுபட்ட பெண்கள் பிக்ஷ இட்டகாலத்தில் நிறைந்த காரணத்தை நீரே சொல்லி அருளல்வேண்டும்.

ஆல் அசை. வா என்பது வாறு என விரித்தல் விகாரம் பெற்றது. என்னே என்பதில் ஓகாரம் வினு.

கலங்கு புனற்கங்கை யூடால லாலும்
இலங்கு மதிஇயங்க லாலும்—நலங்கொள்
பரிசுடையான் நீள்முடிமேற் பாம்பியங்க லாலும்
விரிசடையாங் காணில் விசும்பு. (75)

(ப - ரை) விரிசடை யாம் காணில் - சிவபெருமானுடைய விரிந்த சடையை நாம் பார்க்கும்போது; கலங்கு புனல் கங்கையூடாலலாலும் - தெளிதலில்லாத நீரையுடைய கங்காதேவி சடையினுள்ளே சஞ்சரித்தலாலும் ; இலங்கு மதி இயங்கலாலும் - விளங்காநின்ற சந்திரன் தங்குவதினுலும் ; நலங்கொள் - நன்மையைக்கொண்ட ; பரிசுடையான் - (தம்மை அன்போடு வழிபட்டேத்தும் ஆன்மாக்களைப் பிறவியாகிய சாகரத்தினின்றும் முத்தியங் கரையில் சேர்ப்பதற்கு வைத்திருக்கிற) தெப்பத்தை உடையவனும் ; நீள்முடிமேல் பாம்பு இயங்கலாலும் - வளர்ச்சியையுடைய சடையினிடத்துச் சர்ப்பம் உலாவுவதாலும் ; விசும்பு - ஆகாயத்தைப்போல் விளங்குகிறது.

(க - ரை) கங்கையையும் சந்திரனையும் பாம்பையும் சிவபிரான் சிரசில் அணிந்து இருப்பதால் ஆகாயத்தைப்போல் விளங்குகிறது.

உம்மைகள் எண்ணும்மையில் வந்தன. பரிசுடையான் என்பதற்குத் திருவகுப்பு நான்காவது பாடல் 10-வது வரியில், 'ஏழுபிறவிக் கடலை யேறவிடுநற்கருணை ஓடக்காரனும்' என்ருர் அருணகிரியாரும்.

விசும்பில் விதியுடைய விண்ணோர் பணிந்து
பசும்பொன் மணிமகுடந் தேய்ப்ப—முசிந்தெங்கும்
எந்தாய் தழும்பேறி யேபாவம் பொல்லாவா
மந்தா மரைபோ லடி. (76)

(ப - ரை) எந்தாய் - எங்களுடைய தந்தையே ; விசும்பில் விதியோடு விண்ணோர் பணிந்து - தெய்வ உலகத்தில் பிரமதேவனுடன் தேவர்கள் வணங்கி ; பசும்பொன் மணிமகுடம் தேய்ப்ப - பசுமையாகிய பொன்னோடு இரத்தினம் வைத்து இழைக்கப்பட்ட கிரீடம் உராஞ்சுதலினால் ; அம் தாமரைபோல் அடி - அழகிய செந்தாமரை மலர்போன்ற திருவடியானது ; முசிந்து எங்கும் தழும்பேறியே - மெலிந்து எவ்விடங்களிலும் தழும்பாகப்போய்விட்டதே ; பாவம் பொல்லாவாம் - இக்கன்றிய திருவடியை யாங்கள் பார்க்கும்படியாகச் செய்த சஞ்சித வினைகள் மிகக் கொடியனபோலும்.

(க - ரை) முதல்வனே ! தேவர்கள் உமது திருவடியில் நமஸ்காரம் செய்வதினால் கன்றி இருக்கிறது ; அதனால் எங்கள் மனமும் கன்றி இருக்கிறோம். அதனை நீக்கி அருளல்வேண்டும்.

விதியோடு என்பது உடைய என வேற்றுமை மயங்கி வந்தது. தழும்பேறியே என்பதில் ஏகாரம் தேற்றம். முசித்தல் - மெலிதல். எங்கள் மனம் கன்றி இருககிறோம் என வருவிக்கப்பட்டது.

அடிபேரிற் பாதாளம் பேரும் அடிகள்
முடிபேரில் மாமுகடு பேரும்—கடக
மறிந்தாடு கைபேரில் வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்றா தரங்கு. (77)

(ப - ரை) அடிகள் - கடவுளே ; அடிபேரில் பாதாளம் பேரும் - உம்முடைய திருவடியைத் தூக்கிவைப்பீரேயானால் கீழேழு உலகங்களும் நிலை மாறிவிடும் ; முடிபேரில் மாமுகடுபேரும் - சிரசை அசைத்து நிர்த்தனம் செய்யத் துவக்குவீரேயானால் பெரிய அண்டமுகடுகள் பெயர்ந்துபோய்விடும் ; கடகமறித்தாடு கை பேரில் வான் திசைகள் பேரும் - கடகத்தை யணிந்த கையைத் திருப்பித் தூக்குவீரேயானால் பெருமை பொருந்திய அட்ட திசைகளும் தன்னிலை

குலைந்துபோய்விடும் ; அறிந்துஆடும் - நிருத்த பேதங்களைத் தெரிந்து ஊர்த்தவ தாண்டவம் ஆடுகின்ற உமக்கு ; அரங்கு ஆற்றாது - நாடக சாலை இடங் கொடாது.

(க - ரை) இறைவனே ! சகல உலகங்களும் அவயவமாக உடைய உமக்கு நிர்த்தனம் செய்ய இடம் கிடையாது.)

மறிதது என்பது மறிந்து என மெலித்தல் விகாரம். 'சகல உலகமும் அவயவம்' என்பதற்கு, 'வேதண்ட மேபுயங்கள் விண்ணே திருமேனி, மூதண்டகூடமே மோலியாங்—கோதண்டம், ஒற்றை மாமேரு உமாபதியார் நின்றாடப், பற்றுமோ சிற்றம்பலம்' எனச் சிதம்பர மும்மணிக்கோவை கூறுகிறது.

அரங்கமாப் பேய்க்காட்டி லாடுவான் வாளா
இரங்குமோ எவ்வுயிர்க்கும் ஏழாய்—இரங்குமேல்
என்னாகை வையான்தான் எவ்வுலக மீந்தளியான்
பன்னாள் இரந்தாற் பணிந்து. (78)

(ப - ரை) ஏழாய் - ஆணவமலத்தால் மறைப்புண்ட மனமே ; அரங்கமா - நடனசபையாக ; பேய்க்காட்டி லாடுவான் - பேய்கள் ஆடுகின்ற காட்டினிடத்தே ஆடுகின்றவன் ; வாளா - சும்மா ; எவ்வுயிர்க்கும் - எல்லா உயிர்க்கும் ; இரங்குமோ-அருள் சுரக்குமோ; பன்னாள் - பல தினங்களில் ; பணிந்து - வணங்கி ; இரந்தால் - யாசித்தால் ; இரங்குமேல்-சிற்சத்தியானவள் அருள் சுரப்பாளானால் ; என்னாகவையான் - எதுவாகச் செய்யமாட்டான் ; எவ்வுலகம் ஈந்து அளியான் - எந்த உலகத்தைத்தான் கொடுத்து அருள்செய்யமாட்டான்.

(க - ரை) (ஆண்டவனைப் பணிந்தாலன்றி அருள்பெறுதலாகாது.

தான் என்பது அசை.ஓ என்பது எதிர்மறை. ஏழாய் என்பதைப் பேறறிவில்லாத மனமே எனக் கொள்வாரும் உண்டு. சிற்சத்தி வருவிக்கப்பட்டது.)

பணிந்தும் படர்சடையான் பாதங்கள் போதால்
அணிந்தும் அணிந்தவரை யேத்தத்—துணிந்தென்றும்
எந்தையார்க் காட்செய்யப் பெற்ற இதுகொலோ
சிந்தையார்க் குள்ள செருக்கு. (79)

(ப - ரை) என்றும்-எப்பொழுதும்; பணிந்தும் - வணங்கியும்; படர்சடையான் பாதங்கள் - விரிந்த சடையையுடைய சிவபெருமானது திருவடிகளில்;போதால் அணிந்தும் புட்பங்களால் அருச்சித்தும்; அணிந்தவரை ஏத்தத் துணிந்து - சரியை கிரியை வழியாகப் பூசிக்கின்ற அடியார்களை வாயினால் துதிக்க உறுதிகொண்டு; எந்தையார்க்கு ஆட்செய்யப்பெற்ற - எம்முடைய தந்தையாகிய சிவபெருமானுக்கு அடிமையாகின்ற தன்மையை அடைந்த; இதுகொலோ - இந்தத் தன்மையினாலேயோ; சிந்தையார்க்கு உள்ள செருக்கு - மனதிற்கு உண்டாகிய இறுமாப்பு.

(க - ரை) சிவனடியாருக்கும் சிவபெருமானுக்கும் அடிமையாகின்ற திருத்தொண்டு கைவந்துவிட்டதென்றல்லவா மனம் செருக்கடைந்திருக்கிறது?

சிந்தையார் என ஆர்விகுதி உயர்வுநோக்கி வந்தது. கொலோ என்பதில் ஓகாரம் வினா. செருக்கடைந்திருக்கிறது என்பதற்குத் திருஅங்கமாலை 11 வது பாடலில், 'சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றுஅங்கு, இறுமாந் திருப்பன் கொலோ' என்றார் திருநாவுக்கரசரும்.

> செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள்
> அரக்கனையும் முன்னின் றடர்த்த—திருத்தக்க
> மாலயனுங் காணா தரற்றி மகிழ்ந்தேத்தக்
> காலனையும் வென்றுதைத்த கால். (80)

(ப - ரை) கால் - இறைவனே உம்முடைய திருவடியானது; செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்டோள் அரக்கனையும் முன்னின்றடர்த்த - ஆணவமல இறுமாப்பினால் கைலாச மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற இருபது கரங்களையுடைய இராவணனுக்கு முற்பட்டு நெருங்கியதும்; திருத்தக்க - அழகான தன்மையையுடைய; மாலயனும் காணாதரற்றி மகிழ்ந்தேத்த - விட்டுணுவும் பிரமதேவனும் அடியையும் முடியையும் பார்க்கமுடியாமல் ஓலமிட்டு முதல்வனது குணங்களைச் சந்தோஷத்துடனே துதித்தும்; காலனையும் வென்று உதைத்த - பாசக் கயிற்றினால் வீசிய இயமனைவென்று உதைத்துத் தள்ளியதும் அத்திருவடியே.

(க - ரை) பரமபதியே! இராவணனை ஊன்றி நசிக்கியருளியதும், பிரமவிட்டுணுக்கள் துதித்ததும், இயமனை உதைத்துத் தள்ளியருளியதும் உமது திருவடியே.

எதனையோ என்பதில் ஓகாரம் வினா. காலனை யுதைத்தான் என்பதற்குத் தாயுமானவர் உடல் பொய்யுறவு 43-வது பாடலில் 'காலன்றனை யுதைத்தான் காமன்றனை எரித்தான்' என்றார்.

காலனையும் வென்றோங் கடுநரகங் கைகழன்றோம்
மேலை யிருவினையும் வேரறுத்தோங்—கோல
அரணார் விந்தழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து. (81)

(ப - ரை) அரவிந்து - தாமரை மலர்போல வட்டமாகிய; கோல அரணம் - அழகிய திரிபுரத்து அசுரர்கள் கோட்டையை; அழிய - அழிக்கும்படியாக - வெந்தீ அம்பு எய்தான் - அக்கினியாஸ்திரத்தை எய்தருளியவனுடைய; சரண அரவிந்தங்கள் சார்ந்து - திருவடியாகிய தாமரை மலரை அடைந்து; காலனையும் வென்றோம் - இயமனையும் செயித்தோம்; கடுநரகம் கைகழன்றோம் - கொடுமையாகிய நரகத்துக்குச் செல்லுதலை விட்டு நீங்கினோம்; மேலை இருவினையும் வேரறுத்தோம்-சஞ்சிதம் ஆகாமியம் என்னுமிருவினைகளின் வேரைக் களைந்துவிட்டோம்.

(க - ரை) திரிபுரத்தை அழித்த சிவபெருமானுடைய திருவடியை அடைந்து இயமனைச் செயித்தோம்; நரகத்தை நீங்கினோம்; வினைகளின் வேரைக் களைந்து விட்டோம்.

காலனையும் இருவினையும் என்பன எண்ணும்மைகள். கோல அரணம் சரண அரவிந்தம் வடமொழிச் சந்திகள். அம் என்பது அசை.

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே யொத்திலங்கிச் சாராது
பேர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியவா—நேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிருஞ் சாயுந் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கு மின். (82)

(ப - ரை) தழல்வண்ணன் வீழ்சடை - அக்கினி நிறமாகிய திருமேனியையுடைய சிவபிரானது தாழ்ந்த சடை (எப்படி இருக்கிற

தென்றல்); சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்து இலங்கி-தியான வகையால் நெருங்கிப் பார்க்கின்றவர்களுக்குப் பொன்னினது கொழுந்தைப்போலப் பிரகாசித்தும்; சாராது பேர்ந்தார்க்குத் தீக்கொடியின் பெற்றியவாம் - சமீபியாது தூரத்தே பார்க்கின்றவர்களுக்கு அக்கினி நீண்ட கொடிபோல் விளங்குவதை ஒக்கும்; நேர்ந்துணரில் - நிதானித்துப் பார்க்குமிடத்து; தாழ்சுடரோன் செங்கதிரும் - கீழ் நோக்கிய ஒளியை உடைய சூரியனது சிவந்த கிரணங்களும்; சாயும் மின் - வளைவாகிய மின்னலையும்; என்றுரைக்கும் - என்பதாக உலகம் சொல்லும்.

(க - ரை) சிவபெருமானுடைய சடையானது அன்பர்க்குப் பொன்னிறமாகவும், அஃதில்லார்க்கு அக்கினியாகவும், ஊன்றிப் பார்க்குமிடத்துச் சூரிய கிரணத்தையும் மின்னலையும் ஒத்து விளங்கும்.

சடையே என்பதில் ஏகாரம் அசை. நிறை பெற்றியவாம் என்பதில் மகரமெய் விரித்தல் விகாரம்.

மின்போலுஞ் செஞ்சடையான் மாலோடும் ஈண்டிசைந்தால்
என்போலுங் காண்பார்கட் கென்றிரேல்—தன்போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றுந் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது. (63)

(ப - ரை) நெடிது மின்போலும் செஞ்சடையான் - நீண்ட மின்னலைப் போன்ற சிவந்த சடையையுடைய சிவபெருமான்; மாலோடும் ஈண்டு இசைந்தால் - விட்டுணு ஓடும் இவ்விடத்துச் சேர்ந்து இருந்தால்; என்போலும் காண்பார்கட்கு என்றீரேல் - எப்படியாக விளங்கும் பார்க்கின்றவர்களுக்கு என்று கேட்பீர்களேயானால்; தன்போலும் பொற்குன்று - தன்னைப்போன்ற பொன்மலையும்; நீலமணிக்குன்றும் - விட்டுணுவைப் போன்ற நீலஇரத்தினமலையும்; தாம் உடனே நிற்கின்றபோலும் - இரண்டும் ஒன்று சேர்ந்து நிற்கின்றதை ஒத்து விளங்கும்.

(க - ரை) சிவபெருமான் ஒரு பக்கத்தில் விட்டுணுவை வைத்திருந்தால் எப்படியாக இருக்குமெனில் பொன்மலையோடு நீல இரத்தினமலையும் சேர்ந்து இருத்தலை ஒத்து விளங்கும்.

என்றீரேல் என்பது என்றிரேல் எனச் சந்தம் நோக்கிக் குறுக்கல் விகாரம் பெற்றது.

நெடிதாய பொங்கெரியுந் தண்மதியும் நேரே
கடிதாங் கடுஞ்சுடரும் போலும்—கொடிதாக
விண்டார்கள் மும்மதிலும் வெந்தீ யினில்அழியக்
கண்டாலும் முக்கணாங் கண். (84)

(ப - ரை) நெடிதாய பொங்கு எரியும் - நீண்ட சுவாலையோடு விளங்குகின்ற அக்கினியும்; நேர்தண்மதியும் - ஒழுங்காகிய குளிர்ச்சி பொருந்திய சந்திரனும்; கடிதாம் கடுஞ்சுடரும் - காலத்தைக் காட்டுகின்ற வெப்பம் பொருந்திய கிரணத்தையுடைய சூரியனும்; கண் போலும் - மூன்று கண்களாக அமைந்திருக்கின்றன போலும்; கொடிதாக விண்டார்கள் மும்மதிலும் - கொடுமையோடு பகைத்த திரிபுரத்து அசுரர்களுடைய மூன்று கோட்டைகளையும்; வெந்தீயினில் அழியக் கண்டாலும் - வெப்பம் பொருந்திய அக்கினிக் கண்ணால் அழித்தபோதிலும்; முக்கண் ஆம் - மூன்று கண்களினாலேதான் அழிந்து இருக்குவேண்டும்.

(க - ரை) முதல்வனே! நீர் திரிபுரத்தைச் சிரித்து எரித்தீரோ, அக்கினிக் கண்ணினால் எரித்தீரோ, அல்லது மூன்று கண்ணின் உதவியினால் எரித்தீரோ இந்த இரகசியம் உமக்குத்தான் தெரியும்.

நேரே என்பதில் ஏகாரம் அசை. மும்மதிலும் என்பதில் உம்மை முற்றும்மை.

கண்ணாரக் கண்டும்என் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தால் எண்ணியும்—விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியானைக் காணப் பெறின். (85)

(ப - ரை) பெரியானைக் காணப் பெறின் - எப்பொருட்கும் பெரியவனாக உடைய சிவபெருமானை நேரே காண்பேனேயானால்; கண்ணாரக்கண்டும் - கண்கள் நிறையப் பார்த்தும்; என்கை ஆர்க்கூப்பியும் - என்னுடைய கரங்கள் சிரசில் பொருந்தும்படி கும்பிட்டும்; எண்ணார எண்ணத்தால் எண்ணியும் - சகஸ்திரநாமத்துக்குப் பொருந்

தமாக மனதால் துதித்தும் - விண்ணோன் என்று - தேவாதி தேவன் என்றும்; எரியாடி என்றும் - அக்கினி மயமாகிய சுடலையில் ஆடுகின்றவனென்றும்; இன்புறுவன் - இவ்விதமாகத் தோத்திரஞ் செய்து சந்தோஷிப்பேன்.

(க - ரை) பரமேசுரனே! உம்மைத் தியானத்து, ஞானக்கண்ணினால் காணுவேனேயானால் திரிகரணங்களினாலும் வழிபட்டு வந்தனை செய்து சந்தோஷிப்பேன்.

பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கீ
துறினும் உறாதொழியு மேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம். (86)

(ப - ரை) ஒருகண் நெற்றிமேல் வைத்தான் - ஒரு கண்ணை நெற்றியினிடத்துக் காட்டப்பட்ட சிவபிரான்; நமக்குச் சிறிதுணர்த்தி - நம்போன்ற அடியார்களுக்குச் சிறிது திருவருள் பாலித்து; தன்பேயாய நற்கணத்தில் ஒன்றாய நாம் - தன்னுடைய பேயாகிய நல்ல கூட்டத்தில் ஒன்றாகிய நானும் என்போன்றவர்களும்; ஈது உறினும் உறாதொழியுமேனும் - இத்திருவருள் கொஞ்சம் கிடைத்தாலும் அல்லது கிடைக்காமற் போய்விட்டாலும்; பிறிது பெறினும் - பிறந்து இறந்து உழலும் சிறிய தெய்வங்களின் திருவருளைப் பெற்றாலும்; யாதும் வேண்டேம் - எதையும் ஒரு பொருளாக மதிக்கமாட்டோம்.

(க - ரை) நம்போன்ற அடியார்களுக்கு இறைவன் திருவருளைக் கொடாவிட்டாலும் சிறிய தெய்வங்களை வழிபட்டு அதனாலுண்டாகிய பிரயோசனத்தை மதிக்கமாட்டோம்.

மற்று அசை. வேண்டேம் என்பதில் மகரமெய் விரித்தல் விகாரம் 'அவனையே வணங்கிப் பெறுவோம்' என்பதாகும். பிறதெய்வத்தை நினைக்கமாட்டேன் என்பதற்குப் போற்றித் திருவகவல் 74-வது வரியில் 'மற்றோர் தெய்வம் கனவிலும் நினையா' என்றார் மணிவாசகர்.

நாமாலை சூடியும் நம்மீசன் பொன்னடிக்கே
பூமாலை கொண்டு புனைந்தன்பாய்—நாமோர்

அறிவினையே பற்றினால் எற்றே அடுமே
எறிவினையே என்னும் இருள். (87)

(ப - ரை) நம்மீசன் பொன்னடிக்கே - நமது கடவுளுடைய அழகிய திருவடிக்கு; அன்பாய் - அன்போடு; நாமாலை சூடியும் - நாம் பாமாலைகளைச் சாத்தியும்; அன்பாய்ப் பூமாலை கொண்டு புனைந்தும் - அன்புடனே பூமாலையைக் கொண்டு அலங்கரித்து அர்ச்சித்தும்; நாம் ஓர் அறிவினையே பற்றினால் எற்று - நாம் கடவுளை அறியும் தியானவழியைக் கைப்பற்றிச் சென்றால் எத்தன்மை ஆகும்; எறிவினையே என்னும் இருள் - குறிப்பாகச் சொல்லுகின்ற ஆணவம் கன்மம் மாயை என்று சொல்லப்பட்ட அந்தகாரமானது; ஏது - இல்லையாகி; அடும் - நசித்துப் போய்விடும்.

(க - ரை) நாம் இறைவனுக்குப் பாமாலையையும் பூமாலையையும் அன்போடு அணிவோமானால் நம்மை மறைத்த மலங்கள் நீங்கிவிடும்.

அடுமே என்பதில் ஏகாரம் அசை. பொன்னடிக்கே என்பதில் ஏகாரம் தேற்றம். எறி குறிப்பாகச் சொல்லுகை. வினைக்கு ஏதுவாகிய மலங்கள் வருவிக்கப்பட்டன. அன்பாய் என்பது இரண்டிடத்தும் கூட்டப்பட்டது.

இருளி னுருவென்கோ மாமேக மென்கோ
மருளில் மணிநீல மென்கோ—அருளெமக்கு
நன்றுடையாய் செஞ்சடைமேல் நக்கிலங்கு வெண்மதியம்
ஒன்றுடையாய் கண்டத் தொளி. (88)

(ப - ரை) நன்று உடையாய் - எப்பொழுதும் சுகத்தை உடையவனே; செஞ்சடைமேல் - சிவந்த சடையின்மீது; நக்கு இலங்கு வெண்மதியம் ஒன்று உடையாய் - மிகவும் பிரகாசிக்கின்ற வெள்ளிய சந்திரன் ஒன்றை அணிந்த முதல்வனே; கண்டத்துஒளி - உம்முடைய கழுத்தினது பிரகாசம் எத்தன்மையது; இருளின் உரு என்கோ - இருட்டினது வடிவமென்று சொல்லுவேனோ; மாமேகம் என்கோ - பெருமை பொருந்திய மேகமென்று சொல்லுவேனோ; மருள் இல் நீலமணி என்கோ - மயக்கம் இல்லாத நீலஇரத்தினமென்று சொல்லுவேனோ; எமக்கு அருள் - அப்பனே எங்களுக்குச் சொல்லி அருளல்வேண்டும்.

(க - ரை) இறைவனே! உம்முடைய கண்டத்து ஒளியை இருட்டையும் மேகத்தையும் நீலஇரத்தினத்தையும் போன்றதென் பேனோ, வேறெதுவென்பேனோ? நீர்தான் உணர்த்தவேண்டும்.

நக்கு இலங்கு மீமிசைப்பதம் ஓகாரங்கள் மூன்றும் வினா. நன்றுடையாய் என்பதற்குத் திருச்சிராபள்ளி பண் 1-வது பாடல் 'நன்றுடையானைத் தீயதில்லானை' என்றார் திருஞானசம்பந்தரும்.

ஒளிவி லிவன்மகனை ஒண்பொடியா நோக்கித்
தெளிவுள்ள சிந்தையினிற் சேர்வாய்—ஒளிநஞ்சம்
உண்டவாய் அஃதிருப்ப வுன்னுடைய கண்டம்இருள்
கொண்டவா றென் இதனைக் கூறு. (89)

(ப - ரை) ஒளிவில் இவன் மகனை - ஒளி பொருந்திய வில்லைத் தாங்கிய விட்டுணுவின் புத்திரனாகிய மன்மதனை; ஒண் பொடியா நோக்கி - ஒளி பொருந்திய சாம்பராகும்படி பார்த்து; தெளி உள்ள சிந்தையினில் சேர்வாய் - கருவிகரணங்களும் ஆணவாதி மலங்களும் நீங்கிப் பரிபக்குவமுடைய ஆன்மாக்களில் தங்குகின்றவனே; ஒளி நஞ்சம் உண்டவாய் அஃது இருப்ப - ஒளி பொருந்திய நஞ்சைப் புசித்த வாயானது சும்மா இருக்கவும்; உன்னுடைய கண்டம் இருள் கொண்டவாறு என் - உம்முடைய கழுத்து கரிய நிறத்தை யடைந்த தன்மை யாது; இதனைக் கூறு - இக்காரியத்தை எங்களுக்கு விபரமாய் எடுத்துச் சொல்ல வேண்டும்.

(க - ரை) முதல்வனே! விடம் உண்டவாய் கருமையுறாது கண்டம் கறுத்து இருக்கிற காரணம் தெரியவில்லை; நீரே எங்களுக்குச் சொல்லல் வேண்டும்.

சிந்தையினில் சேர்வாய் என்பதற்குத் திருக்கோவையார் 5-வது பாடலில் 'அணியும் அமிழ்தும் என் ஆவியும் ஆயவன் தில்லைச் சிந்தாமணி'—என்றார் மாணிக்கவாசகரும். 'நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே, புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்.'—என்றார் வாகீசரும்.

கூறெமக்கீ தெந்தாய் குளிர்சடையை மீதழித்திட்
டேறமிகப் பெருகின்என் செய்தி—சீறி

*விழித்தூரும் வாளரவும் வெண்மதியும் ஈர்த்துத்*
*தெழித்தோடுங் கங்கைத் திரை.* (90)

(ப - ரை) *குளிர் சடையைமீது அழித்திட்டு ஏற மிகப் பெருகின் - குளிர்ந்த சடையை மேலே அழித்து விட்டு அதிகமாகப் பெருகினாலும்; சீறி விழித்தூரும் வாளரவும் - சீறுதலுடனே கண்ணை விழித்துச் செல்கின்ற ஒளி பொருந்திய சர்ப்பத்தையும்; வெண்மதியும் - வெள்ளிய சந்திரனையும்; கங்கைத் திரை - சடையிலிருக்கின்ற கங்கையினுடைய அலைகளானவை; ஈர்த்துத் தெழித்தோடும் - இழுத்துக் கொண்டு அதிக வேகமாக ஓடினாலும்; என் செய்தி - நீர் என்ன செய்குவாய்; எந்தாய் - எமது தலைவனே; ஈது எமக்குக் கூறு - இந்த விஷயத்தை எங்களுக்குச் சொல்லி அருள்வாய்.*

(க - ரை) *சிவபெருமானே! சந்திரனையும் சர்ப்பத்தையும் கங்கையானது அதிகக் கோபமாய்ப் பெருகி இழுத்துக் கொண்டு ஓடினால் உம்மால் தடுக்க முடியுமா அதை எங்களுக்குச் சொல்ல வேண்டும்.*

*எமக்கு என்பது தன்மைப் பன்மை தம்போன்ற அடியார்களையும் குறிக்கிறது.*

*திரைமருவு செஞ்சடையான் சேவடிக்கே ஆளாய்*
*உரைமருவி யாமுணர்ந்தோங் கண்டீர்—தெரிமினோ*
*இம்மைக்கும் அம்மைக்கும் எல்லாம் அமைந்தோமே*
*எம்மைப் புறனுரைப்ப தென்.* (91)

(ப - ரை) *திரைமருவு செஞ்சைடையான் சேவடிக்கே ஆளாய் - கங்கையினுடைய அலைகள் பொருந்திய சிவந்த சடையையுடைய சிவபிரானது சிவந்த திருவடிக்கு ஆளாகும்படி; உரைமருவியாம் உணர்ந்தோம் - பஞ்சாக்கரதத்தை விதிப்படி ஓதி முத்திக் கேதுவாகிய வழியைத் தெரிந்து கொண்டோம்; கண்டீர் - பார்த்தீர்களா; இம்மைக்கும் அம்மைக்கும் இப்போதைக்கும் மறுமைக்கும் வேண்டிய; எல்லாம் அமைந்தோமே - எல்லாக் காரியங்களையும் தியானத்தின் வழியாய்க் கைவரப் பெற்றோமே; தெரிமினோ - தெரிந்து கொண்டீர்களா; எம்மை - எங்களை; புறன் உரைப்பது என் - தெய்வ நிச்சயம் அறியாத புறச் சமயத்தோடு சேர்த்து எண்ணுவது என்ன காரணம்?*

(க - ரை) சிவபெருமானே! உம்மை அடைய வேண்டிய வழியை ஆசான் மூலமாய்த் தெரிந்து வழிபடும் போதும் உலகத்தவர் எங்களைப் புறச் சமயத்தோடு சேர்த்து எண்ணுவது என்ன காரணம்? அதை நீர் தான் சொல்ல வேண்டும்.

சேவடிக்கே என்பதில் ஏகாரம் தேற்றம். ஆமைந்தோமே என்பதில் ஏகாரம் அசை.

என்னை யுடையானும் ஏகமாய் நின்றானுந்
தன்னை யறியாத தன்மையனும்—பொன்னைச்
சுருளாகச் செய்தனைய தூச்சடையான் வானோர்க்
கருளாக வைத்த அவன். (92)

(ப - ரை) பொன்னைச் சுருளாகச் செய்தனைய - பொன்னாலாகிய தகட்டினைச் சுருட்டி விட்டதைப் போன்ற; தூச்சடையான் - பரிசுத்தமாகிய சடையை உடையவனும்; வானோர்க்கு-தேவர்களுக்கு; அருளாக - கிருபையாக; வைத்த - தேவ உலகத்தை இடமாகவைத்த; அவன் - அக்கடவுளானவன் எதன்மை உடையவ னென்றால்; என்னையுடையானும் - என்னை அடிமை கொண்டவனும்; ஏகமாய் நின்றானும் - தனித்து நிற்கின்றவனும்; தன்னை யறியாத தன்மையனும் - தன்னை இத்தன்மை யுடையவனென்று அறியாதவனும் ஆவான்.

(க - ரை) தேவர்களுக்குக் கிருபையோடு தெய்வ உலகத்தை இடமாகக் கொடுத்தருளிய பொன்போன்ற சடையையுடைய சிவபிரான் என்னை அடிமை கொண்டவனும் தனித்து நிற்கின்றவனும் தன்னை இததன்மையுடையவ னென்று அறியாதவனும் அக்கடவுளே ஆவான்.

தன்னை அறியாதவன் என்பதனைத் திருச்சாழல் 19-வது பாடலில் 'தம்பெருமை தானறியாத் தன்மையன் காண் சாழலோ' என்றார் மணிவாசகனார். தனித்திருத்தலைச் சிவஞானபோதம் 2-ம் சூத்திரத்தில் 'தானேயாய்'—என்றார்.

அவன்கண்டாய் வானோர் பிரானவான் என்றும்
அவன்கண்டாய் அம்பவள **வண்ணன்**—அவன்கண்டாய்

மைத்தமர்ந்த கண்டத்தான் மற்றவன்பால் நன்னெஞ்சே
மெய்த்தமர்ந்தன் பாய்நீ விரும்பு. (93)

(ப - ரை) நன்னெஞ்சே - நன்மையைச்செய்கின்ற மனமே - என்றும் - எப்பொழுதும்; வானோர் பிரானுவான் அவன்கண்டாய்; தேவர்களுக்குத் தலைவனாக இருப்பவன் அக்கடவுளே என்று தெரிந்து கொள்வாய்; அம்பவள வண்ணன் அவன்கண்டாய் - அழகிய பவளம் போன்ற நிறத்தையுடையவன் அக்கடவுளே என்று அறிந்து கொள்வாய்; மை - கருமைநிறமானது; தமர்ந்த - பொருந்திய; கண்டத்தான் - கண்டத்தை யுடையவன்; அவன்கண்டாய் - அம்முதல்வனே என்று உணர்ந்து கொள்வாய்; அவன்பால் - அக்கடவுளிடத்து; மெய்த்து - உண்மையாக; அன்பாய் அமர்ந்து - அன்புடனே தங்கி; நீ விரும்பு - நீ இடைவிடாது தியானஞ்செய்.

(க - ரை) நீலகண்டத்தை யுடையவனும் பவளம்போன்ற சரீரத்தையுடைவனும் தேவர்கள் தலைவனும் ஒருவனே என்று அன்போடு தியானஞ்செய்வாய்.

மற்று - அசை.

விருப்பினால் நீபிரிய கில்லாயோ வேறா
இருப்பிடமற் றில்லையோ என்னோ—பொருப்பன்மகள்
மஞ்சுபோல் மால்விடையாய் நிற்பிரிந்து வேறிருக்க
அஞ்சுமோ சொல்லாய் அவள். (94)

(ப - ரை) மஞ்சுபோல் மால்விடையாய் - மேகத்தைப்போன்ற விட்டுணுவை இடபவாகனமாக உடைய முதல்வனே; விருப்பினால் நீ பிரியகில்லாயோ - உமாதேவியின் மீது வைத்த விருப்பத்தினால் நீ பிரிய மாட்டாயோ; வேறா-தனியாக; இருப்பிடம் மற்றில்லையோ - அவள் தங்குவதற்கு வேறேஇடம் கிடையாதோ; என்னோ - என்ன காரணமோ; பொருப்பன்மகள் - மலை அரசன் புத்திரியானவள்; நிற்பிரிந்து வேறிருக்க - உன்னைப் பிரிந்து தனியாக இருக்க; அவள் - அப்பார்வதியானவள்; அஞ்சுமோ சொல்லாய் - பயப்படுவாளோ அவ்வுண்மையைச் சொல்லியருள்வாய்.

(க - ரை) முதல்வனே! பார்வதியின் மீதுவைத்த விருப்பத்தி ஞல் நீ பிரியமாட்டாயோ, அல்லது தனியாகத்தங்குவதற்கு இடங் கிடையாதோ; அவள்தனித்திருக்கப் பயப்படுவாளோ அறியேம்.

ஓகாரங்கள் மூன்றும் விஞப்பொருளில் வந்தன.

அவளோர் குலமங்கை பாகத் தகலாள்
இவளோர் சலமகளும் ஈதே—தவளநீ
றென்பணிவீ ரென்றும் பிரிந்தறியீர் ஈங்கிவருள்
அன்பணியார் சொல்லுமினிங் கார். (95)

(ப - ரை) தவளநீறு என்பு அணிவீர் - வெள்ளிய விபூதியையும் என்பையும் அணியுங் கடவுளே; அவளோர் குலமங்கை பாகத்த கலாள் - அப்பார்வதியானவள் ஒப்பற்ற கற்பு நிறைந்த பெண்ணுத லால் பாகத்தைவிட்டு ஒருகாலத்திலும் நீங்கமாட்டாள்; இவளோர் சலமகளும் - இவள் ஒருசலவடிவாகிய பெண்ணுனவள்; மீது - சிர சின் மேலே இருக்கிருள்; என்றும் பிரிந்தறியீர் - ஒரு காலத்திலும் இவர்களைவிட்டுப் பிரிந்து அறியமாட்டீர்; ஈங்கு இவருள்-இவ்விடதது இவர்களுள்ளே; அன்பு அணியார் - அன்பையே ஆபரணமாகக் கொண்டவர்கள்; இங்கு ஆர் - இப்போது எவர்; சொல்லுமின் - சொல்லுவீராக.

(க - ரை) தலைவனே! முடியில் கங்கையையும் பக்கத்திற் பார் வதியையும் நீர்விட்டு நீங்காமல் இருந்தபோதிலும் இவருள் அன்பு நீங்காமல் இருக்கின்றவர்கள் யார்?

ஏகாரம் - அசை.

ஆர்வல்லார் காண அரனவனை அன்பென்னும்
போர்வை யதனுலே போர்த்தமைத்துச்—சீர்வல்ல
தாயத்தால் நாமுந் தனிநெஞ்சி னுள்ளடைத்து
மாயத்தால் வைத்தோம் மறைத்து. (96)

(ப - ரை) அரன் அவனை - சம்மாரகர்த்தாவாகிய கடவுளை; காணவல்லார்ஆர் - கண்டு தெரிசிக்கவல்லவர் எவர் - அன் பென்னும் போர்வை அதனுலே - அன்பென்று சொல்லப்பட்ட போர்வையி னுலே - போர்த்தமைத்து - அப்போர்வையினுலே மூடி அமையச்

செய்து ; சீர் - சிறப்புப்பொருந்திய ; வல்லதாயத்தால் - வல்லமையுடைய சுற்றமாதலினாலே ; நாமும் - நானும்; தனிநெஞ்சின் உள்ளடைத்து - ஒப்பற்றமனத்தின் உள்ளே புகுவித்து; மாயத்தால் மறைத்து வைத்தோம் - தந்திரத்தால் மூடிவைத்து இருக்கின்றோம்.

(க - ரை) அன்பில்லாதவர்கள் காணமுடியாத கடவுளை அன்பாகிய போர்வையினாலே மூடிமனத்தின் உள்ளே மறைத்து வைத்து இருக்கின்றோம். அன்பினால் கடவுளைக்காணலாம் என்பதற்குத் திருக்களிற்றுப்படியார் 15-வது பாடலில் 'ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்-ஆரேனுங்காணா அரன்' என்றார். 'அன்போடுருகி அகங்குழைவார்க்கன்றி என்பொன்மணியினை எய்த ஒண்ணாதே' என்றார் திருமூலரும்.

மறைத்துலக மேழினிலும் வைத்தாயோ அன்றேல்
உறைப்போடும் உன்கைக்கொண் டாயோ—நிறைத்திட்
டுளைந்தெழுந்து நீஎரிப்ப மூவுலகும் உள்புக்
களைந்தெழுந்த செந்தீ யழல். (97)

(ப - ரை) நீ - திரிபுர சம்மாரகர்த்தாவாகிய கடவுளே நீர் ; மூவுலகும் எரிப்ப - மூன்று அசுரர்களுடைய கோட்டைகளை அழிக்கும்படியாக ; உள்புக்கு - உள்ளே புகுந்து ; உளைந்தெழுந்து - வருத்தும்படியாகப் புறப்பட்டு ; அளைந்தெழுந்த - கலந்து எழுந்த ; செந்தீயழல் - சிவந்த நிறமாகிய அக்கினியை ; உலகம் ஏழினிலும் - சப்த உலகங்களிலும்; மறைத்து வைத்தாயோ-மறைவாக அமர்த்திவைத்து இருக்கின்றாயோ; அன்றேல் - அல்லது ; நிறைத்திட்டு - நிறையும்படியாகச் செய்து ; உறைப்போடும் - அதிக உக்ஷணத்தோடும் ; உன் கைக்கொண்டாயோ - உன்னுடைய கரத்திலே வைத்து இருக்கின்றாயோ.

(க - ரை) முதல்வனே ! திரிபுரத்தை எரித்த அக்கினியை உலகத்தில் மறைத்து வைத்து இருக்கின்றாயோ அல்லது கையில் வைத்து இருக்கின்றாயோ அறியேன்.

உறைப்போடும் என்பது முற்றும்மை.

'அழலாட அங்கை சிவந்ததோ அங்கை
அழகால் அழல்சிவந்த வாறோ—கழலாடப்

பேயாடு கானிற் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாய்இதனைச் செப்பு. (98)

**(ப - ரை)** கழல்ஆட - வீரக்கழல் சப்திக்கும்படியாக ; பேயாடு-பேய்க்கூட்டங்களாடுகின்ற; கானில்-சர்வ சூனிய மயானத்தில்; பிறங்க அனல் ஏந்தி தீயாடுவாய் - விளங்கும்படியாக அக்கினியைக் கரத்தில் தாங்கிக்கொண்டு அக்கினியிலேயே நிர்த்தனம் பண்ணுகின்ற கடவுளே ; அழல் ஆட அம்கை சிவந்ததோ - அக்கினியானது கரத்தில் பொருந்தி இருப்பதால் அழகிய கை சிவப்பாம் தன்மை அடைந்து இருக்கின்றதோ அல்லது ; அம்கை அழகால் அழல் சிவந்தவாறோ - அழகிய கையிலுள்ள அழகினாலே அக்கினியானது சிவந்த நிறத்தை அடைந்திருக்கின்றதோ ; இதனைச் செப்பு - இவ்விஷயத்தை எனக்குச் சொல்லி அருளல்வேண்டும்.

**(க - ரை)** இறைவனே ! கரத்தில் அக்கினி இருப்பதால் கை சிவந்ததோ, கையில் அக்கினி தங்குவதால் அதன் அழகால் அக்கினி செந்நிறம் பெற்றதோ சொல்லல்வேண்டும்.

ஓகாரங்கள் இரண்டும் வினா.

செப்பேந் திளமுலையாள் காணவோ தீப்படுகாட்
டப்பேய்க் கணமவைதாங் காணவோ—செப்பெனக்கொன்
றாகத்தா னங்காந் தனலுமிழும் ஐவாய
நாகத்தாய் ஆடுன் நடம். (99)

**(ப - ரை)** ஆகத்து அங்காந்து - சரீரத்தில் பொருந்திய வாயைத் திறந்து ; அனல் உமிழும் ஐவாய நாகத்தாய் - அக்கினிபோன்ற நஞ்சைக் கக்குகின்ற ஐந்து வாயினை உடைய சர்ப்பத்தை அணிந்தவடனே; ஆடு உன்நடம் - ஆடுகின்ற உன்னுடைய நடனதெரிசனத்தைச், செப்பேந்து இளமுலையாள் காணவோ - சிமிழினது அழகைத் தாங்கிய இளமை பொருந்திய தனத்தை உடைய உமாதேவியார் காணும்படியாகவோ ; தீப்படு காட்டு - அக்கினி உண்டாகிய சர்வ சூனியமயானத்தில் ; அப்பேய் கணம் அவைதான் காணவோ - அந்தப் பேய்க்கூட்டங்கள்தான் காணும்படியாகவோ ; எனக்கு ஒன்று செப்பு-எனக்கு இந்த ஒரு காரியத்தைச் சொல்லி அருளல்வேண்டும்.

(க - ரை) முதல்வனே! நீ ஆடுகின்ற நடனம், உமையம்மை காணும்படியாகவோ பேய்க்கூட்டம் காணவோ அதன் உண்மையைத் தெரிவித்தல் வேண்டும்.

ஓகாரம் இரண்டும் வினா. ஆன் மூன்றும் வேற்றுமை உருபு.

நடக்கிற் படிநடுங்கும் நோக்கிற் றிசைவேம்
இடிக்கில் உலகனைத்து மேங்கும்—அடுக்கற்
பொருமேறோ வானேறோ பொன்னொப்பாய் நின்னே
றுருமேறோ வொன்றா வுரை. (100)

(ப - ரை) பொன் ஒப்பாய் - பொன்னைப் போன்ற திருமேனியை உடைய முதல்வனே; நின் ஏறு - உன்னுடைய இடபவாகனமானது; நடக்கில் படிநடுங்கும் - நடந்து செல்லுமேயானால் உலகம் பயப்படும்; நோக்கில் திசைவேம் - கண்களை விழித்துப் பார்க்குமேயானால் அஷ்டதிசைகளும் வெந்துபோம்; இடிக்கில் உலகனைத்தும் ஏங்கும் - உராஞ்சிக்கொண்டு செல்லுமேயானால் உலகிலுள்ளபொருள்கள் பெருமூச்சு விடும்; (அதல்லாமல்) - அடுக்கல் பொரும் ஏறோ - மலையினோடு போர்செய்கின்ற ஆண்சிங்கமோ; வான்ஏறோ - ஆகாயத்தில் பொருந்திய இடியோ; உரும்ஏறோ - கோபத்தையுடைய ஆண் புலியோ; ஒன்று உரை - நீ எனக்குப் பொருத்தமாகச் சொல்லி அருளுவாய்.

(க - ரை) முதல்வனே! நீ ஏறுகின்ற இடபவாகனம் ஆண் சிங்கமோ புலியோ இடியோ இன்னதென்று எனக்கு விபரமாய்ச் சொல்லி அருளல் வேண்டும்.

உம்மைகள் எண்ணும்மை ஓகாரம் மூன்றும் வினா.

உரையினி விம்மாலை யந்தாதி வெண்பாக்
கரைவினற் காரைக்காற் பேய்சொற்—பரவுவார்
ஆராத அன்பினோ டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து. (101)

(ப - ரை) பேராத காதல் பிறந்து - மனதை விட்டு நீங்காத ஆசை உண்டாகி; கரைவினல் காரைக்கால் பேய் - மனக்கசிவினால் காரைமாநகரத்தில் திருவவதாரஞ் செய்த புனிதவதியாகிய பேயினாலே;

சொல் - சொல்லப்பட்ட; உரையினால் இம்மாலை - அருமையாகிய சொற்கள் நிறைந்த இந்த மாலைபோல் தொடர்ந்த; அந்தாதி வெண்பா - அற்புதத் திருவந்தாதியாகிய வெண்பாவை; பாவுவார் - நியமமாகப் படிக்கின்றவர்கள்; ஆராத அன்பினோடு - நீங்காத அன்போடு; அண்ணலைச் சென்று ஏத்துவார் - சிவபெருமான் சன்னிதியடைந்து பிறவியை நீக்கும்படியாகத் துதித்து வேண்டிக் கொள்வார்கள்.

(கு -ரை) காரைக்கால் அம்மையார் நீங்காத ஆசையோடு பாடியருளிய அற்புதத் திருவந்தாதியைப் படித்த உடனே அன்பு மயமாகிக் கடவுளிடத்தில் பிறவி நீங்கும்படியாகத் துதிப்பார்கள்.

திருச்சிற்றம்பலம்

## அற்புதத் திருவந்தாதி மூலமும் உரையும்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

# திருஇரட்டைமணிமாலை உரை

கிளர்ந்துந்து வெந்துயர் வந்தடும் போதஞ்சி நெஞ்சமென்பாய்
தளர்ந்திங் கிருத்தல் தவிர்திகண் டாய்தளா ராதுவந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத் திடைவளர் கோட்டுவெள்ளை
இளந்திங் களுமெருக் கும்இருக் குஞ்சென்னி ஈசனுக்கே. (1)

(ப - ரை) நெஞ்சம் - நெஞ்சமே; கிளர்ந்து உந்து வெந்துயர் - அதிகரித்து மேலெழுகின்ற கொடியதுன்பமானது; வந்து அடும்போது - பொருந்தி வருத்தும்போது; அஞ்சி - பயந்து; என்பாய் தளர்ந்து இங்கு இருத்தல் - என்பு வடிவத்தோடு தளர்ச்சியடைந்து இவ்வுலகத்தில் இருத்தலை; தவிர்தி - நீக்கிக்கொள்ளும் பொருட்டு; தளராது வந்து வளர்ந்துந்து கங்கையும் - சோர்வடையாமல் வந்து பெருக்கோடு வேகமாய்ச் செல்கின்ற கங்கையையும்; வானத்திடைவளர் கோட்டு வெள்ளை இளந்திங்களும் - ஆகாயத்தில் பொருந்திய வளைவாகிய வெண்மையும் இளமையும் பொருந்திய சந்திரனையும்; எருக்கும் - வெள்ளெருக்கம் புஷ்பத்தையும்; இருக்கும் - அணிந்திருக்கப்பட்ட; சென்னி ஈசனுக்கு - சிரசையுடைய சிவபெருமானுக்குத் தொண்டு செய்து அடிமைப்படுவதை; கண்டாய் - தெரிந்துகொண்டாயா?

(க - ரை) மனமே! கடவுளுக்குத் தொண்டுசெய்து அடிமைப் பட்டால் பிறவி நீங்கி முத்தியிற் சேரலாம்.

வந்து என்பது குற்றியலுகரம் இகரமாகத் திரிதல். ஏகாரம் ஈற்றசை. தொண்டு செய்வது இடம் நோக்கி வருவிக்கப்பட்டது.

ஈச னவனல்லா தில்லை யெனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்து—பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத் தென்றும்
பிறவாமைக் காக்கும் பிரான். (2)

(ப - ரை) நெஞ்சே - மனமே; பிரான் - எப்பொருட்கும் இறைவனானவன்; ஈசன் அவன் அல்லாது - சிவபெருமானைவிட;

இல்லை என நினைந்து - வேறே தெய்வம் இல்லை என்று நினைத்து ; கூசி மனத்தகத்து - பிறக்குந் தெய்வங்களைக்கண்டு மனத்தினிடத்துக் கூசுதலையடைந்து ; பேசிக்கொண்டிருந்து-பிறவாத முதல்வனுடைய குணதிசயங்களைத் துதித்துக் கொண்டிருந்து ; மறவாது வாழ்வாரை-இடைவிடாது தியானஞ்செய்துகொண்டு வாழுகின்றவரை ; மண்ணுலகத்து - பூவுலகத்திலே ; என்றும் - எப்பொழுதும் ; பிறவாமைக்கு - தாயார் வயிற்றில் வந்து பிறவாமல் இருக்கும்படியாக ; ஆக்கும் - இறைவன் செய்வான்.

(க - ரை) எப்பொருட்கும் முதல்வனைத் தவிர வேறே தெய்வம் இல்லை என்று திடசித்தமாய்த் தியானஞ் செய்வோமேயானால் பிறவியை ஒழித்து விடுவான்.

ஆக்குவான் என்பது ஆக்குமென உயர்வு நோக்கி அஃறிணை முடிபாய் வந்தது. நெஞ்சே என்பது வருவித்துரைக்கப்பட்டது.

பிரானென்று தன்னைப்பன் னாள்பர
 வித்தொழு வாரிடர்கண்
டிரானென்ன நிற்கின்ற ஈசன்கண்
 டீர்இன வண்டுகிண்டிப்
பொராநின்ற கொன்றைப் பொதும்பர்க்
 கிடந்துபொம் மென்றுரைவாய்
அராநின் றிரைக்குஞ் சடைச்செம்பொன்
 நீள்முடி யந்தணனே. (3)

(ப - ரை) இனவண்டு கிண்டி - கூட்டமாகிய வண்டுகள் மூக்கால் உழுது ; பொரா நின்ற - பொருதுகின்ற ; கொன்றைப் பொதும்பர்க் கிடந்து-கொன்றைப்பூக்கள் நிறைந்த சோலையில் தங்கி; பொம் என்று உரை - ஓம் என்னும் ஒலிக்குறிப்பால் ரீங்காரம் பண்ணிக் கொண்டு ; வாய்-தனக்கு இடமாகத்தங்குகின்ற கொன்றைப் புட்பத்தையும்; அரா நின்று இரைக்கும் - சர்ப்பமானது தங்கிப் பெருமூச்சுவிடும் ; செம்பொன் சடை - சிவந்த பொன் போன்ற சடையையும் ; நீண்முடி அந்தணன் - நீண்ட சிரசையும் உடைய கடவுள் ; பிரானென்று தன்னை - எப்பொருட்கும் தலைவனென்று தம்மை ; பரவித் தொழு

வார் இடர் கண்டு - துதித்து வணங்குபவர் பிறவித் துன்பத்தைப் பார்த்துக் கொண்டு; இரான் - பொறுத்துக் கொண்டு இருக்க மாட்டான்; என்ன - என்று சொல்லும்படியாக; நிற்கின்ற - சர்வான்மாக் களுக்கும் நடுவாய் நிற்கின்ற; ஈசன் - நமது கடவுள்; கண்டீர்-தெரிந்து கொள்ளுங்கள்.

(க - ரை) வண்டுகள் பொருந்திய கொன்றைப் புட்பத்தையும் சர்ப்பத்தையும் சடையில் தரித்த சிவபெருமானை எப்பொருட்கும் தலைவனென்று உணர்ந்து பல நாளும் வணங்குபவர்களுக்கு உண்டாகிய பிறவித் துன்பத்தைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்துவிடமாட்டார்.

ஏகாரம் ஈற்றசை. கண்டீர் என்பது முன்னிலைச் சொல். வாய்-இடம்.

அந்தணனைத் தஞ்சமென் றாட்பட்டார் ஆழாமே
வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன்—கொந்தணைந்த
பொன்கண்டாற் பூணாதே கோணாகம் பூண்டானை
என்கண்டாய் நெஞ்சே இனி. (4)

(ப - ரை) நெஞ்சே - மனமே; அந்தணனைத் தஞ்சமென்று ஆட்பட்டார்-கடவுளை நீயே கதி என்று அடிமைப்பட்டவர்களை; ஆழாமே-பிறசமயப் படுகுழியில் அமிழ்ந்துவிடாமல்; வந்தணைந்து - முற்பட்டு வந்து; காத்து அளிக்கும் - போகாமல் தடுத்து அருள்செய்யும்; வல்லாளன் - வல்லமையுடையவனையும்; கொந்தணைந்த பொன்கண்டால் பூணாது - கொந்துக்களாக உடைய பொன்னாபரணத்தைக் கண்டால் அணியாது; கோள்நாகம் பூண்டான் - விடக்குற்றம் பொருந்திய சர்ப்பத்தை அணிந்தவனையும்; இனி - இனிமேல்; என்கண்டாய் - எத்தன்மையுடைய கடவுளாக நினைத்து இருக்கின்றாய்?

(க - ரை) மனமே! கடவுளையே கதி என்று கருதி இருக்கின்ற அடியார்கள் பிறசமயத்தில் அழுந்தினால் முற்பட்டு அருள்செய்வான்.

ஏகாரம் - இரண்டும் தேற்றம்.

இனிவார் சடையினிற் கங்கையென் பாளை அங் கத்திருந்த
கனிவாய் மலைமங்கை காணிலென் செய்திகை யிற்சிலையால்

முனிவார் திரிபுர மூன்றும்வெந் தன்றுசெந் தீயில்மூழ்கத்
தனிவார் கணையொன்றி னால்மிகக் கோத்தஎஞ் சங்கரனே. (5)

(ப - ரை) கையில் சிலையால் - கையில் இருக்கப்பட்ட வில்லினால்; முனிவார் திரிபுர மூன்றும் - கோபத்துடனே பகைதத மூன்று அசுரர்களுடைய கோட்டைகளையும்; வெந்து அன்று - வேகும்படியாக அக்காலத்திலே; செந்தீயின் மூழ்க - சிவந்த அக்கினியினால் அழியும்படியாக; தனிவார்கணை ஒன்றினால் - ஒப்பற்ற நீண்டபாணம் ஒன்றால்; மிகக்கோத்த - அதிகமாக விடுத்தருளிய; எம்சங்கரனே - எங்களுக்குச் சுகத்தைச் செய்கின்ற கடவுளே; இனி - பின்னால்; வார்சடையினில் - நீண்ட சடையினிடதது; கங்கை என்பாளை - கங்காதேவி என்று சொல்லப்பட்ட ஓர் பெண்ணை; அங்கத்திருந்த - உம்முடைய இடது பாகத்தில் வைத்திருந்த; கனிவாய் கொவ்வை - கனிபோன்ற சிவந்த வாயையுடைய; மலைமங்கை - மலையரையன் புத்திரியாகிய பார்வதி தேவியார்; காணில் - சிரசில் இருக்கின்றவளைப் பார்த்துவிட்டு இவளார் என்று கேட்டால்; என்செய்தி - என்ன சமாதானம் சொல்லுவாய்?

(க - ரை) எம்போன்ற அடியார்களுக்குத் துன்பஞ் செய்கின்றவரை ஒறுத்துச் சுகத்தைக் கொடுக்கின்ற கடவுளே! சிரசில் நீர் மறைதது வைத்து இருக்கின்ற கங்காதேவியை ஒரு சமயம் பார்வதி தேவியார் பார்த்துவிட்டு இவள் யார் என்று கேட்டால் என்ன பதில் சொல்வீர்?

கணை ஒன்றினால் என்பது 'ஒன்றும் பெருமிகை உந்தீபற' என்றதினால் அதுவும் வேண்டியதில்லை என அறிந்து கொள்ளவும்.

சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்
பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை—அங்கொருநாள்
ஆவாஎன் றாளமைக் காப்பானை எப்பொழுதும்
ஓவாது நெஞ்சே உரை. (6)

(ப - ரை) நெஞ்சே - மனமே; சங்கரனை - சர்வான்மாக்களுக்கும் சுகத்தைக் கொடுப்பவனையும்; தாழ்ந்த சடையானை - தொங்குகின்ற சடையையுடையவனையும்; அச்சடைமேல் பொங்கு அரவம் வைத்துகந்த புண்ணியனை - அந்தச் சடையினிடத்து விளங்குகின்ற

சர்ப்பத்தை வைத்து சந்தோஷித்த புண்ணிய வடிவாய் உள்ளவனை யும்; அங்கொருநாள் - ஆன்மா நீங்குகின்ற ஒரு காலத்தில்; ஆவா என்று ஆழாமை காப்பானை - பார்க்கின்றவர்கள் இரங்கும்படியாகப் பிறவியாகிய சாகரத்தில் அழுந்தா வண்ணம் காக்கின்றவனையும்; எப் பொழுதும் - சதா காலமும்; ஓவாது உரை - இடைவிடாது அவனு டைய புகழ்ச்சிகளைத் தோத்திரஞ் செய்வாய்.

(கு - ரை) மனமே! எப்பொழுதும் பிறவித் துன்ப முதலிய இடையூறுகள் வராமல் காக்கின்ற கடவுளை இடைவிடாது தியானஞ் செய்வாய்.

தியானஞ் செய்தால் பிறவி நீங்கும் என்பதற்குத் திருக்குறள் கடவுள் வாழ்த்து 10 வது பாடலில் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந் தார், இறைவனடி சேரா தார்' என்று திருவள்ளுவரும், திருவாரூர் திருவிருக்குக்குறள் 2-வது பாடலில், 'பிறவி யறுப்பீர்காள் அறவ னாரூரை, மறவா தேத்துமின் துறவியாகுமே' என்று சம்பந்தரும் கூறியுள்ளார்.

உரைக்கப் படுவது மொன் றுண்டு
　　கேட்கிற்செவ் வான்றொடைமேல்
இரைக்கின்ற பாம்பினை என்றுந்
　　தொடேல்இழிந் தோட்டத்தெங்குந்
திரைக்கின்ற கங்கையுந் தேனின்ற
　　கொன்றையுஞ் செஞ்சடைமேல்
விரைக்கின்ற வன்னியுஞ் சென்னித்
　　தலைவைத்த வேதியனே. (7)

(ப - ரை) இழிந்து - சிரசிலிருந்து கீழே இறங்கி; ஓட்டத்து எங்கும் - ஓடும்போது எவ்விடத்தும்; திரைக்கின்ற - அலைகளை வீசு கின்ற; கங்கையும் - கங்காதேவியும்; தேனின்ற கொன்றையும் - தேன் பொருந்திய கொன்றைப் புஷ்பத்தையும் அணிந்த; செஞ் சடைமேல் - சிவந்த சடையினிடத்து; விரைக்கின்ற வன்னியும் - வாசனை பொருந்திய வன்னிப் புஷ்பத்தையும்; சென்னித் தலை வைத்த - சிரசினிடத்துத் தரித்தருளிய; வேதியனே - பிராமணனைத் தமனாகிய கடவுளே; உரைக்கப்படுவதும் ஒன்று உண்டு - உம்மிடத்

திலே சொல்லவேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது; கேட்கில் - அதென்னவென்று நீர் கேட்பீரேயானால்; செவ்வான் தொடைமேல் - செவ்வையும் உயர்ச்சியும் உடைய மாலையின்மேலே; இரைக்கின்ற பாம்பினை - பெருமூச்சோடு சீறுகின்ற சர்ப்பத்தை; என்றும் தொடேல் - எப்பொழுதும் அணியாதே.

(க - ரை) கங்கையையும் கொன்றைப் பூவையும் அணிந்த கடவுளே! உம்மை வந்து வணங்குவதற்கு அடியார்கள் பயப்படுவார்கள். ஆதலால் சர்ப்பாபரணத்தை எப்பொழுதும் அணிந்துகொள்ளாதே.

> வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
> காதியனை ஆதிரைநன் னாளானைச்—சோதிப்பான்
> வல்லேன மாய்ப்புக்கு மாலவனு மாட்டாது
> கில்லேன மாஎன்றான் கீழ். (8)

(ப - ரை) வேதியனை - பிராமணனாக இருக்கின்றவனை; வேதப் பொருளானை - வேதத்தின் உட்பொருளாக இருக்கின்றவனை; வேதத்துக்கு ஆதியனை - வேதத்துக்கு ஆதியாக இருக்கின்றவனை; ஆதிரை நல் நாளானை - ஆதிரையான் என்கிற நல்ல திருப்பெயரை உடையவனை; சோதிப்பான் - திருவடியைக் காணும்பொருட்டு; வல் ஏனமாய் - வலிமையுடைய பன்றி வடிவாய்; கீழ்புக்கு - பூமியின் கீழே புகுந்து; மாலவனும் - விட்டுணுவும்; மாட்டுகில்லேன் - தேடிக் காணமுடியவில்லை என்று; நமா என்றான் - சிவாயநம என்று தோத்திரம் செய்துகொண்டு நின்றான்.

(க - ரை) வேதத்துக்கு ஆதியாகவும், வேதமாகவும், வேதமுடிபாகவும் இருக்கின்ற சிவபெருமானுடைய திருவடியை விட்டுணுவானவர் காணமுடியாது தோத்திரம்செய்து நின்றார்.

ஆ து என்பன அசைகள். மாலவனும் என இறந்தது தழீஇய எச்ச உம்மையால் - பிரமனுந் தேடினான் என்று தெரிவிக்கின்றது. சிவாயநம என்பதற்கு - உபமன்னியரிடம் பஞ்சாக்ஷரத்தின் உண்மையைக் கேட்டுத் தெரிந்த விட்டுணுவானவர் அதன் உண்மையை அடக்கி நமா என்றார். இன்னும் உண்மை விளக்கம் 42-வது பாடலில், 'நம்முதலா ஓதில் அருள்நாடாது—நாடுமருள், சிம்முதலா ஓதுநீ சென்று' என்றார். 'சிவாயநம என்று சிந்தித்து இருப்பார்க்கு' என்றார் மேலோரும்.

கீழா யினதுன்ப வெள்ளக் கடற்றள்ளி யுள்ளூறப்போய்
வீழா திருந்தின்பம் வேண்டுமென் பீர்விர வார்புரங்கள் [லே
பாழா யிடக்கண்ட கண்டன்எண் தோளன்பைம் பொற்கழ
தாழா திறைஞ்சிப் பணிந்துபன் னாளுந் தலைநின்மினே. (9)

(ப - ரை) கீழாயின - பூமியில் பொருந்திய; துன்பவெள்ளம் - துன்பம் அதிகரித்த; கடல்தள்ளி - பிறவியாகிய கடலில் தள்ளுண்டு; உள்ளூறப்போய் - உள்ளே சென்று; வீழாதிருந்து - வீழாமல் தப்பித்துக்கொண்டிருந்து; இன்பம் வேண்டும் என்பீர் - திருவடித்தாமரையில் இரண்டறக் கலக்கின்ற இன்பத்தை விரும்பி இருப்பீர்களேயானால்; விரவார் புரங்கள் - அழியாத கடவுளென்று உணராத திரிபுரத்து அசுரர்களுடைய கோட்டைகள் மூன்றையும்; பாழாயிடக் கண்ட - அழிந்துபோகும்படியாகப் பார்த்தருளிய; கண்டன் - ஆலகால விடத்தை வைத்தருளிய நீலகண்டத்தை யுடையவனும்; எண்தோளன் - அதிக வலிமை பொருந்திய எட்டுப் புயங்களை யுடைய சிவபெருமானது; பைம்பொன் கழல் - பசிய பொன்னாலாகிய வீரக்கழலை அணிந்த திருவடிகளை; தாழாது - பாசத்தில் அழிந்திக் காலத்தைப் போக்காது; இறைஞ்சிப் பணிந்து - தோத்திரம் சொல்லி வணங்கி அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம்செய்து; பல்நாளும் - பலகாலமும்; தலைநின்மின் - முற்பட்டு நில்லுங்கள்.

(க - ரை) உலகத்தவர்களே! பிறவியில் செல்லாமல் இரண்டறக் கலக்கின்ற இன்பத்தை விரும்பினால் சகல வல்லமையுடைய கடவுளைத் துதித்துப் பலநாளும் வணங்க விரும்புங்கள்.

கழலே என்பதின் ஏகாரம் தேற்றம். நின்மினே என்பதின் ஏகாரம் ஈற்றசை. பொற்கழல் என்பது திருவடியாகிய இடத்தை உணர்த்துவதால் இடஆகுபெயர்.

தலையாய ஐந்திணையுஞ் சாதித்துத் தாழ்ந்து
தலையா யினவுணர்ந்தோர் காண்பர்—தலையாய
அண்டத்தான் ஆதிரையான் ஆலால முண்டிருண்ட
கண்டத்தான் செம்பொற் கழல். (10)

(ப - ரை) தலையாய அண்டத்தான் - எல்லா உலகங்களுக்கும் மேலே உள்ள சிவ லோகத்தில் எழுந்தருளி இருக்கப்பட்டவனும்;

ஆதிரையான் - ஆதிரையான் என்று சொல்லப்பட்டவனும்; ஆலாலம் உண்டிருண்ட கண்டத்தான் - ஆலகால விஷத்தைப் புசித்துக் கரிய நிறத்தையடைந்த கண்டத்தை யுடையவனும் ஆகிய சிவபெருமானுடைய; செம்பொற்கழல் - சிவந்த பொன்னாலாகிய வீரக்கழலை யணிந்த திருவடியை; தலையாய ஐந்தினை - மந்திரங்களுக்கு முதன்மையாகிய பிரணவத்தோடு கூடிய பஞ்சாக்கரத்தினை; சாதித்து - இடையறாது ஓதுதலைப் பழகி; தாழ்ந்து - வணங்குதலைச் செய்து; தலையாயின உணர்ந்தோர் - யோகங்களுக்கு எல்லாம் சிரேட்டமாகிய சிவராஜயோகம் கைவரப் பெற்றவர்கள்; காண்பர் - அத்திருவடியைக் காண்பார்கள்.

(க - ரை) பிறந்திறந்து உழலும் தெய்வங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட சிவபெருமானுடைய திருவடியைச் சாதனைப் பழக்கம் கைவந்தவர்கள் தெரிந்துகொள்வார்கள்.

ஐந்தினையும் என்ற உம்மை முற்று.

கழற்கொண்ட சேவடி காணலுற் றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா வினைநிக ரேதுமின்றித்
தழற்கொண்ட சோதிச்செம் மேனிஎம் மானைக்கைம் மாமலர்தூய்த்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி நம்மடுந் தொல்வினையே.

(ப - ரை) கழற் கொண்ட சேவடி - வீரக்கழலை யணிந்த சிவந்த திருவடிகளை; காணலுற்றார் தம்மை - தியானத்தின் வழியாய்க் கண்டு தெரிசிக்கப் பெற்ற அடியார்களை; பேணலுற்றார் - ஆசையோடு அவ்வடியார்களை வணங்குகின்றவர்களுடைய; நிழற்கண்டபோழ்து - அந நிழலைப் பார்த்தபோது; வினைநில்லா - நல்வினை தீவினைகள் எதிராக நிற்கமாட்டாமல் ஓடிப்போய் விடும்; நிகரேதுமின்றி - தனக்குத்தானே ஒப்பாகிய; தழற்கொண்ட சோதி - வெப்பம் பொருந்திய பிரகாசத்தை உடைய; செம்மேனி எம்மானை - சிவந்த நிறத்தையுடைய எமது தலைவனை; கைம்மாமலர் தூய்தொழக் கண்டும் - கையினாலே பெருமை பொருந்திய புஷ்பங்களால் அர்ச்சனை செய்து வணங்குவதைப் பார்த்தும்; துன்னி நம்மடும் தொல்வினை - நெருங்கி நம்மை வருத்துகின்ற பழவினை; நிற்கிற்குமோ - நிற்கமாட்டாது வலிஇழந்து நசித்து விடும்.

(க - ரை) திருவடியைக் கண்டு தெரிசித்த அடியார்களை அன்போடு வணங்குகின்றவர்களுடைய நிழலைப் பார்த்ததும் வினைநீங்கி விடும். நமது கடவுளைப் புஷ்பங்களால் அர்ச்சிப்பதைக் கண்ட பழவினை நீறுகிவிடும்.

அத்து - சாரியை. ஓகாரம் - வினு. ஏகாரம் - ஈற்றசை.

தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும்—மெல்லியலோர்
கூற்றனைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றனை நெஞ்சே நினை. (12)

(ப - ரை) நெஞ்சே - மனமே; தொல்லை வினைவந்து சூழாமுன் - பழவினை வந்து சேர்வதற்கு முன்னமே; தாழமே ஒல்லை - தாமதியாது அதிசீக்கிரத்தில்; உமைஎன்னும் மெல்லியலோர் கூற்றனை - உமாதேவி என்று சொல்லப்பட்ட ஒரு பெண்ணைப் பாகத்தில் வைத்தவனை; கூற்றுருவங்காய்ந்தானை-மார்க்கண்டனுக்காக இயமனைக்கோபித்தவனை; வாய்ந்திலங்கு - பொருந்திவிளங்காநின்ற; நீற்றனை - விபூதிபூத்து இருக்கப்பட்ட மேனியையுடையவனை; வணங்கிநினை - தொழுது மனதில் தியானிப்பாய்.

(க - ரை) மனமே பழவினை சேருவதற்குமுன் பார்வதிதேவியைப் பாகத்தில் வைத்தவனையும் இயமனைக் கோபித்தவனையும் விபூதி பூதது இருக்கப்பட்ட வடிவத்தை உடையவனுமாகிய கடவுளைச் சீக்கிரமாய்த் துதித்து நினைப்பாய்.

பழவினை என்பது சஞ்சிதம். இயமனைக் கோபித்தவன் என்பதற்குக் கீழ்வேளூர் திருத்தாண்டகம்-8-வது பாடலில் 'தடுத்தானைக் காலனைக் காலாற் பொன்றத் தன்னடைந்த மாணிக்கன் றருள்செய்தானை' என்று திருநாவுக்கரசரும் கூறியுள்ளார். பழவினையை நல்வினை தீவினை எனக்கொள்வாரும் உளர்.

நினையா தொழுதிகண் டாய்நெஞ்ச மேஇங்கொர் தஞ்சமென்று
மனையாளை யும்மக்கள் தம்மையுந் தேறியோ ராறுபுக்கு
நனையாச் சடைமுடி நம்பன்நந் தாதைநொந் தாதசெந்தீ
யனையான் அமரர்பிரான் அண்ட வாண னடித்தலமே. (13)

(ப - ரை) நெஞ்சே - மனமே; இங்கு - இவ்வுலகத்து; ஓர்தஞ்ச மென்று - ஒப்பற்ற துணையென்று; மனையாளையும் மக்கள் தம்மையும் தேறி - மனைவி மக்கள் சுற்றம் முதலியவர்களைத் தேற்றுதலை விட்டு; ஓர் ஆறு புக்கு - ஒரு கங்கா நதியாகப் புகுந்து; நனையாச் சடைமுடி நம்பன் - நனைகின்ற சடை பொருந்திய சிரசையுடைய கடவுளையும்; நம் தாதை - நம்முடைய தந்தையையும்; நொந்தாத - கெடாத; செந்தீயனையான் - சிவந்த அக்கினியை ஒத்தவனையும்; அமரர் பிரான் - தேவர்களுக்குத் தலைவனாக உடையவனையும்; அண்டவாணன் - சகல அண்டங்களிலேயும் நிறைந்து இருக்கப்பட்டவனுமாகிய சிவபெருமானுடைய; அடிததலம் - திருவடித் தாமரைகளை; நினையா - நினைத்து; தொழுதி கண்டாய் - அன்போடு வணங்குவதைத் தெரிந்துகொள்.

(க - ரை) மனைவி மக்கள் முதலிய பந்தத்தை நீக்கிச் சர்வான்மாக்களுக்கும் தலைவனாக உள்ள கடவுளுடைய திருவடிகளைத் தொழுது வணங்குவாய்.

அடித்தலத்தின் அன்றரக்கன் ஐந்நான்கு தோளும்
முடித்தலமும் நீமுரித்த வாறென்—முடித்தலத்தில்
ஆறாடி யாறு அனலாடி அவ்வனலின்
நீறாடி நெய்யாடி நீ. (14)

(ப - ரை) நீ - எப்பொருட்கும் தலைவனாகிய நீ; முடித்தலத்தில்- உன்னுடைய சிரசினிடத்தில்; ஆறு ஆடி - கங்கையை அணிந்து வைத்து இருக்கின்றவனே; ஆறு அனல் ஆடி - வெப்பம் தணியாத அக்கினியில் நிர்த்தனம் செய்யப்பட்டவனே; அவ்வனலில் நீறாடி - அந்த அக்கினியில் உண்டாகிய விபூதி பொருந்தியவனே; நெய்யாடி- நெய்யை அபிஷேகஞ் செய்துகொள்ளப் பட்டவனே; அடித்தலத்தின் - உன்னுடைய திருவடியினால்; அன்று - கயிலை மலையை இராவணன் பெயர்த்த காலத்தில்; அரக்கன் - அவ்விராவணனுடைய; ஐந்நான்கு தோளும் - இருபது புசங்களையும்; முடித்தலமும் - ஒரு பஃது சிரங்களையும்; நீ முரித்தவாறு - சர்வான்மாக்களுக்கும் தாய் போன்ற நீ கெடுத்த தன்மை; என் - என்ன கருதிச் செய்தாய்.

(க - ரை) இராவணன் உம்மைப் பூசிக்கலாமென்ற ஆசையோடு பெயர்த்த ஞான்று அவனைத் துன்புறுத்தியது என்ன கருதியோ அறியேம்.

நெய்யாடி என்பதற்குத் திருப்புகலூர் திருத்தாண்டகம் 8-வது பாடலில் 'நெய்யாடி நின்மலனே நீலகண்டா' என திருநாவுக்கரசு சுவாமிகளும கூறியுள்ளார்.

நீநின்று தானவர் மாமதில் மூன்று நிரந்துடனே
தீநின்று வேவச் சிலைதொட்ட வாறென் றிரங்குவல்வாய்ப்
பேய்நின்று பாடப் பெருங்கா டரங்காப் பெயர்ந்துநட்டம்
போய்நின்று பூதந் தொழச்செய்யு மொய்கழற் புண்ணியனே.

(ப - ரை) நீ நின்று - சகல வல்லமையு முடைய நீயே நின்று கொண்டு; தானவர் - அசுரர்களுடைய; மாமதில் மூன்றும் - பெரிய மதிலாற் சூழப்பட்ட கோட்டைகள் மூன்றையும்; நிரந்துடனே - சமமாக ஒரே காலத்தில்; தீநின்று வேவச் சிலைதொட்டவாறு - அக்கினியானது தங்கி வேகும்படியாக வில்லைவளைத்த காரணம்யாது; என்று இரங்குவல் - என்று நினைந்து இரங்குவேன்; பேய்நின்று - பேய்க் கூட்டங்கள் நின்று கொண்டு; வாய்பாட - வாயினாலேபாடவும்; பெருங்காடு அரங்கா - சர்வ சூனிய மயானமே நாடகசாலையாக; பெயர்ந்து போய்நின்று - அடியெடுத்துப்போய் இருந்து; நட்டம் - நிர்த்தனம் செய்யும்போது; பூதந்தொழ - பூதகணங்கள் வணங்கும் போது; செய்யும் - அருள்செய்யப்பட்ட; மொய்கழல் - நெருங்கிய வீரக்கழலையணிந்த திருவடியை உடைய; புண்ணியனே - தர்மசொரூபியே.

(க - ரை) கடவுளே! நீர் நிர்த்தனம் செய்யும்போது தொழுத பூத கணங்களுக்கு அருள் செய்யப்பட்ட புண்ணிய சொரூபியாக இருக்கத் திரிபுரத்து அசுரர்களைக் கோட்டையோடும் அக்கினிக்கு இரையாக்கியதை நோக்கி இரக்கம் அடைகின்றேன்.

ஏகாரம் ஈற்றசை.

புண்ணியங்கள் செய்தனவும் பொய்ந்நெறிக்கட் சாராமே
எண்ணியோ ரைந்தும் இசைந்தனவால்—திண்ணிய

கைம்மாவின் ஈருரிவை மூவுருவும் போர்த்துகந்த
அம்மானுக் காட்பட்ட அன்பு. (16)

(ப - ரை) திண்ணிய - வலிமைபொருந்திய ; கைம்மாவின் - யானையினுடைய ; ஈர் உரிவை - உரித்த யானைத்தோலை ; மூவுருவும் - திரிமூர்த்தியாகிய வடிவத்தில் ; போர்த்து உகந்த - போர்த்திக் கொண்டு சந்தோஷித்த ; அம்மானுக்கு - தந்தையாகிய சிவபெருமானுக்கு ; அன்பு - இடையறாத அன்பு செய்து ; ஆட்பட்ட - அடிமைப் பட்டபடியினாலே ; புண்ணியங்கள் செய்தனவும் - நிட்காமியமாகச்செய்த புண்ணியங்கள் யாவும் ; பொய்ந்நெறிக்கட் சாரமே - பஞ்சமாபாதகத்தின்வழி மனதைச் செல்ல வொட்டாது ; எண்ணி - நினைத்து ; ஓரைந்தும் இசைந்தன - பஞ்சேந்திரியங்களும் ஒரு தன்மையாய் ஒத்து இருந்தன.

(க - ரை) மனமே ! யானையின் தோலை போர்த்தியருளிய நமது கடவுளுக்கு அன்போடு நிஷ்காமியமாகப் புண்ணியங்களைச் செய்தபடியால் பஞ்சேந்திரியங்களும் தீயவழியில் செல்லாமல் ஒருவழி நின்றன.

ஆல் - அசை. உரிவை - தோல்.

அன்பா லடைவதெவ் வாறுகொல் மேலதோ ராடரவந்
தன்பா லொருவரைச் சாரவொட் டாதது வேயுமன்றி
முன்பா யினதலை யோடுகள் கோத்தவை யார்த்துவெள்ளை
என்பா யினவு மணிந்தங்கோ ரேறுகந் தேறுவதே. (17)

(ப - ரை) மேலது - சிவபெருமானே! உம்முடைய வடிவத்தின் மீது ; ஓர்ஆடு அரவம் - (சித்தபேதத்தை உணர்ந்து ஆடப்பட்ட) ஓர் சர்ப்பமானது ; தன்பால் ஒருவரைச் சாரவொட்டாது - தன்னிடத்து யாரா இருந்தபோதிலும் நெருங்கி வரும்படி செய்யாது ; அதுவேயும் அன்று - அது அல்லாமலும் ; முன்புஆயின - முன்னே பொருந்தி இருக்கின்றன ; தலை ஓடுகள் - பிரமாவினுடைய சிரசுகளை ; கோத்து - மாலையாகக் கோத்து ; அவை ஆர்த்து - அத்தலைகள் ஒன்றோடொன்று உராஞ்சி சப்தமிட்டுக்கொண்டு ; வெள்ளை - வெண்மையையுடைய ; என்பாயினவும் - சர்வ சூனிய மயானத்தி

லுள்ள முழு எலும்பையும் ; அணிந்து - அணிந்துகொண்டு ; அங்கு ஓர் - அவ்விடத்து ஒரு ; ஏறு - இடப வாகனத்தை ; உகந்து - சந்தோஷித்து ; ஏறுவது - ஏறி இருக்கின்றதானது ; அன்பால் அடைவது - அடியார்கள் அன்போடு சமீபத்து வணங்குவது ; எவ வாறு - எப்படியாக முடியும்.

(க - ரை) முதல்வனே! சர்ப்பாபரணத்தையும் தலைமாலைகளை யும் வெண்மை பொருந்திய முழு எலும்பையும் அணிந்துகொண்டு ஒரு இடப வாகனத்தின்பேரில் ஏறி இருப்பதால் அடியார்கள் பயப் படாமல் சமீபத்தில் வணங்குவது எப்படி ஆகும்?

கொல் ஏ என்பன அசைகள்.

ஏறலால் ஏறமற் றில்லையே எம்பெருமான்
ஆறெலாம் பாயு மவிர்சடையார்—வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கடல்நஞ் சுண்டார் தமக்கு. (18)

(ப - ரை) எம்பெருமான் - எமது தலைவனே ; ஆறெலாம்பாயும்- கங்கையானது பெருகிப் பாய்கின்ற ; அவிர்சடையார் - விளங்கா நின்ற சடையை உடையவரும் ; வேறோர் - அணிந்திருப்பதையல் லாத வேறே ஒரு ; படம்குலவு-படங்கள் பொருந்திய ; நாகம் உமிழ் - சர்ப்பமானது கக்கிய ; பண்டு - முற்காலத்தில் ; அமரர் சூழ்ந்த - தேவர்களெல்லாம் கூடிய; தடங்கடல் - விசாலமாகிய சமுத்திரத்தில்; நஞ்சு உண்டார் - விடத்தைப் புசிததவரே ; தமக்கு - உமக்கு ; ஏறு அலால் - இடபவாகனத்தை யல்லாது ; ஏற - ஏறிக் கொள்வதற்கு ; மற்றில்லையோ - இரதம் பல்லக்கு முதலியவைகள் கிடையாவோ ?

(க - ரை) கடவுளே! உமக்கு இரதம் பல்லக்கு முதலியவைகள் இருக்க அவைகளில் ஏறாது பாய்ந்து ஓடுகின்ற இடபவாகனத்தில் ஏறியது என்ன கருதியோ அறியேம்.

வினு ஓகாரம் ஏகாரமாக வந்தன.

தமக்கென்று மின்பணி செய்திருப் பேமுக்குத் தாமொருநாள்
எமக்கொன்று சொன்னு லருளுங்கொ லாம்இணை யாதுமின்றிச்

சுமக்கின்ற பிள்ளைவெள் ளேறொப்ப தொன்றுதொண் டைக்கனிவா
உமைக்கென்று தேடிப் பெறாதுட னேகொண்ட உத்தமரே. [ய்

(ப - ரை) இணையாதும் இன்றி - தனக்குத்தானே ஒப்பாகிய ; சுமக்கின்ற - தோளிலும் துடையிலும் தாங்குகின்ற ; பிள்ளை-முருகக் கடவுளாகிய பிள்ளை ; வெள்ளேறு ஒப்பது ஒன்று - வெள்ளிய இடபத்தைப் போன்ற பலம் பொருந்திய அப்பிள்ளையை ; தொண்டைக் கனிவாய் உமைக்கென்று - தொண்டைக்கனிபோன்ற வாயையுடைய பார்வதி தேவிக்கென்று ; தேடிப்பெறாது - அலைந்துபெறாமல் ; உடனே கொண்ட உத்தமரே - அப்பொழுதே பிள்ளையாகக் கொண்டருளிய உத்தமமாகிய கடவுளானவர் ; தமக்கென்றும் - அக்கடவுளுக்கு எப்பொழுதும் ; இன்பணி செய்திருப்பேற்கு - இனிமையாகிய திருத்தொண்டு செய்த எனக்கு ; தாம் ஒரு நாள் - அவர் ஒரு காலத்தில் ; எமக்கு ஒன்று - எனக்கு ஒருவார்த்தையை ; சொன்னால் - உபதேசித்தால் ; அருளுங்கொல் - உம்முடைய கிருபைக்குத் தகுந்ததல்லவோ.

(க - ரை) ஆறுமுகங் கொண்ட பரம்பொருளைப் பிள்ளையாகக் கொண்ட உத்தமராகிய கடவுளே! அன்போடு திருத்தொண்டு செய்கின்ற எனக்கு ஒரு நாள் ஞானோபதேசம் செய்தால் உம்முடைய பெருமைக்குத் தகாதோ?

ஆம் - என்பது அசைநிலை இடைச்சொல். ஏகாரம் - ஈற்றசை.

உத்தமராய் வாழ்வார் உலந்தக்கா லுற்றார்கள்
செத்தமர மடுக்கித் தீயாமுன் உத்தமனாய்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து. (20)

(ப - ரை) ஆழி நெஞ்சே - சக்கரம்போல வேகத்தோடு செல்லுகின்ற மனமே ; உத்தமராய் வாழ்வார் - உத்தமமான செயல்களைச் செய்து வாழ்ந்து வருகின்றவர்கள் ; உலந்தக்கால் உற்றார்கள் - வினையின்படி சரீரத்தைவிட்டு ஆன்மா நீங்கினால் அப்பொழுது சுற்றத்தார்கள்; செத்தமரமடுக்கித் தீயாமுன் - உலர்ந்த காட்டத்தைப் பரப்பித் தகித்து நீறாக்குவதற்கு முன்னமே ; உத்தமனாய் - சகலதெய்வங்களுக்கும் மேலானவனாகியும் ; நீளாழிநஞ்சு உண்ட - நீண்டசமுத

திரத்தில் உண்டாகிய ஆலகால விடத்தைப் புசித்துக் கண்டத்தில் வைத்தவனும்; நெய்யாடி - புத்துருக்கு நெய்யை அபிடேகஞ் செய்து கொள்ளப்பட்டவனும் ஆகிய ; தன்திறமே - அக்கடவுளுடைய புகழையே ; கிளர்ந்துகேள் - அன்போடு பிரகாசித்துக் கேட்பாயாக.

(க - ரை) மனமே ! சரீரம் நீங்கினுல் சுற்றத்தார்கள் கூடி விற கடுக்கித் தகன சமஸ்காரஞ் செய்வதற்குமுன் உத்தமோத்தமனுகிய முதல்வனுடைய புகழைச் சந்தோஷித்துக்கேள்.

திறமே - என்பதில் ஏகாரம் தேற்றம்.

திருச்சிற்றம்பலம்

## திருஇரட்டைமணிமாலை மூலமும் உரையும்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

# திரு ஆலங்காட்டு மூத்த திருப்பதிகம்

## க. பண் - நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து குண்டுகண் வெண்பற்
குழிவயிற்றுப், பங்கி சிவந்திரு பற்கள் நீண்டு பரடுயர் நீள்
கணைக் காலோர்பெண்பேய், தங்கி யலறி யுலறுகாட்டில் தாழ்
சடை யெட்டுத் திசையும்வீசி, அங்கங் குளிர்ந்தன லாடுமெங்
கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே. (1)

கள்ளிக் கவட்டிடைக் காலைநீட்டிக் கடைக்கொள்ளி
வாங்கி மசித்துமையை, விள்ள எழுதி வெடுவெடென்ன நக்கு
வெருண்டு விலங்குபார்த்துத், துள்ளிச் சுடலைச் சுடுபிணத்
தீச் சுட்டிட முற்றுஞ் சுளிந்துபூழ்தி, அள்ளி யவிக்கநின்
றாடுமெங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே. (2)

வாகை விரிந்துவெண் ணெற்றொலிப்ப மயங்கிருள் கூர்
நடு நாளையாங்கே, கூகையொ டாண்டலை பாட ஆந்தை கோட
தன் மேற்குதித் தோடவீசி, ஈகை படர்தொடர் கள்ளிநீழல்
ஈம மிடுசுடு காட்டகத்தே, ஆகங் குளிர்ந்தன லாடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே. (3)

குண்டிலோமக்குழிச் சோற்றைவாங்கிக் குறுநரி தின்ன
வதனைமுன்னே, கண்டிலோ மென்று கனன்றுபேய்கள் கைய
டித் தோடிடு காடரங்கா, மண்டல நின்றங்கு ளாளமிட்டு
வாதித்து வீசி யெடுத்தபாதம், அண்ட முறநிமிர்ந் தாடு
மெங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே. (4)

விழுது நிணத்தை விழுங்கியிட்டு வெண்டலை மாலை விர
வப்பூட்டிக், கழுதுதன் பிள்ளையைக் காளியென்று பேரிட்டுச்
சீருடைத் தாவளர்த்துப், புழுதி துடைத்து முலைகொடுத்
துப் போயின தாயை வரவுகாணா, கழுதுறங் கும்புறங்
காட்டிலாடும் அப்ப னிடந்திரு ஆலங்காடே. (5)

பட்டடி நெட்டுகிர்ப் பாறுகாற்பேய் பருந்தொடு கூகை பகண்டையாந்தை, குட்டி யிடமுட்டை கூகைபேய்கள் குறு நரி சென்றணங் காடுகாட்டிற், பிட்டடித் துப்புறங் காட்டி விட்ட பிணத்தினைப் பேரப் புரட்டியாங்கே, அட்டமே பாய நின் றாடுமெங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே. (6)

சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய் சூழ்ந்து துணங்கையிட் டோடியாடித், தழலு ளெரியும் பிணத்தை வாங்கித் தான்றடி தின்றணங் காடுகாட்டிற், கழலொலி யோசைச் சிலம்பொலிப்பக் காலுயர் வட்டணை யிட்டுநட்டம், அழலுமிழ்ந் தோரி கதிக்கவாடும் அப்ப னிடந்திரு ஆலங் காடே. (7)

நாடு நகருந் திரிந்துசென்று நன்னெறி நாடி நயந்த வரை, மூடி முதுபிணத் திட்டமாடே முன்னிய பேய்க்கணஞ் சூழச்சூழக், காடுங் கடலு மலையுமண்ணும் விண்ணுஞ் சுழல அனல்கையேந்தி, ஆடும் அரவப் புயங்கனெங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே. (8)

துத்தங் கைக்கிள்ளை விளரிதார முழையிளி யோசை பண் கெழுமப்பாடிச், சச்சரி கொக்கரை தக்கையோடு தகு ணிதந் துந்துபி தாளம்வீணை, மத்தளங் கரடிகை வன்கை மென்தோல் தமருகங் குடமுழா மொந்தை வாசித், தத்தனை விரவினோ டாடுமெங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே. (9)

புந்தி கலங்கி மதிமயங்கி இறந்தவ ரைப்புறங் காட்டி லிட்டுச், சந்தியில் வைத்துக் கடமைசெய்து தக்கவ ரிட்ட செந் தீவிளக்கா, முந்தி யமரர் முழவினோசை திசைகது வச் சிலம் பார்க்கஆர்க்க, அந்தியின் மாநட மாடுமெங்கள் அப்ப னிடந்திரு ஆலங்காடே. (10)

ஒப்பினை யில்லவன் பேய்கள்கூடி யொன்றினை யொன் றடித் தொக்கலித்துப், பப்பினை யிட்டுப் பகண்டைபாடப் பாடிருந் தந்நரி யாழமைப்ப, அப்பனை யணிதிரு ஆலங்காட் டுள் அடிகளைச் செடிதலைக் காரைக்காற்பேய், செப்பிய செந் தமிழ் பத்தும்வல்லார் சிவகதி சேர்ந்தின்ப மெய்துவாரே.

திருச்சிற்றம்பலம்

# மூத்த திருப்பதிகம்

## உ. பண் - இந்தளம்

*திருச்சிற்றம்பலம்*

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னாடுமே. (1)

நிணந்தா னுருகி நிலந்தா னனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை யெறிந்து சூழு நோக்கிச் சுடலை நவிழ்த்தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கண் மாந்திக் களித்த மனத்தவாய்
அணங்கு காட்டில் அனல்கை யேந்தி அழக னாடுமே. (2)

புட்கள் பொதுத்த புலால்வெண் தலையைப் புறமே நரிகவ்வ
அட்டென் றழைப்ப ஆந்தை வீச அருகே சிறுகூகை
உட்க விழிக்க வூமன் வெருட்ட ஓரி கதித்தெங்கும்
பிட்க நட்டம் பேணு மிறைவன் பெயரும் பெருங்காடே. (3)

சேத்த பிணத்தைத் தெளியா தொருபேய் சென்று விரல்சுட்டிக், கத்தி யுறுமிக் கனல்விட் டெறிந்து கடக்கப் பாய்ந்துபோய்ப், பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பலபே யிரிநதோடப், பிதத வேடங் கொண்டு நட்டம் பெருமா னாடுமே. (4)

முள்ளி தீர்ந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளி யுழைமான் தோலொன் றுடுத்துப் புலித்தோல் பியற்
பள்ளி யிடமு மதுவே யாகப் பரம னாடுமே. [கிட்டுப்

வாளைக் கிளர வளைவாள் எயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும் விழுங்கி முரலு முதுகாட்டில் [ய்
தாளிப் பனையின் இலைபோல் மயிர்க்கட் டழல்வா யழல்கட்பே
கூளிக் கணங்கள் குழலோ டியம்பக் குழக னாடுமே. (6)

நோந்திக் கிடந்த சுடலை தடவி நுகரும் புழுக்கின்றிச்
சிந்தித் திருந்தங் குறங்குஞ் சிறுபேய் சிரமப் படுகாட்டின்
முந்தி யமரர் முழவி னோசை முறைமை வழுவாமே
அந்தி நிருத்தம் அனல்கை யேந்தி அழக னாடுமே. (7)

வேய்க ளோங்கி வெண்முத் துதிர வெடிகொள் சுடலையுள்
ஓயு முருவி லுலறு கூந்தல் அலறு பகுவாய
பேய்கள் கூடிப் பிணங்கண் மாந்தி யணங்கும் பெருங்காட்டின்
மாய னாட மலையான் மகளும் மருண்டு நோக்குமே. (8)

கடுவன் உகளுங் கழைசூழ் பொதும்பிற் கழுதும் பேயுமாய்
இடுவெண் தலையும் ஈமப் புகையும் எழுந்த பெருங்காட்டிற்
கொடுவெண் மழுவம் பிறையுந் ததும்பக் கொள்ளென் றிசைபாடப்
படுவெண் துடியும் பறையுங் கறங்கப் பரம னாடுமே. (9)

குண்டை வயிற்றுக் குறிய சிறிய நெடிய பிறங்கற்பேய்
இண்டு படர்ந்த இருள்சூழ் மயானத் தெரிவா யெயிற்றுப்பேய்
கொண்டு குழவி தடவி வெருட்டிக் கொள்ளென் றிசைபாட
மிண்டி மிளிர்ந்த சடைகள் தாழ விமல னாடுமே. (10)

சூடு மதியஞ் சடைமே லுடையார் சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையி லார்த்த அடிக ளருளாலே
காடு மலிந்த கனல்வா யெயிற்றுக் காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி யாடப் பாவ நாசமே. (11)

திருச்சிற்றம்பலம்